59001.

Q,23;332WD788
N34
59001

B

உ

ஏ ம் தத் ஸத்.

# பரம்பக்குடி யம்.

# ஸ்ரீ சந்திரசேகர ஸ்வ

# ஸ்தல புராணம்.


திருப்பாம்பைமாநகர்

N. முத்துசாமி அய்யர் குமாரர்

தமிழ் வித்வான்

அகஸ்திய கவிராயரவர்களால்


இயற்றப்பட்டு

பரமக்குடி ஸ்ரீ சுந்தரராஜப்பெருமாள் தேவஸ்தானம்

பிரஹ்மஸ்ரீ டிரஸ்டிகளால்

அங்கீகரிக்கப்பெற்று


Accn. No: 59001

பக்கம்: 112



மதுரை, ஹரிஸமய திவாகரம் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1931



*Copy Right Reserved.*

B

உ

ஓம் தத் ஸத்.

# ஸ்ரீ சங்கர விஜயம்.

## சிறப்புப் பாயிரம்.

### நேரிசை ஆசிரியப்பா.

பராபர மாகிய பரப்பிரஹ் மத்தில்
அருளுடை விட்ணு வாதியிற் ஜனித்தார்
அன்னவ னுந்தி வாலையந் தன்னி
லகிலமுண் டாக்க வயனும் பிறந்தான்
அவ்வயன் மக்க ளருளின் மிகுந்தோர்
ஜனகர் ஜனந்தனர் ஜனாதன ரோடு
ஜனத் குமார னென்றுரை நால்வ
ரிவர்கள் பொருட்டா லிவ்வுல கிற்கு
வாதிய குரவனா யவதரித் தோதிய
சுத்தப் பிரஹ்ம சொரூப வஸ்துவே
கல்லா லடியிற் கருணைவா ரிதியாய்த்
தோன்றி நின்று சொன்னமா வழியா
லான்றநால் வர்க்கு மளவிலாக் காலமா
யகண்டநால் வேத வர்த்தம் புகட்டி
சார்மஹா வாக்கிய சாதனத் தோடு
சீர்பெறும் பிரஹ்மமே ஜீவாத் மாவெனும்
பேர்பெறும் பிரஹ்மப் பெற்றியை யருளுமா
வத்தனுஞ் சிவமய தக்ஷிணா மூர்த்தியே
சிற்சுக பிரஹ்ம வியப்புடை முதற்குரு
அவனடி போற்று மருள்ஜனத் குமரன்
அதன்பின் வந்த வளவிலா வினைப்

565
294.535

13 MAY

112p

பகவத் பத்தியாற் பாடித் துதிக்கு
மிகபரத் தோர்க ளெஞ்ஞான்று போற்ற
நணியுறை யுதவும் நாரதப் பெயரோன்
பின்னவ ருருந் தன்மய வியாதன்
புராதன வேதம் பூவிற் பரவுற
மாலால் மயங்கும் மனிதர்க ளெல்லாம்
சாலவே யொருகச் சார்ந்தநால் வேத
மானதன் வலியா லாற்றிய மாதவன்
அவனின் புதல்வ னாகிய சுகனும்
அவனு லருளிய வக்கௌட பாதரைக்
கோவிந் தாசான் குருவாய்க் கொண்டனன்
மக்க ளுடைய மாவலி யிருட்டைச்
சிக்கறப் போக்கச் சிவபரஞ் சுடரே
இக்குற் றனனிக் கலியின் மீமிசை
கேரள தேசக் காலடி யதனில்
மாதவ வேதியர் வளமிகு குலத்திற்
சிவகுரு தந்தை செல்வக் கற்புடை
யுவமை யிலாத வுத்தமப் புண்ணிய
வாரி யாம்பை யம்மையின் வயிற்றிற்
சீருடன் ஜனித்துச் செகத்தவர் புகழ
வாரிய னாகி யளவிலா வடிவொடு
பாரிற் பிறந்தான் பரசிவ சங்கரன்
சீரிலாக் கலிக்குச் செல்வ முதற்குரு
அன்னவன் பின்னு லருளினல் வந்து
சாரதா பீடத் தவர்க்குத் தலைவனாய்
சுருதியி னுரையைத் தோற்றுவித் தருளிய
பூசுரர் போற்றும் புகழ்மறைச் சுரேஸ்வரன்
...னவன் மரபி லன்புட னுதித்த
நல்லமா மதியென ஞானத்தை யூட்டுஞ
சிந்தைமா வேதியர் சீர்பெறு குலத்தினில்
தந்தையின் தந்தையுந் தாதையு மாயினன்



கொப்பமாந் திருநகர் கொள்சிவா னந்தனும்
கோடக மாநலூர் குருவாஞ் சுந்தரன்
ஏடக வழியா லிவரிடங் கற்று
சுத்தப் பிரஹ்ம சொரூப மாகிய
சத்திய நோக்கமுஞ் சங்கரன் பூஜையும்
சாத்திரம் யாவையுஞ் சங்கை யிலாது
வைத்து வளர்க்கும் வரம்பறு குணத்தோன்
அத்தனு கியமுத் தாநந்தப் பெயரோன்
அவனிடங் கேட்கு மடிமையிற் சிறந்தவன்
எண்டிசை போற்று மண்டலப் பாண்டியிற்
பாரிடை வியப்புறும் பட்டீ ரதனில்
தொண்ட மண்டலத் தொல்வே ளாளரில்
எண்டோ ளவனிடை யேறிய பத்தியும்
எண்டிசை யாவரு மினிமையி னேற்கும்
ஞால நூல்களும் ஞானமாக் கல்வியும்
மோனத் தோடு மூற்றிலு மறிந்துரை
சார்மிகு புலமைச் சாமிநா தற்கு
ஈஸ னருளால் மாசிற் புதல்வனாய்
காசினி யதனிற் காணு ஞானியர்
தேசினில் மதிக்குஞ் செல்வக் குமரன்
ஆசிலாப் புலமை யற்பப் புத்தர்தம்
மாசுடை மதத்தை மாற்றவந் துதவிய
தேசுடைச் சங்கரன் செல்வ வாலயம்
மாசில் பூஜையால் மன்னும் படிசெய
பராவர மறியவிப் பாரினி லியற்றி
விராவறு வழியில் விருப்புட னேற்றுச்
சொன்ன வாரியற்றத் தோன்றி நிற்போன்
துன்னுஞ் சாமச் சுருதியின் முடிபாற்
[illegible]
அன்னவ னுமுனம் அருள்பத்ம பாதர்கள்
பின்னல்தீர் மார்க்கமா யியற்றிய விஜயத்தை

மன்னுமா வழியினில் வசனமாய்ச் செய்த
ஸின்மய வடிவ ஷண்முகத் தோனே
ஆதி மனுவி னருமைப் புதல்வனே
சோதி மயமாஞ் சூரிய னோடு
ஏதுமார்க் கத்தா லெழுதாஞ் சுழன்று
சத்த தீவையுந் தானுண் டாக்கி
அத்திர வலியாற் கர்த்தனை யாண்டோன்
அத்தனை மவனுடை யருள்வலிப் புதல்வரிற்
றாமிகு புதல்வன் றாயெனப் பார்ப்போன்
பரத னாகியிப் பாரினை யாளுமவ்
வரசநற் பெயராற் றாமுயர் கண்டமாம்
பராவர மடையவிப் பாரிற் சிறந்தது
மாப்புகழ் மிகுந்த மாசிலாத் தேவர்கள்
மாண்புடன் பிறக்க மாதவம் பார்ப்பது
இனைய வாயவிவ் வேதுவாம் பூமியி
லினையபுண் ணியத்தா லருமையாற் பிறந்தயாம்
கலியின் முதற்குரு காலடி யதனிற்
சாலவே புகாமற் றப்புவோ மாகில்
போலியா மிவ்வுடற் பொன்றுந் தருணம்
மால்பெறு மயக்கினில் மயங்கித் தபித்து
ஈறுள வாறே யிறந்துமே பிறக்க
நேரும் நேரும் நேரும் நேருமே.



இந்நூலாசிரியரின் பிரதம சிஷ்யரான

## க. குமாரசாமி முதலியார் இயற்றியது.

அகவல்.

அலைகடல் சூழுங் காசினி யதனி
லரும்புகழ் பட்டு ராகிய பூவில்
மாதவத் தாலே வந்தவ தரித்துச்
சங்கர குருவின் தாழிணைப் பணிந்து
வேதவாக் கியத்தால் வித்வமா மணியாய்
உண்முக நோக்கா லுயர்சிதா நந்தமாம்
நித்திய வஸ்துவை நிச்சயித் தறிந்து
முத்தியை விரும்பு முமுக்ஷுக் களுக்கு
வத்துவின் நிலையை வரம்புடன் காட்டி
சங்கர பகவத் பாததே சிகற்கு
எங்களைப் போன்று யாவரும் போற்ற
மங்கள வாலயம் வகுத்திட முயற்சிசெய்
சத்துவ குணத்தொடு ஷண்முகப் பிரஹ்மமாம்
வித்துவான் றன்முன் வேதபா ஷியத்தால்
வித்தையைக் கற்க வேண்டியிவ் வுலகம்
மித்தையென் றறிந்த விவேகவை ராக்கிய
முற்றிடுஞ் சிஷ்யரில் முதன்மைய தாகக்
கற்றிடுங் குமார சாமியாங் கருணைப்
பத்தனும் பம்பைச் சாமியு மாநெறி
சத்துவ குணத்துச் சச்சிதா நந்தனும்
உத்தமன் மாபுக ளோங்கிய பக்திச்
சித்தனும் வீரப்ப செட்டியார் நால்வர்
மாணாக்க ராக வந்தனர் கலியில்
பிரஹ்மா காரம் பிரங்கிய சங்கரர்
திருவடி போற்றுநற் சிஷ்யரும் வாழ்கவே.

ஓம் தத் ஸத்.

# ஸ்ரீ சங்கர விஜயம்.

## ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளின் அஷ்டோத்திர ஸத நாமாவலி.

ஓம் ஸங்காசார்யவர்யாய நம:
... பிரஹ்மானந்தப்ரதாயஹாய நம:
... அஞ்ஞானதிமிராதித்யாய நம:
... ஸுஞ்ஞாணம்புதிஸந்திரமஸே நம:
... வர்ணாஸ்ரமப்ரதிஷ்டாத்ரே நம:
... முக்திப்ரதாயஹாய நம:
... சிஷ்யோபதேஸநிரதாய நம:
... பக்தாபிஷ்டப்ரதாயஹாய நம:
... ஸூக்ஷ்மதத்வரஹஸ்யஞ்ஞாய நம:
... கார்யாகார்யப்ரபோதஹாய நம:
... ஞானமுத்ராஞ்சிதகராய நம:
12 ... சிஷ்யஹ்ருத்தாபஹாரஹாய நம:
... பாரிவ்ராஜகாஸ்ரமோத்ரத்ரே நம:
... ஸர்வதந்திரஸ்வதந்த்ரதியே நம:
... அத்வைதஸ்தாபனாச்சார்யாய நம:
... சாக்ஷாத்ஸங்கரரூபப்ருதே நம:
... ஷண்மதஸ்தாபனாசார்யாய நம:
... த்ரயீமார்க்கப்ரகாஸஹாய நம:
... வேதவேதாந்ததத்துவக்ஞாய நம:
... துர்வாதிமதகண்டனாய நம:
... வைராக்யநிரதாய நம:
... ஸாந்தாய நம:



ஓம் ஸம்ஸாரார்ணவதாரஹாய நம:
24 ... ப்ரஸன்னவதனாம்போஜாய நம:
... பரமார்த்தப்ரகாஸஹாய நம:
... புராணஸ்மிருதிஸாரஞ்ஞாய நம:
... நித்யத்ருப்தாய நம;
... மஹதே நம:
... மூநயே நம:
... நித்யானந்தாய நம:
... நிராதங்ஹாய நம:
... நிஸ்ஸங்காய நம:
... நிர்மலாத்மஹாய நம;
... நிர்மமாய நம:
... நிரஹங்ஹாராய நம:
36 ... விஸ்வந்த்யபதாம்புஜாய நம:
... ஸத்யவ்ரதாய நம:
... ஸத்பாவாய நம:
... ஸங்கியாதீதகுணோஜ்வலாய நம:
... அநஹாய நம:
... ஸாரஹ்ருதயாய நம:
... ஸுதியே நம:
... ஸாரஸ்வதப்ரதாய நம:
... ஸத்யாத்மனே நம:
... புண்யஸீலாயநம:
... ஸாங்கியயோஹவிசக்ஷணாய நம:
... தபோராஜயே நம:
48 ... மஹாதேஜஸே நம:
... குணத்ரயவிபாகவிதே நம:
... கலிஹ்னாய நம:
... காலகர்மஞ்ஞாய நம:
... தமோகுணநிவாரஹாய நம:
... பகவதே நம:
... பாரதிக்ஷேத்ரே நம;

உ

ஓம் ஸாரதாக்வானபண்டிதாய நம:
... தர்மாதர்மவிபாவஞ்ஞாய நம:
... லக்ஷ்யாலக்ஷ்யபேதப்ரதர்ஸஹாய நம:
... நாதபிந்துகலாபிஞ்ஞாய நம:
... யோஹிஹ்ருத்பத்மபாஸ்கராய நம:
60 ... அதீந்திரியஞ்ஞானநிதயே நம:
... நித்யாநித்யவிவேகவதே நம:
... ஸிதாகந்தாய நம:
... ஸிந்மயாத்மனே நம:
... பரகாயப்ரவேஸஹ்ருதே நம:
... அமாநுஷஸரித்ராட்யாய நம:
... க்ஷேமதாயினே நம:
... க்ஷமாஹாராய நம:
... பவ்யாய நம:
... பத்ரப்ரதாய நம:
... பூரிமஹிம்னே நம:
... விஸ்வரஞ்சஹாய நம:
72 ... ஸ்வப்ரகாஸாய நம:
... ஸதாதாராய நம:
... விஸ்வபந்தவே நம:
... ஸுபோதயாய நம:
... விஸாலகீர்த்தயே நம:
... வாகீஸாய நம:
... ஸர்வலோக ஹிதோத்ஸுகாய நம:
... கைலாஸயாத்ராஸம்ப்ராப்தசந்த்ரமௌளீச்வர
பூஜஹாய நம:
...காஞ்ச்யாம் ஸ்ரீ சக்ரராஜாக்யயந்திரஸ்தாபனதீக்ஷிதாயநம:
... ஸக்ராத்மஹதாடங்கதாஷிதாம்பாமனோரதாய நம:
... பிரஹ்மஸூத்ரோபநிஷத்பாஷ்யாதிக்ரந்தகல்பஹாய
நம:
... ஸதுர்திக்ஸதுராம்நாயப்ரதிஷ்டாத்ரே நம:
84 ... மஹாமதயே நம:



F

ஓம் த்விஸப்ததிமதோச்சேத்ரே நம:
... ஸர்வதிக்விஜயப்ரபவே நம:
... காஷாயவஸனோபேதாய நம:
... பஸ்மோத்தூளிதவிக்ரஹாய நம:
... ஞானத்மகைகதண்டாய நம:
... கமண்டலுலஸத்கராய நம:
... குருபூமண்டலாசார்யாய நம:
... பகவத்பாதஸம்ஞஹாய நம:
... வியாஸஸந்தர்ஸனப்ரீதாய நம:
... ரிஷ்யஸிருங்கபுரேச்வராய நம:
... ஸௌந்தர்யலஹரீமுக்யபஹுஸ்தோத்ரவிதாய நம:
96 ... ஸதுஷ்ஷஷ்டிகளாபிஞ்ஞாய நம:
... பிரஹ்மராக்ஷஸதோஷஹாய நம:
... ஸ்ரீமந்மண்டனமிஸ்ராஹ்வஸ்வயம்புஜயஸந்நுதாய நம:
... த்ரோடகாசார்யஸம்பூஜ்யாய நம:
... பத்மபாதார்ச்சிதாங்க்ஹ்ரிஹாய நம:
... ஹஸ்தாமலகயோகீந்திரபிரஹ்மஞானப்ரதாயஹாய
நம:
... ஸுரேஸ்வராக்யஸச்சிஷ்யஸந்யாஸாஸ்ரமதாயஹாயநம:
... நிருஸிம்ஹபக்தஸத்ரத்நகர்ப்பஹேரம்பபூஜஹாய நம:
... வியாக்யானஸிம்ஹாஸனாதீஸாய நம:
... ஜகத்பூஜ்யாய நம:
... ஜகத்குரவே நம:
... ஸ்ரீமத் ஸங்கராசார்யஸர்வலோககுரவே நம:
108 ... ஸ்ரீபராய நம:

ஓம் நாநாவித மந்தர புஷ்பாணி சமர்ப்பயாமி.

ஸ்ரீ சங்கராசார்ய அஷ்டோத்ர ஸத நாமாவலி
ஸம்பூர்ணம்.

உ

ஓம் தத் ஸத்.

ஓம் முத்தாநந்தாயகுரவே நம:

# ஸ்ரீ சங்கர விஜயம்

## ஜகத்குரு
## ஆதி சங்கராசாரியர் ஸ்தோத்திரம்.

அங்கையி நெல்லி போல வமலமாந் தத்து வத்தை
இங்குறை மாந்தர் யாரு மெளிதினி லுணரு மாறு
கங்கையும் பிறையுஞ் சூடுங் கண்ணுத லிறையா மெங்கண்
சங்கர பகவத் பாதன் றாள்மலர் தலைமேற் கொள்வாம். (1)

அங்கண்மா ஞால மெங்கு மறிவுளோ ராகி மேவச்
செங்கண்மால் பிர்ம னாதித் தேவர்கள் யாவ ரோடு
மெங்கண்மா நிலத்தர் போற்ற வேற்றகா லடியில் வந்த
நங்கண்மா ஞான வாசான் நாண்மலர்ப் பதமே சார்வாம். (2)

வேதவித் தகரில் வந்த வியன்சிவ குருவின் பால்நேர்
மாதவக் கர்ப்பி லாழும் வழுவிலா வாரி யாம்பைத்
தேசுடை யுதரத் துற்றுச் சிவபிரா னாகித் தோன்றிப்
பூசுரப் புலவர் போற்றும் புகழ்பதம் பொருந்தி வாழ்வாம். (3)

மூவிரண் டுடனே யாரும் மூலமாந் தத்து வத்தை
மாவிரண் டொன்று சேரும் வயதினி லுபதே சித்தான்
ஐந்துமூன் றுடைய வாண்டி லருளெனுந் துறவை யுற்றான்
இந்துடன் மூன்றாய் நேறு மெளிலுருச் சங்க ராசான். (4)

பரம்பரை யுய்யு வண்ணம் பராபரப் பிரஹ்ம மாகும்
வரம்பரை கோவிந் தாசான் மாணவ னாகித் தோன்றி
அரும்பத வுரையால் மேவு மநேகமா நூல்கள் செய்த
பெரும்பதச் சங்க ராசான் பேற்றினைப் பெற்று வாழ்வாம். (5)



அஞ்ஞான விருளை வீட்டி வருள்ஞானக் கதிரைக் காட்டுஞ்
சுஞ்ஞானச் சுருதி நாட்டைச் சுபாஷிய வழியாற் காட்டி
மெஞ்ஞானச் சொரூப வீட்டை மேவியே யடைய வூட்டுஞ்
சஞ்ஞானச் சங்க ராசான் சரணிணைத் தரிப்போம் யாமே. (6)

நாலுட னாலென் றோரும் நலனுடை வயதில் மிக்க
நாலுட னறுமூன் றான நலமிகு வேதப் புராணச்
சாகைக ளுடனே செய்யுஞ் சமர்த்துடை வியாத னாரை
சீடர்க ளோடும் போற்றிச் சின்மய வாசி பெற்றான். (7)

பாதநற் பெயரார் போற்றும் பாருடைக் கண்டத் தின்கண்
புறவலர் போற்றி செய்யப் புகுந்துபூ வலமாய்ச் சுற்றிச்
சலனமு மிலாது செய்தான் சாந்தமா மார்க்கந் தன்னால்
வலகிலா வருளின் மிக்க வருளிறைச் சங்க ராசான். (8)

புத்தர்க ளாதி யாகப் புரமுள மதத்தை யெல்லா
மத்திர வேது போல வருள்ஞான வலியாற் போக்கி
இத்திரப் பிரஹ்ம மாகு மியல்புடை யாத்மாத் தன்னை
அத்தமா மலக மென்ன வருளினான் சங்க ராசான். (9)

அறுபத்து நான்கென் றோது மருமையாஞ் சர்வ பீடத்
துருவத்தாற் றோன்றுந் தெய்வத் துணர்வுடைப் புலவர் தம்மை
மர்மத்தா லுதிக்கும் வாக்கால் மாண்புடன் ஜெயித்து நாளுஞ்
சர்வத்தா வடிவாய் நிற்குஞ் சங்கரன் பதமே சார்வாம். (10)

அஸ்தமா மலக ராதி யருளுமாச் சிஷ்யர் தம்மை
யஸ்தத்தா லபிடே கித்து வந்நான்கு மடத்தி லேற்றி
வகிலையு மயனும் போற்ற வணிமாதி மார்க்கத் தின்கண்
கயிலையங் கிரிமேற் சென்றான் கருணைமாச் சங்க ராசான். (11)

இந்தமாத் தோத்தி ரத்தை யாவர்கள் போற்றி செய்யின்
அந்தமு நடுவு மில்லா வநாதியாம் வத்து வாகிச்
சந்தத மோன நிட்டை சாலவே யடைந்து ஜன்மத்
தொந்தமு மிலாத தான சொரூபமா முத்தி சேர்வர். (12)

உ

ஓம் தத்ஸத்:

ஸ்ரீலஸ்ரீ ஜகத்குரவே நம:

ஸ்ரீமுத்தாநந்தாயகுரவே நம:

# ஸ்ரீ சங்கர விஜயம்.

## மங்கலாசரணம்.

### வெண்பா.

*சச்சிதா நந்தத் தனிவிபுவாந் தத்துவத்தை*
*இச்சகத்தி லுள்ளோர்க ளெஞ்ஞான்றும்—நச்சியுற*
*அத்திமுகன் றுணைவந்தா னருள்வடிவச் சங்கரனை*
*நத்துவோ மன்னவனை நாம்.*

லக்ஷ்மி சமேத நாராயணரானவர் தேவேந்திரனை ஆதியாக வுடைய எல்லாத் தேவர்களையும் துக்கத்தை விளைவிக்கும் அசுரர்களை மோகிப்பித்து, சுரர்களை ரக்ஷிக்குமாறு, பாகவத புராணம் முதலாவது இரண்டாவது ஸ்கந்தங்களில் ஸ்ரீவியாசபகவான் கூறியபடி கலியுக ஆரம்பத்தில் மத்திய கயாப்பிரதேசத்தின்கண் அஜினர் என்பவருக்குப் புத்திரராகி "புத்தராக" அவதாரஞ் செய்தார்.

அதன் பின் அப் புத்தரானவர் சரீரமே ஆத்மா, அருந்தல் பொருந்தல் வடிவபோகமே மோக்ஷம் என்ற மார்க்கத்தை இப்பரத கண்டத்திலுள்ள யாவர்களுக்கும் போதித்ததுடன், அசுரர்களுக்கும் உபதேசஞ் செய்துமயக்கி அம்மார்க்கத்தில் திருப்பி, அசுரர்களால் ஏனைய யாவருக்குந் தொந்திரவில்லாதிருக்கும்படி செய்துவைத்தனர்.

அத்தகைய பிரபாவம் வாய்ந்த ஆதி பௌத்தருக்கு எல்லாப் பொருளும் பாழ் என வாதிக்கும் மாத்யமிகன், கணந்தோறும் தோன்றியழியும் புத்தியின் அறிவே ஆத்மாவெனத் தற்கிக்கும் யோகாசாரன், ஜகத்தெல்லாம் புறம் அகம் என்ற இருவகை அணுவின் சமுதாயத்தாலுண்டாகின்றன வென்பதைப் போதிக்குஞ்

சௌத்திராந்திகன், வைபாஷிகன் என்னும் நான்கு சிஷ்யர்களிருந்தார்கள். அந்நால்வரும், யாவரும் கேட்ட மாத்திரத்தே கிரகிக்கத் தக்கதான ஸ்தூல வடிவப் போலியான தங்கள் மதத்தை எங்குஞ் சென்று வெளியிட்டதிலிருந்து, பரதகண்டத்துள்ள எல்லா மனிதர்களும் ஸநாதனமாகிய வேதபகவதியாற் கூறப்படும் "கர்மம், பக்தி, ஞானம்" என்ற மார்க்கங்களினின்றும் முற்றிலும் விலகினவர்களாய், பௌத்தக்கொள்கையின் அநுஷ்டானத்தில் தற்பரரானார்கள்.

இத்தகைய பாஷண்டக் கொள்கையால், யாகாதி கர்மங்களின் பலனை இழந்த தேவர்கள் இந்திரனுடன் பிரஹ்மாவை யடைந்து முறையிட்டார்கள். அதைச் செவியுற்ற சிருஷ்டிகர்த்தாவானவர் தற்கால நிலைமையை ஞானதிருஷ்டியா லுணர்ந்து, இப்போதுண்டா யிருக்கும் ஜீவர்களின் மயக்கப் புத்தியின் உணர்வை நிவர்த்திக்க வேண்டுமானால் பரமசிவத்தை யல்லது ஏனையோர்களால் இயலாதெனக்கூறி, இந்திராதிகளை யழைத்துக்கொண்டு கைலாசஞ் சென்று சிவபிரான் சந்நிதியை யடைந்து வேதவிதிவத்தாகிய நமஸ்கார ஸ்தோத்திரங்களைச் செய்து கூறுவாராயினர்.

ஏ ஸ்வாமி! நியாய வழியிலுள்ள சாதுக்களை ரக்ஷிப்பதற்காகவும், பிரபல துஷ்டர்களை விநாசஞ் செய்வதற்காகவும், ஸநாதனமாயுள்ள வர்ணாசிரம தர்மங்களாய கர்மம் பக்தி ஞானமென்னும் மார்க்கங்களை உலகத்தில் ஸ்தாபிப்பதற்காகவும், யுகங்கள் தோறும் சந்தர்ப்பத்துக்குத் தக்கவாறு தங்களுடைய பரமார்த்த சொரூபமே, வசத்துள்ள மாயையால் சரீரத்தை எடுத்துக்கொண்டு ரக்ஷிப்பதாக வேதத்திற் கூறப்படுகின்றன.

இவ்வாறாக, தற்போது ஆதி பௌத்தரின் பிரதம சிஷ்யர்களின் போலி மார்க்கத்தால், மண்ணுலகத்தவர்கள் மூலமாகக் கிடைக்கும் அவிர்ப்பாகங்களை யிழந்தவர்களாக இருக்கின்றோம். இதைத்தவிர பரதகண்டத்திலுள்ள ஜீவர்கள்; பிராணிகளுக்குத் துக்கத்தை விளைப்பதாலுண்டாய் மனதினின்றுதிக்கும் பாபம், பகிர்முகப் பொருளைநாடி இச்சை வசத்தால் சதா ஏற்படும் புத்தியின் சலனவடிவ விக்ஷேபம், தனது எதார்த்த சொரூபமாய பிரஹ்ம வடிவ ஆத்மாவை யறியாத



அஞ்ஞானம் என்பவற்றால் பீடிக்கப்பட்டவர்களா யிருக்கின்றார்கள். இதனால் யாவரும் தர்மார்த்த காம மோக்ஷமென்ற புருஷார்த்தங்களை இழந்து, ஜனன மரணாதி சம்சாரத்திற் சுழலுகின்றனர். ஆகலால் வேதத்திற்குப்புறம்பான புத்தர்மதத்தை அறத்தொலைத்து, மோக்ஷத்தின் மார்க்கங்களை ஸ்தாபித்தருளல் வேண்டுமென இரஞ்சினார்கள்.

இவ்வாறு பிரஹ்மாதி தேவர்களின் ஸ்தோத்திரத்தைச் செவியுற்ற, காளகண்ட திரிநேத்திர பார்பதி சமேத பரமேஸ்வரர், சந்தோஷமுடையவராய்ப் பெருங்கருணையோடும் பேசுவாராயினர்.

ஏ! பிரஹ்மாதி தேவர்களே! நாம் பூவுலகின்கண் அவதாரஞ் செய்து. புத்தர் மதத்தை நாசஞ்செய்து, பிரஹ்மமாகிய நமதுஎதார்த்த சொரூபமே ஜீவர்களின் அதிஷ்டான ஸ்தானத்திலுள்ள ஆத்மாவாம் என்பதனை யறிந்து, அநுபவமாயடைய வொட்டாது மறைத்துள்ள அஞ்ஞானத்தை நாசஞ்செய்யப்போகின்றோம். அதற்குமுன் நீவிரனைவருஞ்சென்று பூவுலகில் மானுடராக பிறப்பீர்களாகவெனக் கட்டளையிட்டனுப்பினர்.

அதன்பின், பரமேஸ்வரரானவர் சுப்பிரஹ்மண்யரைப் பார்த்து, "இதற்குமுன் நம்மாலனுப்பப்பட்ட விஷ்ணு, ஆதிசேஷன் இருவரும் சங்கர்ஷணர், பதஞ்சலி என்னும் முனிவராய் பிறந்து, வேதத்திற் கூறப்படும் சகுணவடிவ தேவதா வுபாசனையையும், யோக காண்டத்தினையும் ஸ்தாபிப்பாராயினர். இப்போது, நீ பூமியில் மனுஷ்யாவதாரஞ் செய்து நம்மிடம் பேரன்புள்ள ஜைமினியாற் கூறப்படும் கர்ம மார்க்கத்தைப் போதித்து, பாஷண்ட மார்க்கத்தைக் கண்டித்து, வேதோக்தமான கர்ம காண்டத்தை பரவச்செய்யவேண்டும்" என ஆக்ஞாபித்தனர்.

## சுப்பிரஹ்மண்யர், பிரஹ்மா, இந்திரன் மண்ணுலகில் அவதரித்தல்.

பரமசிவத்தின் கட்டளையை ஏற்ற சுப்பிரஹ்மண்யரானவர், குமாரிளபட்ட பாதாசாரியராகவும், பிரஹ்மாவானவர் விஸ்வரூப மண்டனபட்டா சாரியராகவும், தேவேந்திரனானவன் சுதன்மன் என்னும் அரசனாகவும் பிறந்தார்கள்.

சுப்பிரஹ்மண்யரின் அவதாரமாகிய குமாரிள பட்டரானவர் புத்தர் மதத்தை யொழிக்கும் பொருட்டு, புத்த குருவிடம் கபடமான சிஷ்ய வடிவந்தாங்கி, பௌத்தமத சாஸ்திரங்களைக் கேட்டுக் கொண்டிருந்தனர். ஒருநாள் குருவானவர் வேதத்தை தூஷித்ததைக் கேட்டுச் சகிக்கலாற்றாது குமாரிளபட்டர் அழத்தொடங்கினர். அதைக் கண்ணுற்ற அக்குரு இச்சிஷ்யனானவன் புறமதவாதியனெனக் கோபங் கொண்டவராய், அவரிருந்த ஐந்தாவதடுக்கு உறியினின்றும் தலைகீழாகத் தள்ளிவிட்டனர். அத்தருவாயில் குமாரிள பட்டர் வேதம் உண்மையேல் காக்கக்கடவது எனச் சொல்லிக் கொண்டு கீழே விழுந்தனர். அதனால் சரீரத்துக்கு யாதொரு கஷ்டமுமின்றி எழுந்தனர். ஆயினும் வேதம் உண்மையேல் என்று சந்தேகப்பட்டதனால் ஒரு கண் பழுதாகிவிட்டது.

## குமாரிளபட்டர் புத்தர்களுடன் வாதிடல்

அதன் பின் குமாரிளபட்டரானவர் தன் சிஷ்யரான மண்டன மிசிரருடனும், பரிவாரங்களுடனும், திக்குவிஜயத்தின் பொருட்டு சுதன்மராஜன் சபைக்குச் சென்று, அவனுலிடப்பெற்ற ஆசனத்திருந்தார்கள். அத்தருவாயில் சமீபத்துள்ள மரத்தினின்றுண்டாம் குயிலின் சப்தத்தைக் கேட்டுப் புறமொழியாக வைத்துக்கொண்ட குமாரிள பட்டரானவர், அரசனை நோக்கி, ஓய் குயிற்பிள்ளாய்! "வேதத்திற்குப் புறம்பான காக்கையைப் போன்ற கெட்ட சப்தத்தை வசனிக்கும் இப்புத்தர் கூட்டமில்லாவிடின், நீ சிறந்தவனாயன்றோ" என்று கூறினர். இதைக்கேட்ட புத்தர்கள் கோபங் கொண்டு, தங்கள் மதசம்பிரதாயங்களைக் கூறி வாதிட்டார்கள். அப்போது குமாரிள பட்டர் தக்க பிரமாண யுக்தி அநுபவம் எனப் பெயர் பெறும் வாளால் அறச்சேதித்து மேலும் மேலும் வெகுளியுண்டாகுமாறு தமது ப்ரபாவத்தைக் கூறினர்.

இவ்விரு தரப்பாரின் வாதத்தை கேள்வியுற்ற சுதன்ம அரசன், நீங்கள் ஒவ்வொருவரும் பேசும் விஷயங்களெல்லாம் நியாயத்தை ஒத்ததாகவே தோற்றுவதால், உயர்வு தாழ்வை நிச்சயிக்கமுடியாததாகவிருக்கின்றன. ஆனதால், இதோ தோற்றுகின்ற மலையின்



சிகரத்திலேறி அவரவர்கள் மதத்தைச் சொல்லிக் கீழே விழுவரேல், எவர்கள் சரீரத்துக்கு யாதொரு கஷ்டமின்றி சுகமாக வருவீர்களோ அவர்கள் மதத்தை சிலாக்கியமாகக் கொள்ளுவேனென்று சொல்லினன். அதைக்கேட்ட புத்தர்கள் பின்னடைந்தார்கள். குமாரிளபட்டர் சரேலென்றெழுந்து, மலையுச்சியேறி, "பிரஹ்மமாகிய வேதம் என்னைக்காக்கட்டும்" என்று கூறிக் கீழே குதித்து, யாதொரு கஷ்டமுமின்றிச் சுகமாக வந்து சேர்ந்தனர். இதைப்பார்த்த அரசனுக்குப் புத்தர் கூட்டத்தில் வெறுப்புண்டாயிற்று.

அதையறிந்த புத்தர்கள் சபைக்குச்சென்று மணிமந்திரங்களால் இப்படிச்செய்வாரும் உண்டு என்று சொல்லி அரசன் அபிப்பிராயத்தைத் தடுத்தார்கள். அரசன் கோபங்கொண்டு நான் இன்னொரு குறி வைக்கப் போகின்றேன், அதை எந்தப் பக்ஷத்தவர் கூறாது தோல்வியடைவரோ அவர்களை கற் செக்கிலிட்டு ஆட்டிவிடுவேனென்று கட்டளையிட்டு, மறுநாள் அரசன் ஒருவரும் அறியாவண்ணம் ஓர் குடத்தினுள் கரும்பாம்பை யடைத்து மூடி இதனுள்ளிருப்பதைச் சொல்லவேண்டுமென்று சபையில் வைத்தான். பௌத்தர்கள் கேட்டுக் கொண்டபடி இரு பக்ஷத்தவர்க்கும் மறு நாளே எல்லையாகக்கொண்டு தத்தம்மிருப்பிடஞ் சென்றார்கள்.

புத்தர்கள் பூராவும் அன்றிரவெல்லாம் ஓர் தடாகத்தில் நின்று தவம்புரிந்தார்கள். இப் புத்தர்கள்மேலிரக்கங்கொண்ட சூரியபகவான் குடத்தினுள்ளிருப்பதை வெளியிட்டனர். அதையறிந்த புத்தர்கள் அரசசபை வந்து குடத்தினுள் கரும்பாம்பிருக்கின்றனவென்று வெளியிட்டார்கள்.

குமாரிளபட்ட பாதாசாரியரானவர், வேதத்தை நினைந்து இரவெல்லாம் செவ்வனே உறங்கி விழித்துக் காலைக்கடனை விதியோடு செய்து சபைக்கு வந்து, இக்குடத்தினுள் சொர்ணமாயிலங்கும் விஷ்ணுவின் விக்ரகமிருக்கின்றனவெனக்கூறி, குடத்தை வலம் வந்து, நமஸ்கரித்து குடத்திற் கையிட்டுச் சொர்ணத்தாலாய ஐந்தலை அரவத்தில் யோக சயனத்துள்ள, சகுணவடிவ விஷ்ணு மூர்த்தியை எடுத்துக்காட்டிக் குடத்தினுள் வேறு யாதொன்றுமில்லையென்பதனையும் சோதித்துப் பார்க்கும்படி செய்தனர்.

இதைக் கண்ணாரக்கண்ட அரசன் இப்போதல்லவா வேதம் சத்தியமென்பதை யறிந்தேனென்று கூறி, அங்குள்ள புத்தர்கள் யாவரையும் செக்கிலிட்டு அறைத்துக்கொல்லும்படி உத்திரவு செய்தனன். அப்போது புத்தர்கள், வேதத்தில் ஜீவகாருண்யம் பிரபலமென்பதை சொல்லுதல் மூலமாகத் தப்பிக்க முயன்றனர். அத்தருவாயிலுண்டாய (அரசனே சத்தியத்தைக் காத்துக்கொள் என்ற) அசரீரியைக்கேட்ட அரசன், யாவற்றுஇடங்களிலிருக்கும் புத்தர்கள் யாவரையும் செக்கிலிட்டு அறைத்து நாசஞ்செய்யும்படி தன் வேலைக்காரர்களுக்கு உத்திரவு செய்தான். அவ்வுத்திரவை யேற்ற அவ் ஏவலாளர்கள் அவ்வாறே செய்தனர். இதனால் புத்தர்களுக்கு ஓர் பெரிய பிரளயமுண்டாயிற்று. அதன்பின் நாஸ்திகராய புத்த சார்வாக மதங்க ளொழிந்தனவாய், கர்மம் பக்தி மார்க்கங்களாய யாகம் தவம் தேவதா பூஜை முப்பத்திரண்டு புண்ணியம் முதலிய கர்மகாண்ட ஸனாதன ஒழுக்கங்கள் பிரகாசிக்கத்தலைப்பட்டன.

அப்போது சுப்பிரஹ்மண்யாவதாரமாகிய குமாரிளபட்ட பாதரானவர், வேதபாராயண அநுஷ்டான முறைகளைச் சீர்திருத்தஞ் செய்து, அக்கர்ம காண்ட மார்க்கத்தை பிரஹ்மாவின் அம்ஸபூதரான மண்டனமிசிரர் முதலிய சிஷ்யர்களுக்கு உபதேசித்து தவ சிரேஷ்டராயிருந்தனர்.

அப்போது இந்நிலவுலகின்கண் யாவரும் வேதமார்க்க கர்ம விதியினநுஷ்டானத்தில் ஈடுபட்டவர்களானார்கள். ஆயினும் பிரஹ்மாத்ம ஐக்கிய தத்துவஞானமில்லாது, சரீரமே நானென்ற அஞ்ஞான வடிவ ஜீவத்தன்மையாலேற்படும் ஜனன மரணாதி சம்சார துக்கம் நீங்காதவர்களாயிருந்தார்கள். இதை யறிந்த பரமேஸ்வரரானவர் அஃதை நிவர்த்திக்கும் ஏதுவால் மனுஷ்யாவதாரஞ் செய்ய எண்ணங் கொண்டனர்.

## சிவகுருசுவாமிகளின் அவதாரம்.

அதன் பின்னர், மலையாளம் எனப் பெயர் வாய்ந்த கேரள நாட்டினிடத்து பூரணவாகினி நதிதீரத்தில் இடபாசலம் என்ற ஒரு சிவக்ஷேத்திரமுண்டு. அதன் சமீபத்தில் வேதங்களை



விதிப்படி ஓதுவதிற் சிறந்தவர்கள் நிறைந்துள்ளதும், சிவபிரானது பாதத்தினின்றுண்டாம் காரணப்பெயரைக்கொண்டு காலடி என்ற பெயரால் வளங்கப்படும் ஓர் அக்கிராரமுண்டு. அதில் வேத விசாரணை சாந்தம் ஒழுக்கம் இவைகளிற் சிறந்து விளங்கும் பிரபாவத்தால் அசரரைப் போன்று வேத வித்யாதி ராஜர் என்பவர் கிருகஸ்த விதிவழுவாது நடத்திவருங்கால், அவருக்கு இடபாசலேஸ்வரர் கிருபையால் சிவகுரு என்ற புத்திரர் பிறந்தனர். அவர் பிரஹ்மசரிய விரதம் பூண்டு, பிச்சையை யருந்தி, குருகுலவாசஞ் செய்து, சரீர மனவாணிகளால் வரம்புடன் குரு சேவையை யியற்றி, பதம் கிரமம் சிக்ஷை முதலியவற்றோடு கூடிய அங்கங்களாய ஆறுசாஸ்திரவிசாரணையின் மூலமாக வேதங்களைக் கற்றுணர்ந்து, வாக்கியங்களின் தாற்பரிய நிச்சயத்தினையும், அநுபவத்தினையு மடைந்து, பிறரால் கொண்டாடப்பெற்று மதிப்புடையவராயிருந்தனர்.

சிவகுருவானவர், மிகுந்த வைராக்கியமுடையவராயிருப்பினும், குருவின் கட்டளைப்படி கிருக தர்மத்திற் பிரவேசித்து, மஹிபண்டிதனென்ற வேதியரானவர் சோமாஸ்கந்தமூர்த்தியி னுபாசனையின் பலத்தாலடைந்த குணம், ஒழுக்கம், பதிவிரதாதர்மம் என்பவற்றாற் சிறந்துவிளங்கும் ஆரியாம்பை யென்ற தன் புத்திரியையழைத்து வந்து, வரதக்ஷிணையுடன் கிரியாலோப மந்திராலோப பொருள்லோபமின்றி வேத பூர்வகமாகத் திருமணஞ் செய்துகொடுக்க ஏற்றனர். அதன்பின்பு தம்பதிகளிருவரும் அதிதிசம்பந்தத்தை யடைந்த காசிப மஹரிஷியைப்போலவும், அநசூயையையடைந்த அத்திரி மஹரிஷியைப்போலவும் கிருஹஸ்தாஸ்ரம தர்மத்தை வழுவாதியற்றி வந்தார்கள்.

## ஆதிசங்கிராவதாரம்.

சிலநாட் சென்றபிறகு சிவகுருவானவர், ஆரியாம்பையின் விருப்பத்தை நிறைவேற்றுபவராய், புத்திரனைப் பெறவிரும்பி, பத்தினியுந் தானுமாகத் தீக்ஷைசெய்துகொண்டு, சிவக்ஷேத்திர மொவ்வொன்றி லோரோர் வருடமாக விதிப்படி தவமியற்றி வந்தனர். அவ்வாறு தவமியற்றி வருங்காலத்துப் பன்னிரண்டாவதாண்டில், முற்கூறிய இடபாசலக்ஷேத்திரத்திற் றவமியற்றிவருங்கால், சிவ

பிரான் ஓர்நாள் தியானஞ்செய்திருந்த இருவருக்கும் பிராஹ்மண வடிவமாய் பிரத்தியக்ஷமாகி புத்திரபலத்தைக்கொடுத்து மறைந்தனர். இருவரும் விழித்தவுடன் சிவபிரான் பார்பதி சமேதராய் காளைவாகனத்துடன் காக்ஷியளித்தனர். அதற்கிணங்கத் தவம் முடிந்தது என்ற அசரீரியையுங்கேட்டுச் சிவகுருவானவர், பாயசத்தை அவிர்ப்பாகமாகவைத்துப் புத்திர காமேஷ்டியையும் விதிப்படி முடித்தனர். அப்போது தம்பதிகளிருவரும் பரமசிவத்தின் ஞான சொரூப ஆவிர்ப்பாவ அந்தர்க்கத சம்பந்தமான அப்பாயசத்தையும், பூரண கும்ப தீர்த்தத்தையும் அருந்தி, சிவத்தியானஞ்செய்து தர்ப்பாசனத்தில் தங்கினார்கள். அன்றிரவில் பரமேஸ்வரன் வேதிய ரூபமாய் பிரசந்நராகி, "ஞானம் நிறைந்த அற்ப வயதுள்ள புத்திரனொருவனை வேண்டுமோ, அக்ஞான மதிகரித்த அதிக வயதுள்ள ஆண்மக்களனேகர் வேண்டுமோ" எனக்கேட்டனர். அதற்குச் சிவகுருவானவர், ஆயுள் வேண்டின் மிர்த்திஞ்சயனாகிய சிவபிரானருளுவராதலின் ஞானநிறைந்த புத்திரனொருவனை வேண்டுமென்று கூறினர். அதைச் செவியுற்ற பரமசிவம் அப்படியேயாகுக வென வரமளித்து மறைந்தனர்.

அதன்பின், நிராபேக்ஷிக ஸ்வயப்பிரகாச ஞானஸ்புரண பரமாத்மாவானவர், சிவகுருசுவாமிகளின் சமஸ்காரவாயிலாய் ஆரியாம்பையின்உதரத்திலிருந்து வளர்ந்தனர். அப்போது உலகத்தவர்களின் சித்தந்தெளிவுற்று ஈகை பரோபகாரம் உத்தமமான நற்காரியம் முதலியவைகள் விருத்தியாயின. வேத மோதுவாருள்ளந் தெளிவுடன் பிரகாசித்தது. காலடியில் பல நற்குறிகள் காணப்பட்டன.

ஓர்தினம் ஆரியாம்பைக்குத் தன் சரீரத்தினுள் உலகமெல்லாந் தோற்றக்கண்டு ஆச்சர்யமடைந்தனர். ஓர் திங்கள் ஆரியாம்பையின் கனவில், வெள்ளை ரிஷபத்தின்மீது வீற்றிருந்ததாகவும், கந்தர்வர்கள் கானம் பாடவும், ஜெயஜெயவெனத் தேவதுந்துமி வாத்தியங்கள் கோஷிக்கவும், தேவர்கள் ருக்காதி மந்திரங்களால் துதிசெய்யவுமாக் கண்டு நித்திரைவிட்டெழுந்து, தன்சரீரத்தின்பேரில் போடப்பெற்றிருந்த வாசனைவாய்ந்த மல்லிகை முல்லை இருவாட்சி பிச்சி சண்பகம் பாரிஜாத முதலிய மலர்களைக்கண்டு அதிசயித்தனர்.



சிவகுருசுவாமிகளும் ஆரியாம்பையும் கடந்த அநேக ஜன்மங்களிற் செய்யப்பெற்ற தோஷமின்றிய விதிவடிவ உத்தமமான தபசின் வல்லமையாய பலத்தினாற் பரமேஸ்வரரே புத்திரராக அவதரித்தனர். அதர்மத்தைத் தொலைத்து தர்மத்தைநிலைநாட்டற்பொருட்டுக் கிரேதாவில் கபிலராயும், திரேதாவில் தத்தாத்திரேயராயும், துவாபரத்தில் வியாசராயும் அவதரித்தனர். இக்கலியில் பிரஹ்மதேவர் தமது புத்திரர்களிற் சிறந்த பிரஹ்மக்ஞான யோகீந்திரராய ஸனத்குமார பகவானுக்குக் கூறியபடியும், வியாசபகவான் கூறிய ஸ்ரீ காந்தப்புராணம் சிவரகசிய கண்டம் நவமஹாமிஸம் பதினாறாவது அத்யாயத்துள்ளும் சிவபுராணத்துள்ளும் கூறியவாறும், ஆதி சங்கரருடைய அவதாரகாலம் எப்பொழுதென அறிஞர் முதலிய யாவரும் எதிர்பார்த்திருந்தார்கள்.

இப்படியிருக்க, இக்கலியுகத்து மூவாயிரத்து ஐம்பத்து எட்டாவது வருடம், விக்கிரமசகம் பதினான்கில் ஈசுர வருஷம், வைசாக மாதத்தில், பூர்வபக்ஷ பஞ்சமி திதியில், அநேக கிரகங்கள் பொருத்தமாகிய நல்லவேளையில், சிவகுருவின் பத்தினியாராகிய ஆரியாம்பை அம்மையார், அநசூயை தூர்வாசரையும், அதிதிதேவி வாமனமூர்த்தியையும், தேவகியம்மை கிருஷ்ண பகவானையும் பெற்றதுபோல சங்கரமூர்த்தியைப் பிரசவித்தனர்.

சங்கர குருவானவர் பிறந்தவுடன், தன் தாயாகிய ஆரியாம்பையின் இருதயத்தினுள் பரமாத்ம வொளியானது தோன்றி ஆனந்தத்தை உண்டுபண்ணிற்று. சங்கரரின் அவதார காலத்தில் யாவரும் விரும்பத்தக்க தேவதுந்துமி முதலிய வாத்தியங்கள் முழங்கின. ஆகாயத்திற் செவ்வனே நக்ஷத்திரங்கள் பிரகாசித்தன. வைரத்தன்மைவாய்ந்த பிராணிகளின் பகையொழிந்தன. துன்மதவாதியர்க்குத் தீச்சகுனமுண்டா[illegible] ழந்தையின் திருமேனித்தேஜஸானது பிரசவ அறையைச் செவ்வனே பிரகாசிக்கச்செய்தன. சங்கரப்பெருந்தகையாரின் ஜன்ம காலத்தில் உலகத்தவர்கள் யாவர்க்கும் எல்லா வகையாலும் நன்மையே உண்டாயின. பிரசவித்த மாதாவிற்கு விழித்துக்கொண்டிருத்தல், சொர்ப்பனங் காணல், தூங்குதல் என்ற சாக்கி

ரம், சுவப்பனம், சுஷுப்தி எனும் ஜீவாவஸ்தைகளில் சம்பந்தப் படாது அற்புதமாகவே மனோவிருத்தியிருந்தது.

அப்போது புத்திரப்பேற்றைக் கேட்ட தந்தையாராகிய சிவ குரு சுவாமிகள், விதிப்படி தீர்த்தமாடி, ஜோதிடர்களை அழைத்து, ஜாதகமுதலிய சடங்குகளைச்செய்து, ஒழுக்கம் விசாரணை வாய்ந்த வேதியர்கட்கு விதைவளங்கல் முதலிய விதிவடிவதானங்களைக் கொடுத்து, அவ்வேதியர்களிடம் ஆசீர்வாதம்பெற்று, குழந்தையைத் தரிசித்து ஜாதகப்பயனை விசாரித்தனர். அதை ஆராய்ந்தறிந்த அவர் கள் யாவரும் இது மஹாபுருடஜாதகமாதலின் பயனை வரையறுக்க எங்களாலியலாதெனக் கூறிவிட்டனர்.

## சங்கரரின் பிரபாவம்.

அங்கு ஓர் நாள் பாம்பொன்று அக்குழந்தையின் கண்டத்திற் சுற்றிப்படமெடுத்தசைந்தாடிக் கொண்டிருந்தது. இதைக்கண்டமனை யவர் முதலிய யாவரும் ஓடிவந்து பார்த்தார்கள். அப்போது அது வில்வதளமும் உருத்திராக்கக் கோர்வையும் திருநீறுமாகத் தோற்றக் கண்டு ஆச்சரியத்தையடைந்தார்கள். மற்றோர்நாள், தாயினிடத் திருந்த குழந்தை திடீரெனக்காணாமற்போயிற்று; அது விஷயமாய்த் தேடிக்கொண்டிருக்கையில் வீணைதாங்கிய கரத்துடன் விருத்தவேதிய ரொருவர் வந்து, அம்மனைக்கண்ணிருந்த பூசனைக்காயொன்றை யாசித்தனர். அதை மனையவர்கொடுக்க வாங்கிய அக்கிழவர்கைநழுவக் காய்விழுந்துடைந்தது. அதனுள்ளிருந்து அக்குழந்தை வெளிப் பட்டது. அங்குள்ள யாவரும் அவ்வாச்சரியத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது வந்த வேதியர் மறைந்துவிட்டனர். குழந் தைக்குச் சாந்திகளைச்செய்து எடுத்துக்கொண்டார்கள்.

## சங்கரர்க்கு நாமகரணஞ் செய்தல்.

அக்குழந்தைக்கு நெற்றியில் நுதற்கண்ணின் குறிப்பும், உச்சி யில் எவ்வளவு துடைக்கனும் உலராத ஈரமும், நெற்றியில் மூன்றும் பிறைச்சந்திரனை யொத்த வெண்ணிறக்கீற்றும், கண்டத்தினிடத்துக் கருத்தரேகையும், கைகளிற் தமருகம் சூலம் முதலிய ரேகைகளும், நீண்டபுஜங்களும், விசாலமான மார்பும், அகன்ற கண்களும், பூரணச்



சந்திரனை நிகர்க்கும் தேககாந்தியும், விரும்பத்தக்க திருமேனியழகும், பார்ப்பவர் கேட்பவர் யாவர்க்கும் மோக்ஷம் முடியவுள்ள எல்லா நன் மையையும் பயக்கத்தக்க சங்கராம்சத்தை குறிப்பாலுணர்த்துவதாக விருத்தலால், அக்குழந்தைக்கு அறிஞர் முதலிய யாவருங்கூடி விதி வடிவ சடங்குகளியற்றி சங்கரர் என்ற திருநாமம் சாற்றினர். அம் மகவானது பூர்வபக்ஷ சந்திரகலையென நாளுக்குநாள்வளர்ந்துவந்தது.

## தேவர்கள் பூமியிலவதரித்தல்.

சிவபிரான் சங்கரராக அவதரித்திருக்குங் காலத்து அவர்கட் டளைப்படி சேவையின் பொருட்டாக விஷ்ணு முதலிய தேவர்கள் கீழ்கண்டவாறு வேதியர் குலத்தில் அவதரித்தார்கள்.

விஷ்ணுவானவர்:—சூரிய கலையுடன் சேர்ந்து விமலர் என்னும் வேதியர்க்கு மகனாகப்பிறந்தார். இவரே சனந்தன ரென்ற இயர்ப் பெயரையும், பத்மபாதரென்ற காரணப்பெயரையும் பெறுவர்.

வாயுபகவான்:—குமாரிளபட்டரின் மாணாக்கராய பிரபாகர பட்டருக்குப் புத்திரராகப் பிறந்தார். இவர் அஸ்தாமலகரென்ற காரணப் பெயரை அடைவர்.

அக்கினி பகவான்:—நந்தி, பிரகஸ்பதி இவர்கள் கூறுடன் கலந்து ஆனந்த கிரியாகப்பிறந்தார். இவரே துரோடக ரென்னுங் காரணப் பெயரை ஏற்பர்.

பிரஹ்மாவானவர்:—தக்ஷணாமூர்த்தியினருளுடன் சேர்ந்து இம மித்திர பட்டாசாரியருக்கு விஸ்வரூபமண்டன பட்டாசாரியராக ஜனித்தனர். இவரே சங்கரரால் விவரணர் எனவும், சுரேஸ்வரர் எனவும் பெயரால் வளங்கப்படுவர்.

நந்தி, வீரபத்திரர், கணபதி:—இம்மூவர் கூறுஞ்சேர்ந்து உதங்க முனிவராகப் பிறந்தார்.

வருணபகவான்:—சிற்சுகாசாரியராகப் பிறந்தார்.

எமதர்மர்:—காலா நரனென்னும் வாதியாக ஜனித்தார்.

நிருதி:—சாத்தேய மதவாதியாகப் பிறந்தார். ஏனைய தேவர்கள் அவ்வம் மதவாதியாக அவதரித்தார்கள்.

**சரஸ்வதியம்மையார்:**—முன்னொருநாள் பிரஹ்மாவின் முன்னிலையில், ரிஷிகள் தத்தம் வேத சாகைகளை ஓதிக்கொண்டிருக்குந் தருவாயில், சுரந்தப்பியதின் மூலம் சிறித்த வேதுவால் தூர்வாசரால் ஏற்பட்ட சாபத்தால், விஷ்ணுமித்திர பட்டாசாரியருக்குப் புத்திரியாய் ஜனித்து, உபய பாரதி என்ற நாமத்துடன் சாரதாம்பாள், சரசவாணி, மந்திரேஸ்வரி, அக்ஷரமா துர்கை, வாக்குவாதினி என்ற இயற்பெயரை அடைந்திருந்தனர்.

**ஆதிசேஷனவர்:**—சங்கராவதார காலத்துக்கு முன்னரே பிரஹ்ம, விஷ்ணு, உருத்திர கலைகளோடு தேவகாரியத்தை முன்னிட்டு, கோவிந்த பகவத் பாதரென்ற பெயருடன் அவதரித்து, வியாசரின் புத்திரரான சுகப்பிரஹ்மத்தின் சிஷ்யராகிய கௌடபாதாசாரியரிடம் பிரஹ்மோபதேசம் பெற்று மாணாக்கராகி, வியாகரணம், வைத்தியம், யோகம் முதலிய கலைகளை பதஞ்சலி முனிவரிடஞ் சந்தேக விபரீதமின்றித் தெரிந்து, நருமதா நதி தீரத்தில் நிர்விகர்ப்ப நிஷ்டபரராக இருந்தனர்.

**கலிபுருடன், மன்மதன்:**—இவர்கள் கலை சேர்ந்து நீதி நூல் மன்மத நூல் முதலியவற்றிற் சிறந்தவனாய், நியாய வழியில் அரசு புரிந்து, அமரகன் என்ற பெயருடன் ஓர் சிறந்த அரசனாயிருந்தனன்.

**காலபைரவர், அதர்வணம், தந்திராக சாபரதேவதை, சைவ வைஷ்ணவ பாரிடதர்:**—இவர்கள் கூறு சேர்ந்து, பாசுபத காபாலிக சௌர காணாபத வைணவ சாத்தாதி மத வாதியராகப் பிறந்தார்கள்.

**குபேரன்:**—மலையாள தேசத்து அரசனாகப் பிறந்தான்.

**வீராவளி அம்மை:**—கூறு மந்திரவாதியராகப் பிறந்தார்கள்.

**நவக்கிரகங்கள்:**—கூறு கால வாதியராகப் பிறந்தார்கள்.

**அரக்கர்:**—சார்வாகராக ஜனித்தார்கள்.

**அசுரர்கள்:**—சமணர்களாகவும், புத்தர்களாகவும் பிறந்தார்கள்.

**தானவர்கள்:**—காமக் குரோதர்களாகவும், த்வைதர்களாகவும் ஜனித்தார்கள்.

**விடுவேச்சேனர்:**—முதலியோர் கூறு வைகானச பாஞ்சராத்திரத் தலைவர்களாக ஜனித்தார்கள்.



கௌதமர் ததீசி முனிவர்களாற் சாபமடைந்த வேதியர்கள் பாஸ்கரபட்ட ஸ்ரீஹரிட வபிநவகுப்தராதியராகப் பிறந்தார்கள்.

இவ்வாறு சங்கரர் அவதரித்திருக்குங்கால், தேவர்களனைவரும் பூவுலகில் ஜனித்து, தங்கள் தங்களுடைய மதக் கொள்கைகளை பல சிஷ்ய வர்க்கங்களுக்கு உபதேசித்து, பரவச்செய்து, பரிவார ஆர்ப்பாட்டத்துடன் சிலர் பக்தியாலும், சிலர் பகையாலும், சிவபிரான் வயப்பட்டவர்களாய், சேது முதல் இமயம் வரையுள்ள இப்பரதகண்டத்தின் கண் வித்வத்தன்மை முதலிய பெருமிதங்களால் வியாபித்துப் பரவிப் புகழடைந்திருந்தனர்.

## மண்டனமிசிரர் உபயபாரதியாரை மணஞ்செய்தல்.

சரஸ்வதி தேவியார் உபயபாரதி என்ற நாமத்துடன் விஷ்ணுமித்திர பட்டாசாரியாருக்குப் புத்திரியாய் அவதரித்திருக்குங்கால், மிக்கபிரியத்துக்கு விஷயமாகப் பேசுந் தரத்தாற் சரசவாணி யென்ற காரணப்பெயருக்கு ஏற்ப தத்துவஞ்ஞான சொரூப வடிவினராய் அறுபத்து நான்கு கலைகளும், அவ்வம்மையார் வடிவமாகவே சிறந்து விளங்குவனவாயிருந்தன. அப்பெண்மணியின் திருமேனியானது அழகினாலும், புத்தியின் அறிவானது கல்வியினாலும், வல்லமையானது மந்திரயோகத்தாலும், குணமானது புண்ணியத்தாலுஞ் சிருஷ்டிக்கப்பட்டதென யாவராலும் மதிக்கத் தக்கதாகவிருந்தது. அத்தருவாயில் ஆயிரந் தந்திக் கம்பிகளாலுண்டாகும் வீணாகானத்தால் மஹாவிஷ்ணுவை ஆராதிப்பவராகிய நாரதபகவானனவர் உபய பாரதியாரின் அழகு, குணம் என்பவற்றை மண்டனபட்டாச்சாரியருக்கு விவாகத்தின் பொருட்டு தெரிவித்தனர். அவர் அபிப்பிராயத்தைத் தெரிந்து கலியாண சம்பந்தமாக உபய பாரதியாரிடஞ் சென்று மண்டனமிசிர பட்டாசாரியருடைய வேதத்தின் தீர்மான வடிவ பாராயணம், குணம், ஒழுக்கம், வித்வத்தின் விவேகத்தன்மையுடையவராய், கர்ம காண்ட நிஷ்டையிற் சிறந்தவராய், கர்மகாண்டப் பிரதிஷ்டாபனாச்சாரியர் என்ற பட்டம் பெற்று, ஜெயபேரியாற் புகழ்சியையடைந்து, பல புலவராகிய சிஷ்யக் கூட்டங்களாற் சூழப் பெற்று பிரஹ்மாவைப்போன்று வேதவித்யா அரசராய் எதிர்ப்பார்

ஒருவருமின்றி இருக்குந்தாத்தையும், அவருக்கு விவாகத்தில் விருப்பமிருத்தலையுந் தெரிவித்து, மணமகன் மணமகளாய மண்டனமிசிரரும் உபயபாரதியாரிருவர் மனதையும் ஒரே தன்மையவாக வாக்கி, அவர்களின் தந்தையாரான இமமித்திர பட்டாசாரியர், விஷ்ணுமித்திர பட்டாசாரியரிருவருக்குந் தெரிவித்து, மஹரிஷிகளுடனும், பந்துவர்க்கங்களுடனும் விவாகமண்டபத்தில், சகல சம்பிரமங்களுடனும் அலங்கிர்தங்களுடனும், சாஸ்திரோக்தமாக வேதப்பிராஹ்மணர்கள் மந்திரங்களைச் சொல்லவும், அக்கினியிலோமித்து சாக்ஷியாக்கி மந்திரம், கிரிகை, தனம் என்பவற்றின் லோபமின்றி, மண்டனமிசிரர் உபயபாரதியாரிருவருக்கும் விவாகத்தை முடித்தார்கள்.

விவாகத்தையடைந்த அவ்விஸ்வரூப மண்டனமிசிரர், அவ்வுபயபாரதியாரோடு மஹிடமதி நகரத்தையடைந்து, இவ்வுலகச்செல்வங்களைத் துய்த்து, ஸ்ரௌதஸ்மார்த்தகர்மங்களை விதிப்படி யநுஷ்டித்து வந்தனர். அவர் பத்தினியாரான உபயபாரதியாரை எல்லாத் தேவமாதர்களும் பாங்கி, பணி, கிளி, பூவையராகப் பிறந்து சூழ்ந்திருந்தார்கள். முனி தேவாதியர் அவ்வக்கலைகளையுடைய பிரஹ்மசரிய மாணாக்கராகி, இருவரையுஞ்சேவையாலும், பணியாலுஞ் சந்தோஷத்தை விருத்தி செய்திருந்தார்கள்.

அப்போது மண்டனமிசிரர் வேதத்தின் கர்மகாண்ட விதியிற் றற்பர வீரராயும், நித்திய நியமவாசாரச் செல்வராயுர், ஆகவனீயம், காருகபத்தியம், தக்ஷிணாக்கினியம் என்ற முத்தீக்களால் நித்திய வேள்விகளையும், வேதமோதல் ஓதுவித்தல் மந்திரம் ஜபம் தானம் முதலிய புண்ணியச் செயல்களினால் சாபாநுக்கிரக சாமர்த்திய மஹிமையை யடைந்து, பேதமின்றி, சமத்தன்மை வாய்ந்து, பரோபகாரத்திற் சிறந்தவரென்று யாவருங்கொண்டாட, ஆரியாவர்த்தாசாரியரென்னும் பெயர் பெற்றுத் தனக்குத்தானே ஒப்பும் உயர்வுமுடையவராயிருந்தனர். இந்நிலைமையில் மண்டனமிசிரர் கிருஹஸ்த தர்மத்தை நடாத்திவந்தனர். அவராலியற்றிய தர்மமீமாம்ஸை முதலிய நூல்களில் விதிக்கப்பெற்ற ஒழுக்கங்களை கர்மவாதியரனைவர்க்கும் பிரயோஜனத்தைத் தாத்தக்க வெளியாகவிருந்தது. அதை அவரிடம் சிஷ்யர்கள் ஓதிவந்தார்கள்.



சரஸ்வதியின் அவதாரமாகிய உபயபாரதியார் ஞானவல்லமையினாலும், மந்திர வலிமையினாலும், அறுபத்துநான்கு கலைகளின் பெருமையினாலும் மாணாக்கர்கள் அனைவர்க்கும் வித்வத்தன்மையிற் றற்பராராகுமாறு கடைக்கண்ணாற் பாலித்து, பதிவிருதம் விருந்துபசரித்தல் முதலிய பதிக்குச்செய்யவேண்டிய பத்தினித்துவத்தை காமதேனுவைப்போல நடாத்தி, யாவரும் உலகமாதாவெனக் கொண்டாட கிருகஸ்த தர்ம வொழுக்கத்திலிருந்தனர்.

அவ்விருவரும் இல்லற ஒழுக்கத்தாற்செய்த நோன்பு, வேள்வி, பிதிர்க்கர்மம் முதலிய புண்ணிய காரியங்களில் வசிஷ்டர், பராசர், கௌதமர், வியாசர், ஜைமினி முதலிய முனிசிரேஷ்டர்கள் சிஷ்யப்ரசிஷ்யக் கூட்டங்களுடன் விஜயமாய், உத்தம புண்ணியம் பயக்குமாறு, பக்தி சிரத்தை வணக்க வொடுக்கத்துடன் அவராலளிக்கப்பெற்ற உண்டிகளையருந்தி, அவர்களிடம் பெருங்கருணை உடையவர்களாய்ச் சென்றுகொண்டிருப்பார்கள்.

## சங்கரர் பாலலீலை.

சிவபிரானாகிய அச்சங்கரர்க்கு முதலாவது வயது நடந்தது. ஒருநாள் இடபாசலேஸ்வரருக்கு கார்த்திகைத் திங்களன்று, காலடியிலுள்ள வேதியர்களால் அர்ச்சிக்கப்பெற்ற அலங்காரங்களும், வில்வ உருத்திராக்க மாலிகைகளும், இச்சங்கரர் மேனியிற் சூழப்பட்டனவாக இருந்தது. இதைப் பார்த்து சந்தேகங்கொண்ட பல வேதியர்கள், ஆலயஞ் சென்று இடபாசலலிங்க மூர்த்தியில்லாமை கண்டு, மிக்க ஆச்சர்யமுடன் பிரமையுற்று, அச்சிவ மூர்த்தியே இச்சங்கரரென நினைத்து, ஆநந்தபரவசர்களாய் அக்குழந்தையிடம் வந்து, அஷ்டாங்க முறைப்படி வந்தனை [illegible]கள். அனை[illegible]வுளான மாயையால் மறைப்புண்டவராய் அவ்வுண்மையை மறந்தார்கள். மற்றோர்பொழுது சிவகுருவின் மனையில் ஆயிரம் வேதியர்களுட[illegible]னை விரதம் நடந்துகொண்டிருக்கையில், மழையோடுற்ற சுழற்காற்றினால் அச[illegible]திற் றூக்கிச் செல்லப்பட்டனர். தாய் தந்தையர் யாவரும் துக்கத்தால் தபித்துக்கொண்டு எங்குந் தேடத்தலைப்பட்டனர். இருநா[illegible] திக்கினுந் தேடச் சென்றவர்கள் எட்டுச் சங்கரரைக்

கொண்டுவந்தார்கள். அவ்வெட்டுக் குழந்தையையும் வைத்து அப்புண்ணிய காரியம் நடந்துகொண்டிருக்கையில், குருவாயூர் கிருஷ்ணன் ஆலயத்திற் சின் முத்திரை தாங்கியிருந்த இச்சங்கரமைந்தரைச் சிலர் கொண்டுவந்தனர். அப்போது மனைக்கண்ணிருந்த எட்டுக்குழந்தையும் மறைந்து விட்டது. இதைப் பார்த்து அவ்வேதியர் யாவரும் அஷ்ட மூர்த்தியாகிய சீவன், சூரியன், சந்திரன், ஆகாயம், வாயு, அக்கினி, ஜலம், மண் முதலியவை சிவபிரானுக்கு அங்கங்களென்ற வேத முடிபானது இவரிடந் தோற்றியதால், இச்சங்கரரே அஷ்டமூர்த்தியாகிய பரமசிவமாமெனத் துதித்துக்கொண்டாடினர். அத்தேவ சந்தர்ப்பனை நடத்திய அவ்வேதியர்க்கு இரவில் தேவ குருவாகிய பிரகஸ்பதியானவர் பிரசன்னராகி, சங்கரர்க்கு சார்வாகர், உலோகாயதர் முதலியோர்களின் மத இரகசியத்தினையும், வாயு பகவான் த்வைத வாதத்தின இரகசியத்தினையும், ஸ்ரீகண்ணன் சுத்தாத்வித இரகசியத்தினையும் உபதேசித்ததாக கனவிற் கண்டனர். அதற்குத் தக்கதாகப் பிரகஸ்பதி முதலானோர் நனவில் வந்து அன்புடன் உபதேசித்ததாகக் கண்டு ஆநந்த பரவசமுற்றார்கள்.

அப்பால் சங்கரரானவர் அகர முதலிய அக்ஷரங்களை உச்சரிக்கத் தொடங்கும் இரண்டாவதாண்டு நடக்கும்போது, அவரைப் பார்த்த புறச்சமயவாதியர் யாவரும் தங்கள் தங்கள் மதத்துக்கு எத்தகைய கெடுதல ஏற்படுமோ வென யோசிக்கத் தொடங்கினார்கள். அம்மைந்தர் பதங்களைச் செவ்வனே உச்சரிக்கும்பொழுது அவ்வாதியர்க்கு நாக்குழறுதலை யடைந்தது. மூன்றாவது வயதிற் கேட்டவளவிற்றானே சுருதி யுக்தி யனுபவத்தோடு யாவற்றையுஞ் செவ்வனே தெரிந்து இலௌகிக வைதிக வாக்கியங்கள் யாவற்றோடு பாஷைக ளெல்லாவற்றையும [illegible]க்கத் தொடங்கினர். இதனைக் கண்டு கேட்டுணர்ந்த யாவரும் ஆச்சர்யமுடையவ[illegible]ர்.

மற்றோர் திங்களில் அங்குள்ள [illegible] ஸ்வயம்புலிங்கேசர் திரு[illegible]ணை எழுந்தருளியிருந்த சர்வாலங்கிர்த பூஜித[illegible]ன் சிவபிரான் தோன்றுதவராய் இப் பாலசங்கரரே தோன்றினர். பின்பு அக்கூட்டத்தினிடத்து இச் சிறுவரே எங்குமிருக்கக் கண்டார்கள்.



பின்பு இளவேனிற் பருவகாலத்தில் சிவகுருதீக்ஷதர் ஓர் யாகஞ் செய்தனர். அங்கு பதினாயிரம் வேதியர்கூடி சாஸ்திரப் பிரசங்கஞ் செய்திருந்தார்கள். அப்போது பண்டகசாலைப்பக்கம் இச் சங்கரருடன் விளையாடற்செய்திருந்த சிறுவர்கூட்டத்தில் ஒருவருக்கொருவர் இங்குள்ள கத்தரி, பூசணி முதலிய ஒவ்வொரு காய்களினிடத்தும் ஒவ்வொன்றில் விதைகள் எத்தனை என்பதைப்பற்றி கேள்வியின்மூலம் தோல்வி வெற்றிகளைக்கூறி விளையாடினார்கள். அவ்விளையாட்டில் வழக்குண்டாய் இச் சங்கரரிடம் கேட்டனர். அதற்கு அப் பாலசங்கரரானவர் உலகவித்தின் கணக்கினை உலக முற்றுமாக நினைக்கலாமென்ற பதிலளித்தனர். அவ் வாக்கியத்தின் அர்த்தத்தை அறியாத அச்சிறுவர்கள் வேள்விசெய்திருந்த அந்தணர்களிடந்தெரிவிக்க, அவர்கட்கும் புலப்படாததுபற்றி அக்காய்கறிக் குவியல் ஒவ்வொன்றினையும் சோதிக்கையில் ஒவ்வோர் விதையே இருக்கக் கண்டு இவ்வாக்கியத்திற்கு இதுவே பொருளெனத் தீர்மானித்து ஆச்சர்யத்தால் அசைவற்றிருந்தார்கள்.

இச் சங்கரச்சிறுவர் யாதினும் வல்லவராயினும், ஆன்றோர் கொள்கையின் உலகநடையை அழிக்காவண்ணம், பின்னைறுதிங்களில் கல்விபயின்றனரெனவாகித் தம்மாற் பிரசங்கிக்கும் சாஸ்திரசப்த யுக்தி இடிகளாற் பாசண்டக்கல்வியாற் செருக்கியவரின் புறச்சமய வாதமலைகளைத் துகளாகச்செய்துவந்தனர். இச் சங்கரச் சிறுவரின் பாலலீலையைக்கண்ட அனைவரும், கிருஷ்ணன் பாலலீலையேபோலுமென ஆநந்தமுடையவராய் இஷ்டசித்தியையும் அடைந்தார்கள்.

அச் சங்கரரின் மூன்றாவது வயதில் தன் தந்தையாரான சிவகுரு சுவாமிகளுக்கு வாணாள்முடிவுறுவதை நிமித்தத்தாலுணர்ந்து, உபநயனச் சடங்கினைமுடிக்கபருவமின்மையைநினைத்து சத்தியோதீக்ஷையை விதிப்படிசெய்து, சங்கரரைத் தம் தர்மபத்தினிவசம் ஒப்புவித்து, ஏனையசடங்குகளை விதிப்படிசெய்யக் கட்டளையிட்டு, கர்மயோக மார்க்கத்திலுள்ள நீண்ட சிவயோக சாதனத்தால் தேகத்தை நிறுவி தேவயானமார்க்கத்தாற் பதவியை அடைந்தனர்.

அவர் பத்தினியான ஆரியாம்பையார் தன்பதியாகிய சிவகுருவிற்குத் தன்மகவாகிய இச்சங்கரரின் சரீர இச்சையை நீக்கமுடியாதவராய், உடன்கட்டையேறுதலைஒழித்துச் சுற்றத்தவர் முதலிய வேதியர்களைக்கொண்டு அரணிகடைந்து தீக்கடன்களை இராமன் தாயாகிய கௌசல்யையே போலும் நடத்திமுடித்தனர். அப்போது பாலசங்கரரானவர் தன் தந்தையார் சரீரத்தைவைத்துள்ள இந்தனவேதியின்மீது ஓர் தர்ப்பையைக் கிள்ளி எறிந்தனர். அவ்வேதியினின்றும் அற்புதமான நன்மணமுண்டாகி எங்குங்கமழ்வுற்றது.

பின்பு விரத நியம வொழுக்கம்பூண்ட அவ்வாரியாம்பையார், உத்தராயண நல்லோரைப் புண்ணிய நாளில் வேதமுணர்ந்தோர், ஞாதியர், விருத்தர் முதலானோர்களைக் கொண்டு, அச்சங்கர மைந்தர்க்கு விதிப்படி தக்க உபநயனச் சடங்கினைச் செய்தனர். அப்பால் சங்கரச் சிறுவர் யாவரும் அறியும் வண்ணம் பிரஹ்மாத்ம ஐக்கிய ஞானமுடையவராய் தினந்தோறும் சூரியன் அக்கினி மாதா மூவரையுஞ் சேவிக்கும் நியமமுடையவராய், பிரஹ்ம சரிய வொழுக்கந் தவறாதவராய், காயத்திரி முதலிய மந்திர சக்தியின் பலத்தாலுண்டாஞ் சித்திகளில் வல்லவராயும், சர்வகலைகளிலும் கரைகண்டவராயும், சாமகானத்தில் தேர்ந்தவராகிப் பிரஹ்மதண்டம், மான்றோல் முதலியவற்றைக் கிரகித்தவராய் யாவராலுஞ் சேவிக்கும் பெருமை பெற்றிருந்தனர்.

ஓர்நாள் பிரஹ்மசரியத்தலைவராய் விளங்கும் அச்சங்கரரானவர், மாணாக்கருடன் குருமடத்தினின்றும் பிச்சைக்காக அயாசித தீக்ஷிதரென்னும் வேதியர் மனைக்குச் சென்று, புருஷரில்லாமை கண்டு, பவதி பிக்ஷாந்தேகி என யாசித்தனர். அக்குடும்பினியானவர் பார்த்து குடும்பத்திலுள்ள மிகுந்த தரித்திரத்தினால் உத்தமமான சத்பாத்திரங் கிடைத்தும் புண்ணியத்தைச் செய்யவழியில்லையே என்று சொல்லிக்கொண்டு, அன்பும் துக்கமும் அதிகரிக்கத் தம் மனைக்கண்ணிருந்த ஓர் நெல்லிக்கனியினை அன்பு வணக்க வொடுக்கத்துடன் சங்கரர் கையிற் கொடுத்தனர். உடனே சங்கரர் அன்புகூர்ந்து வெளிவந்து நன்மையைச் செய்யக்கருதி, தாம் சர்வ சக்தியுடையவராயினும் ஆசிரம விதியை மீறாதவராய், ஸ்ரீதேவி மந்திரத்



துடன் "கல்யாண விருஷ்டிஸ்தவம்" என்பதனை ஸ்லோக வடிவமாய் மஹாலக்ஷ்மியை ஸ்தோத்திரஞ் செய்தனர். உடனே லக்ஷ்மி தேவியார் பிரசன்னராகி வேண்டுவது யாதென வினாவினர். இம்மனையவர் தரித்திரத்தை அத்தியந்தம் நீக்கியருளல் வேண்டுமென்று சங்கரர் சொல்லினர். அதற்கு அச்சிதேவியானவர் முற்பிறப்புகளிற் புண்ணியஞ் செய்யாதார்க்கு இப்பிறப்பிற் கிட்டாதெனக் கூறினர். அதைக்கேட்ட சங்கரர் சர்வ சக்தி வாய்ந்த ஏ அம்மணி! இப்போது செய்யும் பெரும் புண்ணியத்திற்கு இப்போதே பலன் கொடுக்க வேண்டும்" என்ற வேத விதியைக்கூறி "காருண்யபூரண ஸ்தவம்" என்பதனை ஸ்தோத்தரித்து, விதியோடு ஓர் நெல்லிக் கனியைக்கொடுத்த புண்ணியத்தின் பலனை இப்பொழுதே இவ்வில்லறவம்மைக்குக் கொடுத்தருளல் வேண்டுமெனக் கேட்டனர். அவ்வாக்கிய ஸ்தோத்திரங்களாற் சந்தோஷமடைந்த மஹாலக்ஷ்மியானவர் அம்மனையிலறுபது கலம் தங்க நெல்லிக்கனி யளவு ஆகாயத்தினின்று மழையாக வருஷிக்கும்படி செய்து, சங்கரரை உத்தம வேத வாக்குகளால் ஆசீர்வதித்து அந்தர்த்தானமாயினர். அத்தங்கக் கட்டிகளை யடைந்த அவ்வில்லறமாது குடும்பத்தின் வறுமையைத் தொலைத்து சுகசமுத்திரத்தில் மூழ்கினர். இதைக்கேட்ட பொருளிச்சை யுடையார் யாவரும் ஆச்சர்யத்துடன் சங்கரரைப் பின் தொடர்வாராயினர்.

பிரஹ்மசரியவிரதம் பூண்ட சங்கரரானவர் ஏழாவது வயதில் அறுபத்துநான்கு கலைகளையு முணர்ந்து, விபூதி, உருத்திராக்கம், அக்கமணி, ஜபவடம், சின்முத்திரையோடு கூடியவராய் ஸ்ரீதக்ஷிணாமூர்த்திக்கு ஒப்ப, வேதாந்த இரகசியங்களை விளக்கியிருந்தனர். பொருளின் சொரூபத்தினையும் அநித்திய முதலிய கேடுகளையும் விசாரித்தலால் ஆசையையும், பொறுமையாற் கோபத்தினையும், போரும் என்ற திருப்தி எண்ணத்தால் உலோபத்தினையும், எவரையும் பார்த்த மாத்திரத்தில் அவர்களின் குணம் முதலியவற்றைத் தீர்மானிக்கும் ஆற்றலினால் அகங்காரத்தினையும் ஜயித்திருந்தனர். இதுநிற்க; அன்பு, சாந்தம், இனிமையான வசனம், தீமையையொழித்தல், உபகாரம், சுத்தவொழுக்கம், வேதபாராயண முதலிய

வற்றோடு எல்லாம் வல்ல கலையறிஞராயிருந்தனர். இத்தகைய புத்திர வடிவ சங்கரரைப் பார்ப்பதினின்று, தம்பதியை இழந்த ஆரியாம்பையின் துக்க நோய்க்கு அருமையான மருந்தாக இருந்தது.

அதன்பின் ஓர் நாள் துர்வாச முனிவர் தோன்றி, அஷ்டாங்க யோகத்தினையும், தன் தபசின் திறமையினையுங் கொடுத்து ஆசி சொல்லினர். சர்வதேவதா சொரூபம் பெற்ற அச்சங்கரர் எல்லாங் கைவந்தவராயினும் அதனை விருப்புடன் அங்கீகரித்தனர்.

மற்றோர் திங்களில் விரதம் பூண்ட தன் தாயானவர் வேனிற் கால வெக்கையாற் றபித்தலைப் பார்த்த சங்கரர் இரக்கமுற்றவராய், காலடியின் தூரத்தில் விலகிச் சென்றுகொண்டிருந்த பூரணவாகினி என்ற நதியை ஆகரூடண பீஜமந்திர எழுத்துக்களோடு கூடிய "மஹா பகாஸ்தவம்" என்பதனைப் பாடித்துதித்தனர். அப்போது அந்நதியானது தெய்வ வடிவமாக சங்கரர் முன் தோன்றி இன்றிரவு உமது எண்ணத்தை முடிக்கின்றோ மென்று கூறி மறைந்தது. அடுத்தநாட்காலை அந்நதியானது சங்கரர் இல்லம் வரை வந்து சென்றது. இதன் மத்தியிலுள்ள கிருஷ்ணன் ஆலயத்தினையும் பிரவாகம் அடித்துச் சென்றது. ஆரியாம்பையும் சிரமமின்றி சந்தோஷத்துடன் விரதத்தை முடித்தனர். இதை யறிந்த யாவரும் சங்கரரின் ஆற்றலை ஆச்சர்யத்துடன் புகழ்ந்தார்கள்.

பிறகு சங்கரர் அவதரித்துள்ள அம்மலைநாட்டில் மழையின்மை, நோய் முதலிய துன்பங்களின்றி சகல செல்வங்களும் விருத்தியுற்று மலிந்தன. இதனைக் கேள்வியுற்ற சத்தியவன்மனென்னும் அரசன் புத்திரன் பொருட்டு, மதிபூஷணன் என்னும் தன் மந்திரியைப் பார்த்து சங்கரரை அழைத்துவரும்படி யனுப்பினான். மந்திரி வந்து சங்கரரிடம் அதனைத் தெரிவித்தான். அதைச் செவியுற்ற சங்கரர் பிச்சைச் சோறும் போதுமென்றிருக்கும் எனக்கு அரசனைப் பார்க்க வேண்டிய காரியமில்லை; ஆனால், தான் செய்யவேண்டிய கட்டளைப்படி அரசன் ஆட்சியை நடாத்துவானாயின் இஷ்ட சித்தியை யடைவானென்று சொல்லி யனுப்பினர். இதனைக் கேள்வியுற்ற அவ்வரசன் தான் செய்திருந்த மூன்று நாடகத்தினையும், பதினாயிரம் பொன்னையுங் கொண்டுவந்து சங்கரர் பாதத்தில் வைத்து வணங்கினான்.



அவ் வரசனை ஆசீர்வதித்து இந் நாடகநூல் இம் மலை நாட்டினிடத்தே வளங்குக எனவும், புத்திரனையடைவதற்காகச் செய்யும்படி வரம்புடன் ஓர்எக்ஞத்தினைக்கூறி தன்பாதத்திலிருக்கும் பதினாயிரம் பொன்னை வேதவித்தாயுள்ள அந்தணர்க்கு உதவும்படி சொல்லி அனுப்பினர். அவ்வுத்திரவைச் சிரசிற்பெற்ற சத்தியவன்ம அரசன் சங்கரரைக் குலகுருவாக மனத்திற்கொண்டு நமஸ்கரித்தெழுந்து அரண்மனைசென்று அவ்வேள்வியைச் செய்து உத்தம புத்திரனையடைந்து தன் தேயத்தை ஆண்டிருந்தனன்.

அதன்பின் ஓர்நாள் உபமன்னியர், ததீசி, கௌதமர், அகஸ்தியர் நால்வரும் சங்கரரிடம் வந்து, அவரால் உபசரிக்கப்பெற்று தங்களிடத்து வல்லமையுற்றிருக்கும் உபமன்னியர் சிவதத்துவம், ததீசி சிவமான்மியம், கௌதமர் தேவகர்ம இரகசியம், அகஸ்தியர் சிதம்பர இரகசியம் என்பவற்றை உபதேசித்தார்கள். எல்லாங் கைவந்தவராயினும் சிஷ்ய பரம்பரை விளக்கத்தை முன்னிட்டு அவைகளை அங்கீகரித்தனர். அக்காலத்து சங்கரரைத்தரிசிக்கவந்த பல நாட்டினருக்கு அவ்வவர்களின் இஷ்டகாமியார்த்தங்கள் கிடைக்கப்பெற்றுக் களித்தார்கள். இவரால் துதிசெய்யப்பட்ட நூல்களை பக்தியுடன் சிரவணஞ்செய்பவர்களுக்கு வறுமையும் நோய் முதலிய இடையூறும் தொலைந்துவந்தன.

அந்தச்சமயத்தில் ஆரியாம்பையானவர் தம்புத்திரர்க்கு விவாகஞ்செய்யும் எண்ணத்தால் வந்திருக்கும் உபமன்யராதி முனிவர்களிடஞ்சென்று, தம் அபிப்பிராயத்தை வெளியிட்டனர். திரிகாலமுமுணர்த்தவல்ல அம்முனிவர்களை நோக்கிய அகஸ்தியமுனிவரானவர், அம்மையே! "அநேக ஜன்மத்தில் அநுஷ்டிக்கப்பெற்ற உத்தம புண்ணியங்களெல்லாம் ஒருங்கே பலன்கொடுக்க ஆரம்பித்த வழியன்றோ இச் சங்கரர் உமக்குப் புத்திரரூபமாய் அவதரித்திருக்கின்றனர். உங்கள் குலத்தவர்யாவரும் இவர் பிறத்தலாலேயே அடைய வேண்டிய ஸ்தானத்தை அடைந்தார்கள். உமது கருத்து நிறைவேறாது. இவ்வெண்ணத்தைவிட்டு பரமசிவத்தைத் தியானஞ்செய்வதே மேன்மை" எனக்கூறி மறைந்தனர். அப்போது சங்கரருக்கு எட்டு வயதாயிற்று.

## சங்கரர் சந்யாசம்.

பின்னொருநாள் சங்கரப்பெருந்தகையானவர் வைராக்கிய ஞான உபரதியின் பலத்தாற் சந்யாசத்தினையடைய எண்ணங்கொண்டு, தனியாயுள்ள தன் தாயின் சமாதானத்தை விரும்பினவராய், தாயினிடத்துக் குடும்பத்தின் கஷ்டத்தையும், துறவின் மேம்பாட்டினையும் எடுத்துக்கூறினர். அத்துடன் பல வேதியர்களின் மூலமாயும் தெரிவிக்கும்படியும் செய்தனர். அதைக்கேட்ட ஆரியாம்பை அதற்கிணங்காதவராய் ஜனகர், வசிஷ்டர், சாற்காரமுனிவர் முதலியோர்களின் சரிதங்களைக்கூறி கிருகதருமத்திற் பிரவேசிக்கவேண்டுமெனச்சொல்லினர்.

பின்னோர்தினம் சங்கரர் துறவுபூண அதிவிருப்பத்துடன் முயற்சிப்பதை உணர்ந்த நாரதர், தத்தாத்திரேயர் இருவரும்வந்து தங்களுடைய விஷ்ணு சப்பிரதாயத்துக்கு விரோதமுண்டாகாதபடி சங்கரரைத் தனியிடத்திருத்தி, விஷ்ணுதத்துவ இரகசியங்களையும், வைஷ்ணவ சம்பிரதாய மார்க்கங்களையும், அம்மார்க்கம் உலகிற் பரவுதற்கு வேண்டுவனவற்றையுந் தெரிவித்து வாழ்த்திச் சென்றார்கள். அன்றிரவில் எமதர்ம அரசன் சங்கரர்முன்தோன்றி தோத்திரஞ் செய்து சென்றனன்.

மறுநாட்காலையில் தாயுடன் தான் ஆற்றில் ஸ்நானஞ்செய்துகொண்டிருக்கையில், சங்கரர் காலைப்பற்றி ஓர் முதலை இழுக்கத்தொடங்கியது. அதன்வயப்படாதபடி சங்கரர் இதுவே தருணம் என நினைந்துக் கரையினிடத்துள்ள தன் தாயைக்கூவி, "முதலைவாயிலகப்பட்டுச் சந்யாசமின்றி என்ஜன்மம் வீணாகின்றது; இத்தருவாயில் நீர் சந்யாசத்துக்கு உத்திரவுகொடுத்தால் இன்னும் எட்டு வருஷம் இச்சரீரத்துடன் ஜீவிப்பேன்" என்று கூறினர். அப்போது ஆரியாம்பையானவர் சந்யாசத்துக்கு உத்திரவு கொடுக்காதவராய் சகிக்கமுடியாத துக்கத்துடன் அழுதனர். கரையின்கண் ஜபஞ்செய்துகொண்டிருந்த வேதியர்கள் சங்கரரின் விடுதலையின்பொருட்டு அவரவர்களின் இஷ்டதேவதா மந்திரங்களை அதிக விரைவாக ஜபஞ்



செய்தார்கள். சிலர் துறவுக்கு உத்திரவளிக்கும்படி அவ்வம்மையாரைக் கட்டாயப்படுத்தினார்கள். சந்யாசம் என்றவுடன் துக்கசமுத்திரத்தில் மூழ்கும் அவ்வம்மையார் செவியிற்படும்படி அசரீரியானது சங்கரர் இன்று சந்யாசஞ்செய்வரேல் இன்னும் இத்துணைக்காலம் பூமியிலிருப்பரெனக்கூறியது. அதைக்கேட்ட ஆரியாம்பையார் சந்நியாசியாகிப் பிழைத்திடுகவென்று சங்கரரைநோக்கி உத்திரவிட்டனர். தாயின் கட்டளையைப்பெற்ற அக்கணமே சங்கரர் எல்லாப் பூதங்களுக்கும் அபயம் என்ற அர்த்தத்தோடமைந்த மந்திரத்தைச் சொல்லி இருகரங்களையும் உயர்த்தினர். அப்போது சங்கரர் பாதஸ்பரிசத்தையடைந்த நாரதர் சாபத்தால் முதலையாகிய சுரக்கிராகி என்ற கந்தர்வனானவன் சாபமொழிந்து, எதார்த்தவடிவம் பெற்று, சங்கரரைச் சேவைசெய்து துதித்து தன்னுலகம் போய்ச்சேர்ந்தான். இதைக்கேட்ட யாவரும் ஆச்சர்யத்தை அடைந்தார்கள்.

கரையின்கண்வந்த சங்கரர் தாயைநோக்கி, நான் இனி ஓரிடத்திருக்கலாகாது யாத்திரைக்குச் செல்கிறேன் என்றனர். அதைக்கேட்ட ஆரியாம்பையார், இவ்வூரினிடத்தே வசிக்கவேண்டுமெனச் சொல்லினர். அதற்குச் சங்கரர், சந்யாசியாவான் பிறந்தவூரில் ஒருநாளும் இருக்கலாகாதென்பதையும், சரீரத்தை இரட்சிப்பதற்கு பிராரப்தகர்மம் இருக்கின்றதென்பதையும், பூர்வீக சொத்துக்களைப் பற்றியும் எடுத்துக்கூறி, அவ்வம்மையார் கேட்டுக்கொண்டபடி தேகவியோககாலத்து தானேவந்து செய்யவேண்டுவனவற்றைச் செய்துமுடிப்பதாக வாக்களித்துத் துறவைமேற்கொண்டு புறப்பட்டு, அன்றிரவு முற்கூறிய பூரணவாகினி நதியாற் சேதப்பட்டுள்ள கிருஷ்ணன் ஆலயத்திற்றங்கினர். அன்றிரவிற் பிரத்தியக்ஷமாகி தன்னைச் சரியானவிடத்தில் ஸ்தாபிக்குபபடி கேட்டுக்கொண்ட கிருஷ்ணபரமாத்மாவை காலடியில சரியானவிடத்திற் பாதசாரியாய் நடந்துவருமபடி.செய்து ஸ்தாபிதது, "நிர்தஸ்தவம" என்பதைச் செய்து அதனாற் புதையல்களை எடுக்கும்படி காணபிவித்து, அதனுதவியால் அவ்வாலயத்திற்குச் செய்யவேண்டிய பூஜை உற்சவங்கள் விதிப்படி நடக்குமாறு திட்டஞ்செய்து நியமித்துச்சென்றனர். இப்போதும அவராற் கூறப்பட்ட நிர்திஸ்தவம் என்பதனை பக்தி சிரத்

தையுடன் எவர்கள் ஸ்தோத்திரஞ் செய்கின்றார்களோ அவர்கள் இச்சித்த பலனை அடையப்பெறுகிறார்கள்.

அப்போது இக்கலியின்கண் ஆன்றோர்களால் விலக்கப்பட்டுள்ள சந்யாசத்தினை இவர் எப்படிக்கொள்ளலாமென அங்குள்ள ஸ்திரீதாமன் முதலிய ரிஷி கூட்டத்தவர் கூறித் தடுத்தார்கள். அதற்குச் சங்கரரானவர் எச்சரீரத்திலுள்ள புத்தி விருத்தியானது சர்வநாம ரூபாதி வடிவ ஜகத்துமித்தை என்ற மார்க்கத்தாலுண்டாகும் தீவிரதர வைராக்கியம் எப்போதுண்டாகுமோ அச்சரீரத்துக்கு அப்போதே சந்யாசமாம் என்ற தீர்மானத்தை சாஸ்திரம் யுக்தி அநுபவம் என்ற பிரமாணங்களுடன் எடுத்துக்காட்டி "சந்யாசோத்தாரம்" என்னும் நூலைச்செய்து சந்யாசத்தை ஸ்தாபித்து, தடுத்த விருத்த வேதியரனைவர்க்குஞ் சந்யாசத்தைக் கொடுத்து அப்போது அவர்களாலிட்ட சந்யாசப் பிரதிஷ்டாபனாசாரியரென்ற பட்டத்தையும் புகழையும் ஏற்று பிரஹ்ம வடிவமாயிருந்தனர்.

தாயின கிருபையையும் கிருஷ்ணன் அருளையுமடைந்த அச்சங்கரத் துறவியானவர், அதிகாலையில் நாராயண ஸ்மரணையுடன் பிரத்தியகபின்ன பிரஹ்ம நிஷ்டையுடையவராய், யானெனதென்னும் தன்மையின்றிய வைராக்கிய உபரதியுடையவராய், பரம சாந்தம் முதலிய குணவடிவ பிரஹ்ம தேஜஸால் பிரகாசிக்கப்பெற்றுத் தண்டு கமண்டலமேந்திப் புண்ணிய க்ஷேத்திரம், ஆறு, குளம், வனம், மலை, குகை, தவத்தரிணுச்சிரமம் முதலிய விடங்களிற் பேதமின்றியவராய், உலகத்தவர்களை ஈடேற்றும் பொருட்டுத் தானுமோர் ஆசிரியரை அடையவேண்டுமென்ற இச்சையுடையவராய் சஞ்சரித்தனர். விபூதி, உருத்திராக்கம் பூண்டு சத்துவ குணத்தராய், உபநிடதவாராய்ச்சியுள்ள தவத்தரிணுச்சிரமங்களோடு கூடிய நர்மதை ஆற்றங்கரையினிடத்துச் சங்கரர் ஆசிரியனைநாடித் தியானநோக்கி விருந்தனர். அப்போது அவர் ஆதிசேஷாவதாரமாகிய கோவிந்தாசாரிய ஸ்வாமிகள் பிரஹ்மக்ஞான யோகத்திலிருப்பதாய் உள் நோக்காலறிந்து விழித்தனர். அப்போது அவ்விடத்துண்டாகிய "ஆசிரியனைப் பெற்றவனானாய்" என்ற அசரீரியைச் செவியுற்று அங்குள்ள குகையருகே பக்தி சிரத்தையுடன் காத்துச் சஞ்சரித்துவந்தனர்.



## கோவிந்தாசாரியர் வரலாறு.

வைகுண்டத்தில் ஓர் நாள் ஸ்ரீமந் நாராயணனுடைய பாரம் பொறுக்கலாற்றாத ஆதிசேஷன் மிகவும் வருந்தி பகவானைச் சிந்தித்தனர். அதற்கு மஹா விஷ்ணுவானவர் நாம் இன்று சிதம்பரத்தில் சுத்த பிரஹ்மக்ஞான தத்துவ இரகசியத்தை உணர்த்தும் சிவபெருமானுடைய ஆநந்தக்கூத்தைத் தரிசித்த சந்தோஷத்தால் உனக்குப் பாரம் அதிகமாயிற்று என்று கூறினர். அதைக்கேட்ட ஆதிசேஷனவர் தாமும் அத்திரு நடனத்தைத் தரிசிக்கும் இச்சையுடையவராய் பகவானை வேண்டினர். பகவானுடைய உத்திரவைப் பெற்று சிதம்பரஞ் சென்று பரமசிவத்தின் திருநடனத்தைத் தரிசித்து ஆநந்த பரவசராய், மன வாக்கு காயங்களாற் தியானரூப சேவையைச் செய்து, பரமசிவத்தின் கட்டளைப்படி பதஞ்சலி முனிவராகவாகி பாணினி வியாகரணத்திற்குப் பாஷியஞ்செய்தனர்.

அவ் வாதிசேஷனான பதஞ்சலியானவர் தாம்செய்த பாஷியத்தை தன்னிடத்துவந்த ஆயிரஞ் சிஷ்யர்களுக்கு, தனக்கும் சிஷ்யர்களுக்கும் மத்தியில் திரையிட்டு, திரையை விலக்காதவாறு வரம்பு செய்து தனது எதார்த்தவடிவ ஆயிரஞ் சிரங்களாலும் அவ்வாயிரவருக்கும் உபதேசஞ்செய்து வந்தனர். ஓர்நாள் பாடம்நடக்கும்போது குருவின் ஆற்றலுக்குச் சந்தோஷமடைந்த ஓர் சிஷ்யரானவர் திரையை விலக்கினர். குருவினுடைய ஆயிரம் பணாமுடிகளினின்றுங் கிளம்பிய விஷச்சுவாலையானது சிஷ்யர் தொழாயிரத்துத் தொண்ணூற்றொன்பது பெயரைச் சாம்பராக்கியது. அத்தருவாயில் ஜல விசர்ச்சனத்திற்குச் சென்றிருந்துவந்த சிஷ்யரொருவரே தப்பினர். அவரைப்பார்த்த குருவானவர் கோபங்கொண்டு, "சாந்திபாடம் முடியுமுன் நீ சென்றதால் பிரஹ்ம ராக்கதனாகக்கடவாய்" என்று சபித்தனர். சாபத்தை அடைந்த அச்சிஷ்யர் தன் குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டனர். அவ் வேண்டுகோளுக்கிணங்கிய ஆதிசேஷபகவான், எந்த மனுஷ்யனாவான "பச்" என்னும் பகுதிக்கு நிஷ்டையில் "பக்வம்" என்று விடைபகர்வனோ அவனுக்கு நான் கூறிய பாஷியத்தை உபதேசிப்பாயாகில் உன் சாபம் நீங்கும்

என்று அநுக்கிரகித்தனர். விமோஜனத்தை அடைந்த அச்சிஷ்ய சாபத்தால் வந்த பிரஹ்மஹத்தி சரீரத்தையடைந்து ஓர் ஆலமரத்தில் தங்கி, அங்கு வருபவர்களில் எவர்கள் தம் கேள்விக்குப் ‘‘பசிதம்’ என்று சொல்வார்களோ அவர்களைப் புசித்துக்கொண்டிருந்தனர். ஓர்நாள் உஜ்ஜினிபுரத்திலிருந்து வந்த ஆதிசேஷனம்ஸமாக ஜனித்த சந்திரகுப்தன் என்ற ஓர் அந்தணனை பச் என்பதைப்பற்றிக் கேட்கும்போது பக்வம் என்று பதிலுரைத்தான். அவருக்கு ஆதிசேஷராய தன் குருவின்கட்டளைப்படி பாஷியத்தை உபதேசஞ்செய்து சாபத்தையொழித்துச் சொர்க்கலோகஞ்சென்றனர்.

சந்திரகுப்தரானவர், அப் பாஷியத்தை ஆலிலையிலெழுதி மூட்டையாக்கித் தன் ஊருக்குப்போகும்போது இடையில் நித்திரை செய்த சமயம் ஓர் ஆடு சிலவற்றைத்தின்றது. மீந்த இலைகளைச் சோதித்துக்கொண்டிருக்கும்போது நால்வகை வர்ண நான்கு கன்னியர் இவரிடம் நோக்கங்கொண்டார்கள். அவர்களை மணந்தனர். அவர்களிற் பிராஹ்மண ஸ்திரீயிடம் வரருசியும், க்ஷத்திரியமாதிடம் விக்ரமார்க்கனும், வைசியப்பெண்ணிடம் பட்டியும், சூத்திர கன்னிகையிடம் பர்த்ருஹரியும் பிறந்தார்கள். அந்நால்வர்க்கும் பாஷியத்தை உபதேசித்து, தாம் வியாசரின் சிஷ்யருக்குச் சிஷ்யரான கௌடபாதாசாரியரிடம் பிரஹ்மாத்ம ஐக்கிய தத்துவக்ஞான உபதேசம் பெற்று, பிரஹ்மநிஷ்டையில் தற்பரராய் கோவிந்த பகவத் பாதாசாரியர் என்ற திருநாமத்துடன் வியாசபகவான் கட்டளைப்படி வேத பாஷியம் வெளிவரும் எண்ணம் சித்தியாகுமாறு அக்குகையில் தியானரூபமாயிருந்தனர்.

## சங்கரர் குருவையடைதல்.

பிரஹ்மக்ஞான வடிவினராய கோவிந்த பகவத்பாதரானவர் சங்கரர் வந்திருப்பதை ஞானதிருஷ்டியாலுணர்ந்து வெளிவந்தனர். அப்போது சங்கரர் உடனே எழுந்து விதிவடிவ நமஸ்கார முதலியவற்றாற் குருசேவைசெய்தனர். அப்போது கோவிந்தாசாரியர் சங்கரரைப் பார்த்து நீ யாரென வினவினர். ஆதிசங்கரரானவர், ப்ருதிவியாதி ஐம்பூதமன்று, அதன்குணமன்று, அவற்றாலாய புத்தீந்திரிய பிராண மனோ வாக்காதி சரீரங்களன்று, உள்வெளிக் கரணத்



துடன்சென்று சரீரத்தை யானென்னவும் நாமரூபாதி பதார்த்தங்கள் என்னுடையதெனவும் கிளம்பிச் சம்பந்தத்தையடையும் (ஆத்மாவால் அவித்தையிற் பிரதிபிம்பமய ஆபாசவடிவ) அகங்காரமன்று; இவற்றிற்கெல்லாம்சாக்ஷியாய் ஆதார அதிஷ்டானவடிவமாய் சச்சிதானந்த வடிவ அளவும் அழிவுமில்லாத எண்ணிறந்த சக்திகளோடு எல்லா வல்லமையும் வாய்ந்த அத்வைத வியாபக பிரஹ்மமாகிய ஞான ஸ்புரண நான் என்று பதிலளித்தனர். சங்கரரால் விடைபகர்ந்த வாக்கியங்கள் தர்க்க வியாகரணாதி லக்ஷணங்களமைந்த ‘‘தஸஸ்லோகி’’ எனப் பெயர்வாய்ந்த ‘‘நிர்வாணஸதகம்’’ என்ற ஓர் நூலாயிற்று. அந்நூலுக்கு சங்கரப்பெருந்தகையாருடைய பரம்பரையில் வந்த பிரஹ்மவித்தாய மதுசூதன சரஸ்வதியார் சித்தாந்த பிந்துவெனப் பெயர்பெற்ற விருத்தியுரைசெய்து வெளியிட்டனர்.

சங்கரரின் வாக்கியத்தைச் செவியுற்ற கோவிந்த பகவத்பாதர் உள்ளங்குளிர்ந்தவராய் ஹே! சந்யாசச்சிறுவ! உன் வாக்கு வேத முடிபை உணர்த்துவதுடன் உன் பிரஹ்மதேஜஸானது யாவர்க்கும் எல்லா நன்மையையும் பயக்கத்தக்கதாக விருப்பதனால், சிவபிரானே உனது வடிவமாய் அவதரித்தாரென நினைக்கின்றேன்; உனக்கு யான் உபதேசஞ் செய்யவேண்டிய தொன்றுமில்லை; ஆயினும் உன் விருப்பத்தின் பொருட்டும், வேத ஆணையின்பொருட்டும், மரபு விளக்கத்தின் பொருட்டும் உன்னை சிஷ்யனாகக்கொள்கின்றேன் என்றுகூறி, மஹாவிஷ்ணுவின் அவதாரமாய வியாசபகவான் புத்திரராகிய சுகருக்கும், அவர் எனக்கு உபதேசஞ்செய்த ஞானாசாரியராய கௌடபாதருக்கும் உபதேசித்த ஷட்விதலிங்க தாற்பரிய யுக்திகளாற் கிரகிக்கவேண்டிய சிரவண மனன நிதித்தியாசன வடிவ மஹா வாக்கிய விசாரணையின் ஏதுவால் கிடைக்கப்பெறும் அந்தர்முக விருத்தியில் ஐக்கியமாகும் பிரஹ்மமும், ஆத்மாவும் ஒன்றென்னும் ஞானத்தையும், விதியோடுகூடிய சந்யாசத்தினையும் கொடுத்தருளிக் குகைக்குட்சென்று பிரஹ்மநிஷ்டையிலமர்ந்தனர்.

## சங்கரர் கமண்டலுவால் பிரவாகத்தைக் கிரகித்தல்.

அதன் பின்னர் சங்கரரானவர் சந்யாசத்தை வரம்புடன் மேற்கொண்டு, பக்கத்துள்ள ரேவாநதி தீரத்து வேதியராற் பூசிக்கப்

பெற்று, அவர்களுக்கு வேதமுடிபுப் பொருளையுபதேசித்து, கிருஹஸ்தனைத்தவிர ஏனைய ஆசிரம வாசிகள் அவசியம் அநுஷ்டிக்கவேண்டிய சாதுர்மாஸ்ய விரதத்தைப் பல வேதியர்கள் சூழ ஆங்கு அநுஷ்டித்து வந்தனர். ஒருநாள் அதிக மழையின் ஏதுவால் எல்லையின்றி பேரிரைச்சலுடன் பெரிய வெள்ளமானது மேற்கிலிருந்து கிழக்கே வேதியர்கள்கூட்டத்தைநாடிப் பக்கங்களிலுள்ள மரங்களைப் பெயர்த்துக்கொண்டு வந்தது. பிரளயத்துக்குச் சமானமான அவ்வெள்ளத்தினால் மரணபயத்தையடைந்த வேதியர்களை ஆதியாகவுடைய யாவரும் சகிக்க முடியாத துக்கத்துடன் கதறினார்கள். பிரஹ்ம நிஷ்டையிலிருக்கும் தமது குருவிடம் தெரிவிக்கக் கூடாமையை யுணர்ந்த சங்கரரானவர் மந்திர மொன்றைச் சொல்லித் தன் கமண்டலுவை அப்பெரிய வெள்ளத்தின்முன் வைத்தனர். அப்போது அக்கமண்டலமானது எவ்வாறு அகஸ்தியர் சமுத்திர ஜலத்தை அங்கையிலடக்கினரோ அவ்வாறே அவ்வெள்ளத்தையும் அது தன்னுள் அடக்கிக்கொண்டது. இதைக்கண்ட வேதியர் முதலிய யாவரும் துக்கத்தினின்றும் அத்யந்தம் விடுபட்டவர்களாய் சங்கரரை மனது வாக்குக் காயங்களாற் சேவைசெய்திருந்தார்கள்.

## கோவிந்தாசாரியர் சங்கரரை வேதபாஷ்யஞ்செய்யக் கட்டளையிடல்.

மற்றோர் தினம் தேசிகரும், தானும் உச்சி நேரத்தில் நீராடி வரும்பொழுது சூரிய கிரணத்தால் வருந்திய தேசிகர் மேனிக்குச் சங்கரர் தமது காவித்துண்டத்தை ஆகாயத்திலெறிந்து குடையாக நிழலைச் செய்து வரும்படி செய்தனர். அதன் பின்னர் ஓர் தினம் கோவிந்தபகவத்பாதர் சங்கரரை அழைத்து பதரிகாசிரமத்தில் நடந்த அத்திரிமஹரிஷியின் யாகத்துக்குத் தான் போயிருந்ததும், ஆங்கு வந்திருந்த தனது பரமாசாரியரான வியாசபகவானிடம் அவராற் செய்யப்பட்ட பிரஹ்ம சூத்திரம் முதலியவற்றிற்குப் பாஷ்யமிருக்கின் போலியாகிய மதங்களும் மதவாதியருமொழிந்து மோக்ஷத்துக்கு, ஏதுவாகுமென்று தான் கேட்டுக்கொண்டதையும், அவர் தன்னைச் சிவத்தியானஞ் செய்து வரும்படியாயும், எக்காலத்தி



லுனது சிஷ்யர்களில் எவன் பெரிய வெள்ளத்தைத் தன் கமண்டலத்திலடக்கும் வல்லமை யுடையவனோ அவனை பாஷ்யத்தைச் செய்தருளுவ னென்று கூறினரெனவும், அதை நின்பாற் கண்டனமாதலால் எனது பரம ஆசாரியராய வியாச பகவானைச் சந்தித்துத் தரிசித்து உன் சாமர்த்தியத்துக்குத் தக்கவாறு பாஷ்யங்களையும் மற்றும் செய்யவேண்டுவனவற்றையும் செய்து முடித்து, மரபு விளங்கி வரும்படி செய்யக்கடவா யென்று கட்டளையிட்டு மிகுந்த அன்புடன் வாழ்த்தினர்.

## சங்கரர் காசிக்குச் செல்லல்.

அப்போது சங்கரர் குருவின் பணியை சிரசிற்றாங்கி சுற்றிவந்து அவருடைய பாதுகையைச் சேவை செய்து, பலதரம் பூமியிற்பணிந்தெழுந்து, குருவை மனத்திலுள் தியான வடிவமாயிருத்தி, காசிக்குச் சென்று அங்கு உத்திரவாகினியான தேவகங்கையைத் தரிசித்துக் கங்காஷ்டகம் முதலிய ஸ்தோத்திரங்களைச் செய்து, சர்வதீர்த்த வடிவமாயுள்ள பெரும் புண்ணியம் வாய்ந்த மணிகர்ணிகையிற் றோய்ந்து, துண்டிராஜ கணபதி, காலபைரவர், விஸ்வநாத மூர்த்தி, விசாலாக்ஷி, அன்னபூரணி, பிந்துமாதவன் முதலிய தேவதைகளோடு ஐம்பத்தாறு விநாயக மூர்த்தங்களையும் சேவித்து, க்ஷேத்திர யாத்திரைகளை முடித்து, அங்குவந்த பட்டாசாரியருடைய சந்தேகத்தை நீக்கி, ஆங்கு சந்யாச ஆசிரமத்தை நிலைக்கும்படி செய்து, பிரஹ்மஞானம் சந்யாசம் என்பவற்றை விதிப்படி அநுஷ்டிக்கும் முறைகளையும் உபதேசஞ் செய்து, பக்கத்திலுள்ள தொண்ணூற்றாறாயிரம் த்வைதிகளை அத்வைத மார்க்கத்திற்றிருப்பியும், தர்க்கம், மீமாஞ்சகம், சாங்கியம் முதலிய மதங்களைக் கண்டனஞ் செய்து, பன்னீராயிரஞ் சிஷ்யர்களாற் சூழப்பெற்று அக்காசிப்பதியின்கண் ஒன்பது திங்களிருந்தனர்.

## சங்கரரிடம் சனந்தனர் சிஷ்யராயடைதல்.

ஓர்நாளிரவில் பிந்து மாதவன் பிரசன்னமாகி நாளை நம் அம்சமாகப் பிறந்த பிரஹ்மசாரி யொருவன் நின்னிடம் சிஷ்யனாகவரப் போகிறானென்று சங்கரரிடம் தெரிவித்தனர். அதற்கொத்ததாக மறுநாட் கங்கைக் கரையில் நீராடச் சென்ற சங்கரரை வியாசர் காசி

யினின்று தென்திசையிலிருந்து ஆத்மக்ஞானத்தை நாடி குருவைத் தேடிக் காசிக்கு வந்திருந்த சனந்தன ரென்ற பிரஹ்மசாரியொருவன் தரிசித்த மாத்திரத்தில் குருபாவ முண்டாய் சிஷ்யாசார ஒழுக்கத்தின்படி சரணாகதி யடைந்தனர். அவர் கைகளில் ரேகை வடிவமாய விஷ்ணுவினம்ஸமாகிய சங்கம், சக்கரங்களோடு பலவிதமான லக்ஷணங்களும் பிரகாசித்தன. இவரே சங்கர குருவின் பிரசாதத்தாற் பத்மபாதரென்ற திருநாமத்தையடைவர்.

இச்சனந்தனருடைய ஒழுக்கம், அடக்கம், விசாரணை, குருபக்தி இவைகளிற் சிறந்தவராயிருப்பதை யுணர்ந்த சங்கராசாரியர், அவருக்கு பிரஹ்மாத்ம ஐக்கியத்தை யுணர்த்தும் தத்துவக் ஞானத்தை விதிப்படி யுபதேசித்து, தனது ஆசிரியரால் பூஜையின் பொருட்டு தன்னிடம் கொடுக்கப்பெற்றதும், பரம்பரையாக வந்ததுமான ஸ்ரீகைலாச சந்திர மௌளீச்வர சிவலிங்கம், அரதன கர்ப்ப கணபதி, ஸ்ரீசக்கரம், நவக்கிரக யந்திரம், நரசிங்க சாளிக்கிராமம் இவற்றை அவரிடம் ஒப்புவித்தனர். குருவின்பால் கிடைக்கப் பெற்ற பஞ்ச மூர்த்திகளையும் சனந்தனர் கைக்கொண்டு, வேதாந்த வடிவ உபசார தர்ப்பண மென்னும் பூஜா விதியை ஏற்படுத்தித் தானும் அர்ச்சித்து அத்தகைய பஞ்சாயதன பூஜா விதியை யாவருக்கும் உபதேசித்து எவர்க்கு எத்தெய்வத்திற் பக்தியுளதோ அவர்க்கு அத்தெய்வத்தினிடத்து (அத்வைதத்திற்கு முரணாது ஒத்தபடி) பக்தியுண்டாக்கி, அவரவர்களிச்சித்தபடி சித்திகளைக் காட்டி யாவராலும் புகழப்பெற்றிருந்தனர்.

## விஸ்வநாத மூர்த்தி சங்கருடன் சம்பாஷணை செய்தல்.

அங்கொருநாள் சங்கரர் சிஷ்யக்கூட்டத்துடன் கங்கையில் நீராடி வந்தனர். அவர் எதிரில் ஓர் சண்டாளன் நான்கு நாய்களைப் பிடித்துக் கொண்டு கள் குடத்தைத் தலையிற்றூங்கி, வெளியாசார மில்லாதவனாய் எதிரில் வந்தான். அதனைக் கண்ணுற்ற சங்கரர் வெளிநோக்காய் விலகும்படி சாடை செய்தனர். வந்தவன் விலகாதவனாய் எதிரில் நின்று ஏ சந்யாசி! யாரை எங்கே போகச் சொல்லுகின்றனை? அந்தச் சரீரத்தை விட்டு இந்தச் சரீரத்தைப் போகச் சொல்லுகின்றனையா? அல்லது அந்த ஆத்மாவைவிட்டு இந்த ஆத்மாவைப் போகச்சொல்லுகின்றனையாவென்று கேட்டான். அதற்குச் சங்கரர் இவருடைய பூரக்கருத்தையும் அறியும் எண்ணமுடையவராய் யாதொரு பதிலும் சொல்லாமலிருந்தனர். இதைப்பார்த்த சண்டாளனானவன் அந்தச் சரீரத்தை விட்டு இந்தச் சரீரத்தை விலகிப்போகச் சொல்லுவாயேல், இரண்டு சரீரமும் ஸ்திரீ புருஷர்களின் ஏதுவால் சுக்ல சுரோணித வடிவமாயமைந்த மயிர் தோல் நரம்பு எலும்பு மாமிஸம் இரத்தம் சுக்லம் முதலியவற்றாற் கட்டப்பெற்றது. இதற்கு உயர்வுதாழ்வு இல்லை. இந்தச் சரீர சம்பந்தியான ஆத்மாவைப் போகச்சொல்லுவதாகவிருந்தால், ஆத்மா ஏகம் வியாபகம் என்று வேதங்களிற் கூறப்படுகிறது. இவைகளை எல்லாம் உள்ளபடி உணர்ந்த சந்யாசியாயிருந்தும், பிராணிகளிடத்து இத்தகைய் பேத புத்தி உனக்கு எப்படி யுண்டாயிற்று? பிரஹ்மக்ஞானி என்று சந்யாசந்தாங்கி த்வித மார்க்கத்திலிருந்து கொண்டு அத்வைதிகளைப் போன்று பிறரை வெருட்டுவது தக்கதல்லவென்று கூறினன்.



இதைச் செவியுற்ற சங்கரர் பிரஹ்மாமுதல் புல் ஈறாகவும் பஞ்சபூதாத்மக சர்வஜகத்தினிடத்தும் எங்கும் நிறைந்துள்ள சச்சிதானந்த அத்வைத வியாபகவடிவ பிரத்தியகபின்ன பிரஹ்மக்ஞானத்தை எவன் விதிவடிவ குருசேவை வாயிலாயுணர்ந்து அநுபவத்தையடைவனோ அம்மஹாத்மா மறையவனாயினும், சண்டாளனாயினும், மற்றும் யாராயிருக்கினும் அவனை யான் குருவெனக்கொள்ளுவேனென்னும் தன் கருத்தை "மனீஷாபஞ்சகம்" என்ற பெயர்வடிவச் செய்யுட்களால் ஸ்தோத்திரஞ் செய்தனர். அப்போது சண்டாளவேஷ மறைந்து, நான்கு நாய்களும் வேததேவதைகளாய் துதியுடன் நிற்க, சந்திரன் சடையிற் பிரகாசிக்க, கட்குடம் கங்கையாகப்பரந்துவிழ ரிஷபாரூடராய் ஆகாயத்திற் சிவபிரான் காட்சிகொடுத்தனர். சங்கர குருவானவர் ஆநந்தபாஷ்பம் ததும்பப்பெற்றவராய், சிவோகம் என்ற மகுடத்தோடு கூடிய செய்யுட்களாலும், சிவம் ஞானம்; சிவம் பூரணம், சிவம் அத்வைதம், சிவம் ஆனந்தம், சிவம் நிர்துக்கம், சிவம் நிருபாதிகம், சிவம் நிஸ்சங்கம் எனும் வேதாந்தசாரங்களடங்கிய செய்யுட்களாலும் நிறைந்த "சிவாத்ம பூரணானுபவ ஸ்தோத்திர

மஞ்சரி" என்னும் எட்டுவகை ஸ்தோத்திர சமஸ்கிருதப் பாக்களால் துதித்தனர்.

அதைக்கேட்ட விஸ்வநாதப்பெருமான் கருணைகூர்ந்து, தன் கையால் சங்கரரை ரிஷபத்தின்மேலேற்றித் தலையில் தன் அபய திருக்கரத்தைவைத்து, வலக்காதில் மஹாவாக்கியத்தை விதிப்படி உபதேசித்து, நமது கிருபையால் பிரஹ்ம சூத்திர பாஷியமியற்றி வியாசரைச் சம்மதிக்கும்படிகாட்டி, சர்வமத கண்டனங்களைச்செய்து, இந் நிலவுலகின்கண் குருபீடங்களை எஞ்ஞான்றும் குறைவின்றி இருக்கும்படி ஸ்தாபித்து, உலகாசிரியரெனப் பெயர்பெற்று முடிவில் நம்மிடம் வரக்கடவரென்று சொல்லி ஆசீர்வதித்தனர். அப்போது தேவர்கள் பாரிஜாதம் முதலிய மலர்களாற் புஷ்பமாரிபொழிந்து தேவ துந்துமி முழக்கினார்கள். அப்போது ஆகாயத்தினிடத்து பெரிய ஜோதியுண்டாயிற்று; அதிற் பரமசிவம்மறைந்தனர். இதைக் கண்ட சனந்தனரை ஆதியாகவுடைய நகரத்தார் யாவரும் அதிக ஆச்சர்யமும் அன்புமுடையவர்களாய் விஸ்மரணத்தையடைந்து சந்தோஷம் மேலிடப்பெற்றவர்களாய் சங்கரருடன் விஸ்வநாதர் சந்நிதியில் தரிசனைசெய்து, "சிவம் சத்தியம், சத்தியம் அத்வைதம்" என்ற வாக்கியங்களைக்கேட்டு ஆனந்தத்தில் மூழ்கினவர்களானார்கள். சங்கரர்க்கும் விஸ்வநாதமூர்த்திக்கும் அன்றுநடந்த விஷய சம்பாஷணைகளுக்கு ஆதிசங்கர பகவத்பாதாசாரிய ஸ்வாமிகளின் தினசரி சரிதை என்ற கிரந்தத்தினுள் "ஆனந்தபூமிகை" என்று பெயர் வளங்கப்பெற்று வருகின்றன.

## சங்கரர் பாஷியஞ்செய்ய பதரிகாஸ்ரமம் செல்லல்.

அதன்பின்னர் சங்கரர் வடதிசை யாத்திரைசெய்து, இமயமலையடைந்து அங்குள்ள ரிஷிகள் முதலானோருக்கு உபநிடதப் பொருட்களை கேட்டல், சிந்தித்தல், தெளிதல்களால் நிலைபெறுத்திப் பதரிகவனத்துட்சென்று, வியாசரைத்தேடிக் காணாதவராய் நரநாராயண பகவானை விதிப்படி சேவைசெய்தனர். அவர் பிரஹ்ம சூத்திரத்திற்கு பாஷியஞ்செய்து முடிக்கும்வரை வியாசர் பிரசன்னராகாரெனவும், நீர் செய்யும் பாஷியம் வியாசர் அபிப்பிராயத்துக்கு ஒத்ததாக இருக்குமெனவும், நின்மரபுளோர் யாவரும் நாராயண ஸ்மரணை



உடையவராகவே இருக்கும்படி கட்டளையிடவேண்டுமெனவும் கூறி, சமது தவமஹிமையையும் அளித்துப் பக்குவமான பழம் முதலிய ரிஷிகளின் அன்னங்களால் விருந்துபசரித்து ஆசீர்வதித்தனர். அப்போது ஆங்கு சங்கரரானவர் சனந்தனர் முதலிய சிஷ்யக் கூட்டத்தோடு பிரஹ்ம சூத்திரம், தசோபநிஷத், பஞ்ச ருத்திரோப நிஷத், நரசிங்கதாபனி, கௌஷீதகி பிராமண்யம், ஸ்ரீருத்திராத்யாயம், பகவத் கீதை, ஸனத்ஸுஜாதீயம், விஷ்ணுசகஸ்ரநாமம் இவைகளுக்கு அத்வைத சித்தாந்த பக்ஷமாக பாஷியங்களையும் ஆத்மபோதம், தத்வாலோகம், அபரோக்ஷானுபூதி, அத்வைத சகஸ்ரீ, உபதேசசகஸ்ரீ முதலிய நூதன வேதாந்த கிரந்தங்களையும் செய்து சனந்தனராதி சிஷ்யர்களுக்கு உபதேசித்து வந்தனர்.

## குருவின் பக்தியால் சனந்தனர் பத்மபாதராதல்.

இதைக் கேள்வியாலறிந்த பதரிகவனத்து ஆயிரம் முனிவர்கள் குரு பக்தியோடு வேதபாஷியங்களை சங்கரரிடம் ஓதியிருந்தார்கள். அப்பொழுது சனந்தனரிடம் சங்கர குருவிற்கு அதிக விருப்பமிருத்தலை யறிந்த ஏனைய சிஷ்யர்கள் பொறாமை அடைந்தனர். இதைத் தெரிந்த சங்கரரானவர் சனந்தனரின் குரு பக்தியை வெளியிடக் கருதியவராய், அச்சிஷ்யர்கள் முன்னிலையில் புஷ்பத்தின் பொருட்டு அக்கரையிற்சென்றிருந்த சனந்தனரை அழைக்கும்படி சொல்லினர். அதுகேட்ட சனந்தனர் மிக்க ஆழமும் அதிகப் பிரவாகமுமுள்ள கங்கை நதியின் குறுக்காகத் தரையில் நடத்தலைப்போன்று தண்ணீரில் நடந்து வந்தனர். அவரின் குரு பக்தியைக் கண்ணுற்ற பகீரதியார் தனதிருகையாலும் தாமரைப் புஷ்பங்களால் அவர் பாதம் எடுத்துவைக்குந்தோறும் தாங்கிவந்தனர். இதைப் பார்த்து அழுக்காறுகொண்ட சிஷ்யர்கள் யாவரும் தாங்கள் எண்ணியது குற்றமென்று மன்னிப்புக் கேட்டுக்கொண்டனர். சங்கரர் அவருக்கு பத்மபாதரெனப் பெயரிட்டனர். அதுமுதல் அவருக்கு அப்பெயர் நிலைத்தவாறாயிற்று.

## சங்கரர் பேத மதங்களைக் கண்டித்தல்.

அதன்பின்னர் சங்கரர் சிஷ்யக் கூட்டங்களுடன் சாஸ்திரங்களை எடுப்பித்துக்கொண்டு கேதாரம், ரேவணம், ஸ்வாலாமுகி, நேபாளம் இவைகளிலிருந்துவந்த அகோரர், இராமேசச்சர், நகுலேச்சர், பசுபதி, சித்துநாதர், சித்துவிலாசர், ஸ்ரீநாரதர், உக்கிரவைரவர், கபாலி, பிக்ஷு, சபரேச்சர், மிருகேந்திர நாதர், வாமகேச்சுரர், ஒட்டியாண சித்தர், சங்கிமேயச்சுரர், கோவர்த்தனர், ஜகன்னாதர், மிஹிராதித்தர், அருக்கனாதர் முதலியவர்கள் தங்கள் தங்களுடைய சிஷ்யக் கூட்டங்களுடன் தங்களுடைய பாசுபதம், காபாலிகம், வீரசைவம், சித்த இரகசியம், தேவிபாரமியம், மந்திரவித்யேஸ்வரீயம், சாத்தேயம், ராதாகிருஷ்ணம், சௌரம், காணபதம், வைரவம், குபேரம், காலவாதம் முதலிய மதங்களின் சித்தாந்த சம்பிரதாய விஷயங்களை எல்லாம் கூறிக்கொண்டு சங்கரர் யாத்திரை செய்த ஹரித்துவாரம், பிரஹ்ம கபாலம், காளிகட்டம், ஆரியாவர்த்தம், பாடலிபுரம், சிந்துகர்ப்பம், இந்திரப்பிரத்தம், அயோத்தி, பிரஹ்மா வர்த்தம், விஷ்ணுபாதம், நவத்வீபம், உத்தரகௌடம், பிரயாகை, சித்திரகூடம் முதலிய க்ஷேத்திரங்களில் வந்து தர்க்கஞ் செய்து ஞான தேசிகராய சங்கரரால் அவரின் பாஷியயுக்தி அநுபவ லக்ஷணங்களின் பிரக்கிரியைகளால் தோல்வியடைந்து தங்களுடைய மதாபிமானத்தை விட்டு விதிவடிவ குரு சேவையால் சங்கரரிடம் வேதபாஷியம் முதலியவற்றைக்கேட்டுக் குருவின் ஆக்ஞையால் அத்வைதிகளாய் தங்கள் இருப்பிடஞ்சென்று வேத பாஷியங்களைப் பரவச்செய்தார்கள்.

அதன்பின்னர் சங்கரரானவர் சோமநாதம், துவாரகை, வடமதுரை, கோகுலம் முதலியவிடங்களிலுள்ள விஷ்ணுவர்த்தனர், நிம்பாக்கர்,எச்சநாராயணர்முதலிய விஷ்ணுபக்தர்களையும், நந்திச்சுவாமி, மஹேச்சுரதீர்த்தர், சங்கரானந்தர் முதலிய சிவபாகவதர்களையும், ஸ்ரீ சுவாமி, பாஸ்கரபட்டர், ஸ்ரீபூஜ்யபாதர் முதலிய தேவிபாகவதர்களையும், ஆதித்தியதாசர், அபராக்கர், மிஸ்ரேச்சுரர் முதலிய சூரிய பாகவதர்களையும், பத்திரநாதர், கபிலேச்சுரர் முதலிய கணபதி பாகவதர்களையும், உக்கிரமூர்த்தி முதலிய வயிரவபாகவதர்களையும் வாதில் வென்று ஆறுலிங்கங்களால் சுருதியுக்தி அநுபவவடிவுமாய பாஷியங்களினுபதேசத்தால் அத்வைதிகளாக்கி பஞ்சாயதான அபேத சகுண நிர்க்குணவுபாசனைகளைப் போதித்து யாவரையும் விடுத்தனர்.



அதன்பின் தருக்கர், நையாயிகர் முதலியோர்களை வென்று கணாத கௌதமமதத்தினைக்கண்டித்து பிரஹ்மத்தின் தர்க்க யுக்திகளால் நிரீஸ்வரசாங்கியனையும், சுருதி யுக்தி அநுபவங்கட்கு விரோதமாயுள்ள சேஸ்வரசாங்கியனையும் வென்று அவர்களனைவரையும் பிரஹ்மக்ஞான மந்திரங்களால் அத்வைதிகளாகச்செய்து பட்டபாதாசாரியரால் க்ஷீணதசையடைந்து மீந்துள்ள புத்தர்கள் தங்கள் நூல்களுடன் வாதிடவந்தவர்களைத் தானியற்றிய பிரகிருதப்பிரகாசம், சியாதவாத கண்டனம், சப்தபங்கீபஞ்சனம், பிரத்தியபாதோத்தாரம், சர்வஞ்ஞ சாதனம், அத்வய விஞயக வாதகண்டனம் என்னும் பிரகரணங்களையுடைய "யுக்திசுலோகசட்கதி" என்னும் நூலின் சாரங்களால் புத்தர்கள் பூராவையும் வென்று பௌத்தமதம் தலையெடுக்காதபடி அந்நூலை யாவருக்கும் செவ்வனே பரவும்படி போதித்துக் காசி வந்து சேர்ந்தனர்.

சங்கரர் காசிப்பதியில் வந்தடைந்த இருபத்து நாலாயிரம் சிஷ்யர்களுக்கு வேத பாஷியங்களை உபதேசஞ் செய்தனர். அங்கிருந்த பாசுபதமத வாதியரை அவர்களுக்கு அங்கீகாரமாகிய சூதசம்ஹிதை, வேதபாஷியம் முதலியவற்றாற் பிரபஞ்சத்திற்குப் பிரஹ்மம் விவர்த்தோபாதான காரணமென்பதனை நிலை நாட்டி, கௌடபாத காரிகை முதலிய சிவாகமங்களனைத்திற்கும் அத்வைதமே ஆஸ்பதமானது என்பதனைக்கூறி அத்வைதிகளாகச்செய்து பிரஹ்மாத்ம ஐக்கிய தத்துவக்ஞானத்தினை நிலைநாட்டினர்.

## சங்கரர்க்கு வியாசர் வெளிப்படல்.

மற்றோர் தினம் சங்கரர் தன் சிஷ்யர்களுக்குச்சாரீரக மீமாம்ஸா பாஷியத்தினை உபதேசஞ்செய்துகொண்டிருந்தனர். அப்போது வியாசர் விருத்த வேதிய சரீரத்துடன்வந்து சங்கரரைப் பார்த்து நீர் யார்? என்ன கூறுகின்றீரென வினவினர். அதற்குச் சனந்தனர் முதலிய சிஷ்யர்கள் தங்களுடைய குருவெனவும் பிரஹ்ம சூத்திர வேதாந்த பாஷியத்தை எங்களுக்கு உபதேசிக்கின்றனர் எனவும் சொல்லினர்.

அதைச் செவியுற்ற பிராஹ்மணர் சங்கரரைப் பார்த்து பிரஹ்ம சூத்திரம் மூன்றும் அத்யாயம் முதற்பாதம் "ததந்தரப் பிரதிபத்தௌ" என்ற சூத்திரத்திற்கு நீ செய்திருக்கும் பாஷியத்தைக் கூறுதி என வினவினர். அதற்குச் சங்கரர் ஜீவாத்மா வேறு உடம்பினையடையும் போது சூக்ஷ்ம பூதமய பௌதிக லிங்க சரீரத்தால் தழுவப்பட்டுப் போகின்றானென்ற முடிவைத் தாண்டிச்சுருதியிற் கௌதமசைமினியின் வினாவிடைகளை யநுசரித்து தமது பாஷியத்தைப் பகர்ந்தனர். வந்த வேதியர் நூறு வகையாக வேறு பிரித்து வினவினர். அவற்றிற்கெல்லாம் பத்துப் பத்துத் திருஷ்டாந்தத்துடன் ஆயிர வகையாக தாஷ்டாந்தப்படுத்தி பதிலளித்து வந்தனர். இவ்வாறு இருவரும் எட்டு நாட்களாகத் தர்க்கம் நடந்து முடிவுறாமற் பின்னும் நடந்தது. அப்போது வெளிவந்துள்ள வேதத்தின் முடிபாகிய பரமார்த்த தத்துவ லக்ஷணங்களெல்லாம் பத்மபாதரைத் தவிர அங்குள்ள மற்ற யாவரும் செவ்வனே விளங்காதவர்களாக இருந்தார்கள். அந்தச் சமயம் ஏனைய சிஷ்யர்களெல்லாம் பத்மபாதரை நோக்கி இத்தகைய தர்க்கத்தைச் செய்யும் இவர் யாரெனக் கேட்கலாயினர். அதைக் கேட்ட பத்மபாதர் தியான நோக்கினால் நமது குரவர் பரமேஸ்வரர் எனவும், வாதிக்கும் வேதியர் வியாசரெனவும் கூறினர்.

அதைக்கேட்ட பிரசங்கத்திலிருந்த சங்கரபகவத்பாதர் ஞான நோக்காலறிந்து உடனே எழுந்துவணங்கினர். அத் தருவாயில் தனது எதார்த்தவடிவமாகிய தண்டு கமண்டல மரவுரி மான்தோல் சடை நீலமேனியுடன் வியாசவடிவத்தால் தரிசனந்தந்தனர். அப்போது சங்கரர் ஆனந்த பரவசராய் பரமாசாரியரைத் தரிசித்து, விதிப்படி சேவையைச்செய்து பத்மபாதரிடமிருந்த பாஷியங்களை அவர் முன்னிலையில் வைத்தனர். அவற்றை அவர் ஒரு முகூர்த்த காலம் செவ்வனே சோதித்துப்பார்த்து மார்பிலணைத்து நீ சிவசங்கரனாதலால் என் அபிப்பிராயப்படி பாஷியத்தை இவ்வாறுசெய்தனை; எனக்குள்ள சந்தேகங்களும் ஒழிந்தன; இப் பாஷியத்திற் குற்றமிருப்பதாக எவர்கள் தேடுகின்றார்களோ அவர்களுக்கு வீண் பிரயாசையே யொழிய யாதொரு பலனுமின்றாம் எனக்கூறி, இப் பாஷியம் நீடூழி வாழக்கடவது எனவும், ஒருவாறு காலத்தினால்



மனிதர்கள்புத்தி மாறுபடுமேல் அப்போதைக்கப்போது உனது சிஷ்ய பரம்பரையில் மஹாத்மாக்கள் தோன்றி பேதவாதங்களை நாசஞ்செய்து நிலைநாட்டுவரெனவும், தவிரவும் நீயொரு சந்யாசி மாத்திரமல்ல; சந்யாசிகட்கு அரசாக விளங்குவதோடு, என்னால் உனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற "வியாக்யான சிம்மாஸனாதீஸ்வரன், ஷட்தரிசன ஸ்தாபனாச்சாரியன், பூமண்டலாசாரியன், சர்வ தந்திரசுதந்திரன்" என்ற இந்த நான்கு பட்டங்களும் எஞ்ஞான்றும் இம்மண்ணுலகத்தும், கைலாய யாத்திரையில் விண்ணுலகத்தும் பிரஹ்மாவின் நான்குமுகங்களாலும் உன்னைப்புகழக்கடவது எனவும் கூறித் தன் கமண்டல தீர்த்தத்தாற் சங்கரரை அபிஷேகஞ் செய்வித்து வாழ்த்தினர். அப்போது பிந்து மாதவன் காலபைரவர் முதலிய காசியின் கண்ணுள்ள எல்லா ஈஸவடிவ விக்ரகங்களும் அசரீரியும் "ததாஸ்து ததாஸ்து" என்ற பதத்தினை உச்சரித்தன. அதனால் எங்கும் எதிரொலி உண்டாயிற்று. அப்போது காசி க்ஷேத்திர வாசிகள் யாவரும் ஆச்சர்யத்தை அடைந்தவர்களாய் விஷயங்களைத் தெரிந்து சங்கரர்பால் குருபக்தியை மேற்கொண்டு இகபர வடிவ தங்களிஷ்டங்களைப் பூர்த்தி செய்துகொண்டார்கள்.

அத்தருவாயில் வியாச பகவான் முன்னிலையில் சங்கரர் மாயையால் ஏற்படுத்திக்கொண்ட தனது ஸ்தூல சரீரத்தை முகூர்த்த காலத்துக்குள் யோகப்பயிற்சியால் பிரித்து பிரபஞ்ச சம்பந்தமில்லாத தனது பிரஹ்ம சொரூப விதேக கைவல்யத்தை யடைய இச்சையிருப்பதால் அந்தப்படி கட்டளையிட வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்கு வியாசாசாரியரானவர் ஏ! சங்கர! "இப்பூவுலகின்கண் அவதாரத்துக்காக நீ எடுத்துக்கொண்ட வயது எட்டு; சந்யாச ரூபமாய் நீ அதிகப்படுத்திக்கொண்ட வயது எட்டு; ஆகப் பதினாறு சம்வஸ்ஸரம்; இன்னும் இவ்வுலகில் சரீர வடிவமாய் சஞ்சரித்துப் பிரஹ்ம ஞானவித்தையை யெங்கும் பரவச்செய்து பிரஹ்மாதி தேவர்களாகப் பிறந்திருக்கும் மத வாதியரை வென்று சைவ வைஷ்ணவ முதலிய அறுசமய சம்பிரதாயங்களை பிரஹ்மாத்மக் ஞானங்களுக்கு விரோதமில்லாதவாறு ஸ்தாபித்து மற்றும் கர்மம் பக்தி யோகம் என்பவை ஞானத்துக்குப் பரம்பராசாதனமாமாறு

நிலை பெறுத்தி குரு பீடங்களை வகுத்து முப்பத்திரண்டு வயதின் பின்னர் எதார்த்த சரீரத்துடன் கைலைக்கு எழுந்தருளுவாயாக" என்று ஆசிகூறி மறைந்தனர்.

## குமாரிளபட்ட பாதாசாரியரின் மரணாந்தரப் பிராயச்சித்தம்.

அதன்பிறகு சங்கர பகவத் பாதாசாரிய ஸ்வாமிகள் காசியினின்றும் பிரயாகை யடைந்து அங்கு புகழாற் பிரகாசிக்கும் கங்கை, யமுனை, சரஸ்வதி வடிவமாய திரிவேணியைக் தரிசித்து நீராடி அந்நதிக் கரையிலிருந்தனர். அக்கால் குமாரிளபட்டபாதர் குருவிடம் கபடரூபமாக அம் மதசம்பிரதாயத்தைக்கற்ற பாபத்தை நிவாரணிக்க நோக்கி, உமித்தீயில் வேகின்றாரென்ற அசரீரியின் வார்த்தையைக் கேட்டு ஆங்கு சென்றனர். அப்போது குமாரிளபட்டர் சேவைசெய்தனர். அதைப் பார்த்த சங்கரர் ஏ பட்டபாதரே, நீர் வேதமார்க்கத்தை நிலைநாட்டும் பொருட்டுப் புத்த குருவிடம் கற்றீரே யொழிய யானென தென்னும் எண்ணத்தாலன்று. இது நிற்கத் தான் செய்தது குற்றமென்று துக்க ரூபமான அநுதாபம் எப்பொழுது ஏற்பட்டதோ அப்பொழுதே தர்ம சாஸ்திரப்படி பாபம் நிவர்த்தியாய்விட்டது. ஆதலால் நெருப்பிற் றகிக்கப்பட்ட பாதியுடலை கமண்டல தீர்த்தத்தால் திரும்பவும் செழிப்பாய் வளரும்படி செய்கின்றேன். அதன் பின்னே உமது எண்ணப்படி நமது பாஷியத்துக்கு விவரணம் எழுதுவாயாக என்று கூறினர். அதைக் கேட்ட குமாரிளபட்ட பாதாசாரியர் மஹா கொடியதாகவுள்ள குருவிற்குச் செய்த குற்றத்திற்காக மரணாந்தரப் பிராயச்சித்தஞ் செய்வதென்று தீர்மானித்து, நடத்திக் கொண்டிருக்கும் பிற்பாதியில்விட்டு விடுவது என் புத்திக்குச் சமாதானமாகவில்லை என்றும், தமதுபாஷியத்தை எனது சிஷ்யன் பிரபாகரன் மூலமாகப்படிக்க நான்கேட்கும்படி அருள்வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர். அப்போது சங்கரர் அவ்வாறே கேட்கும்படி கிருபை செய்தனர்.

அதன்பின்னர் அதைக்கேட்டு குமாரிளபட்டபாதாசாரியர்எனது சிஷ்யர்களிற் சிறந்த மகிடபதி என்ற நகரத்தின்கண்ணுள்ள கர்மத்தை நிலைநாட்டிய விஸ்வரூபமண்டனபட்டாசாரிய னென்றொரு



வனிருக்கின்றான். அவன் பிரஹ்மாவும் அவன் பத்தினி சரஸ்வதியே போலும் உள்ளவர்கள். அவனை வென்றால் உமது பாஷியத்துக்கு விவரணம் எழுதும் ஆற்றல் அவனுக்குளது எனக்கூறி இந்தப்பாஷியம் இப்பூமியிலே எஞ்ஞான்றும் நிலைக்க வேண்டுமென ஸ்தோத்திரம் செய்து பிராணன் இனிச்சரீரத்தில் தறிக்க அவகாசமில்லையாதலால் பிரஹ்மோபதேசஞ் செய்யவேண்டுமென வணங்கினர்.

அப்போது சங்கரபகவத்பாத ஆசாரியஸ்வாமிகள் அத்தீயினிடத்துச்சென்று சிரத்தில் தமது அபய திருக்கரத்தைவைத்து வலக்காதில் விதியோடு தாரகமந்திரத்தை உபதேசித்தனர். அதன் வலியால் சகுணோபாசனை சம்பந்தமாக பிரஹ்மரந்தர நாடியால் தேவயாண மார்க்கத்தால் தேகத்தைவிட்டனர். அத்தீயினின்றும் ஓர் பெரிய ஒளிதோன்றி ஆகாயத்திற்சென்று மறைந்தது. அதன்பின் சங்கரகுருவானவர் சிஷ்யக்கூட்டங்களுக்கு பாத்துவாஜமஹரிஷியின் ஆச்சிரமத்தில் பாஷியத்தை ஓதுவித்திருந்தனர்.

## சங்கரர் மண்டனமிசிரரிடம் தர்க்கஞ்செய்தல்.

அதன்பின் சங்கராசாரிய ஸ்வாமிகள் பத்மபாதரை ஆதியாகவுடைய சிஷ்யக்கூட்டத்துடன் மண்டனமிசிரரைச் சந்திக்கும் பொருட்டு பிரயாகையினின்றும் புறப்பட்டு ரேவாநதியெனப் பெயர்பெறும் நருமதாநதி தீரத்துள்ள வனத்தில் சிஷ்யர்களை இருக்கக் கட்டளையிட்டுத் தாம் தனியாகவே மஹிடமதி நகரத்திலுள்ளதும், வேதகோஷங்கள் நிறைந்ததும், வாதி பிரதிவாதிகள்பக்கமாக வேதம் சுதந்திரம், பரதந்திரம் என்பவற்றில் எதைநாடி விளங்குவதென்னும் கேள்விகளாலும், சில மீமாம்ஸ பக்கமாகவும், சில அதற்கு எதிர் பக்கமாகவும் சம்பாஷணைகளைச் செய்துகொண்டிருக்கும் கிளிகளால் நிறைந்த தலைப்பையுடைய உன்னதமான விஸ்வரூப மண்டனரின் அரண்மனை வடிவ இல்லத்தை அடைந்தனர். வெளிவாயல் மூடியிருத்தலினாலும், தெரிவிப்பாரின்றியதாக இருத்தலினாலும் தமது யோகப்பயிர்ச்சியால் வானை வழியாக்கி உப்பரிக்கையைக்கடந்து முற்றத்திலிறங்கினர்.

அப்போது மண்டனபண்டிதர் தபசின் வல்லமையால் வியாசரையும் ஜைமினி முனிவரையும் பிதிர்கர்மத்துக்கு வரவழைத்து

பூஜித்துக்கொண்டிருக்குந்தருவாயில் இச் சங்கர சந்யாசியைக் கண்டனர். துறவிகளிடத்து த்வேஷத்தையுடைய அம்மண்டனர், ஏ! சந்யாசி! எங்கிருந்துவந்தாய் என்ற அர்த்தமுள்ளதென நினைத்து "குதோமுண்டி" என்று கேட்டனர். அதற்குச் சங்கரர் நீசொன்ன குதோமுண்டி என்ற வாக்கியமானது எங்கிருந்து தலைமழிக்கப் பட்டது என்று அர்த்தமாகின்றது என்ற அபிப்பிராயத்தால் கழுத்துக்குமேல் மழிக்கப்பட்டது என்ற அர்த்தத்துடன் "ஆகளான் முண்டி" என்று விடைபகர்ந்தனர். அதன்பின் மண்டனர் குத என்ற பதத்திற்கு எங்கிருந்து என்ற அர்த்தம்வருவதற்கு யோக்கியதையான "பந்தாங்தே புரிச்யதேமய" என்பதை எடுத்துக்கூறினர். அதற்குச் சங்கரர் அப்பதத்திற்கு அவ்வர்த்தமன்று; ஆனால் உன்னை வினவவில்லை மார்க்கத்தினை வினவினேன் என்று வருகின்றது என்பதுபொருள் என்பதற்கு யோக்கியதையான "கிம்பந்தா" என்று வினவினர். இதைக் கேட்டமாத்திரத்து மண்டனருக்குக் கோபம் வந்து உன்தாய் முண்டை என்ற அர்த்தம் வரும்படியான "தேமா தாரண்டா" என்றுசொல்லினர். அதைக்கேட்டசங்கரர்மண்டனரைப் பார்த்து உன் தாய் முண்டை என்று கூறிற்று என்ற பொருள்படும் படி "த்வம்மாதா ரண்டேத்தியா ஹஹிமண்டன" என்று கூறினர். அதன்பின் கள்குடிக்கப்பட்டதோவென்ற அர்த்தம் வரும்படியான "சுரபிதாவா" என்று சங்கரரை மண்டனமிசிரர் கேட்டனர். கள் பசுமையதோவென்ற அர்த்தம்வருகிறதென்று, கள் வெண்மைநிறம் என்று காட்டுவதாய் "நஹிசுராஸ்வேதா" என்றனர். அதைக்கேட்ட மண்டனர் கள்நிறம் நீரறிவீரென்று அர்த்தமாய "அகோஜாஞஸி த்த்வர்ணம்" என்ற பதச்சைச்சொல்லினர். அதற்குச் சங்கரர் நான் நிறமறிவேன் நீ சுவையறிவாய் என்ற அர்த்தமாகக்கூடிய "அகம் வர்ணம் பவான்ரசம்" என்ற வாக்கியத்தைப்பகர்ந்தனர். இவ்வளவில் மண்டனமிசிரர் அதிகக் கோபமுடையவராய் சங்கரரைப்பார்த்து, ஹே! கொடுமைமனமுள்ள துறவி! கழுதையும் சுமக்கமுடியாத தண்டு கமண்டலத்தைச்சுமந்த உனக்கு குடுமியும் பூணநூலும் என்ன பாரமாயிற்று என்று வினவினர். அதைக்கேட்ட சங்கரர் உன் அப்பனாலும் சுமக்கமுடியாத கவந்திகையைச் சுமந்திருக்கின்றேன்; குடுமியும் பூணநூலும் வேதத்திற்குப் பாரமாயிற்று என்று விடைபகர்ந்தனர்.



இதனைக்கேட்ட அங்குவந்துள்ள வியாசராதியர் பிதிர்த்தினத் தன்று வீணுரையாடியதும், சந்யாஸியைத் தூஷணித்ததும் குற்றமென்றும், அதற்குப்பிராயச்சித்தஞ் செய்யாவிடின் கர்மம் பலனைக் கொடாதாகையால் சந்யாசியிடம் மன்னிப்புக்கேட்டு அவரைப் பிச்சையின் பொருட்டு அழைக்கவேண்டுமெனவும் விதித்தார்களாதலால் மண்டனர் சங்கரரிடம் மன்னிப்புக் கேட்டுப் பிராயசித்தஞ் செய்து சங்கர குருவின் பாதத்தை விதிப்படி அர்க்கிய பாத்தியங்களாற் பூசித்துப் பிச்சையின் பொருட்டு அழைத்தனர். அதற்கு அவர் சோற்றுப் பிச்சைக்காக அன்று வாதப் பிச்சைக்காக எனவும் கூறினர். அதைக்கேட்ட மண்டனர் நாளை வாதப் பிச்சையைத் தருகின்றேன்; இன்று பிதிர்க்கர்மமாதலால் சோற்றுப் பிச்சையை ஏற்றுக் கொள்ளல் வேண்டுமெனக் கேட்டுக்கொண்டனர். அதைச்செவியுற்ற சங்கரத்துறவியானவர் உடன்பட்டு, முன்னரே வியாசரும் ஜைமினி முனிவரும் விஸ்வேதேவ பிதிர் ஸ்தானங்களில் முறையே அமர்ந்தனராதலின் மஹா விஷ்ணு ஸ்தானத்தில் உட்கார்ந்தனர். பிறகு மந்திரம் கிரியை பொருள் என்பவற்றின் லோபமின்றி பிதிர்க்கர்மம் முடிவு அடைந்தது.

அதன்பின்னர் வியாச ஜைமினியாரிருவரும் சங்கரரிடம் வேதத்தின் முடிவாயுள்ள வாக்கிய சம்பந்தமான பரமாத்ம ஐக்கிய தத்துவக் ஞானத்தைப்பற்றித் தனியிடத்து சம்பாஷணை செய்திருந்தார்கள். அத்தருவாயில் மண்டனபண்டிதர் சென்று நாளைமுதல் நடக்கும் வாதத்தின் முடிபை பாரபக்ஷமின்றி சொல்லுவதற்கு வல்லவர்களான தாங்கள் நடுவிலிருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். அதற்கு வியாசஜைமினியாரிருவரும் தியானத்தாலுணர்ந்து உள்ளதை உள்ளபடி நியாயவழியிலுரைக்கவல்ல மண்டனர் பத்தினியாரான உபய பாரதியாரை வைத்து நடக்கும்படி கட்டளையிட்டு மறைந்தார்கள். அப்போது சங்கரர் வான்வழிச்சென்று ரேவாநதிதீரத்துள்ள சிஷ்யர் கூட்டத்தையடைந்து நடந்த விருத்தாந்தங்களைக்கூறிப் பிரஹ்ம நிஷ்டையிலமர்ந்தனர்.

மறுநாளுதயத்து பத்மபாதர் முதலிய சிஷ்ய வர்க்கங்களுடன் வந்த சங்கரர் மண்டனமிசிரருடன் விதிவடிவவாத பீடத்தேறி உபய

பாரதியாரை நடுவிலிருக்கும்படி ஏற்படுத்திக்கொண்டும், இருவாதியரின் கேள்வி சமாதானங்களைப் பிரதிகள் ரூபமாய் வரையும்படி சிஷ்யர்கட்கு விதித்தும், ஒவ்வொரு தினங்களில் நடக்கும் வாதத்தின் ஆரம்ப முடிவுகளை அறியும்படிக்கான வாத்தியகோஷம் முதலியவற்றை ஏற்படுத்திக்கொண்டு (நிராபேக்ஷிக ஸ்வயம்பிரகாச சுரூப அத்வைத வியாபகவடிவ ஈஸ்வரசாக்ஷியான பிரஹ்மத்துக்கு வேறாகாத) ஜீவசாக்ஷியான ஆத்மாவைத் தவிர வேறுபதார்த்தம் இல்லை என்பதும், அது விவேக வைராக்கியாதி சாதனவாயிலாய் சிஷ்ய ஆசாரத்தோடுள்ள ஜிஞ்ஞாசுவுக்கு வேதத்தின் ஞானகாண்ட விசாரவாயிலாய்ச் சித்திக்கிறதெனவும், அதற்குச் சந்யாஸாஸ்ரமமே தக்கதெனவும், ஏனைய கர்ம உபாசனை முதலிய சாதனங்கள் விசாரஞானத்துக்கு ஏதுவாகவுள்ள சித்தசுத்தியைப் பயப்பிப்பதில் வேதத்திற்கு தாற்பரியமய பிரயோஜனமெனவும், சகலகர்மங்களும், ஞானத்தினிடத்து மிச்சமில்லாது முடியப்பெறுகின்றனவெனவும் சித்தாந்தஞ் செய்வது சங்கரருடைய வாதவடிவப்ரதிஞ்ஞையாகவும்;

வேதத்திலுள்ள கர்மத்தினாலேயே மோக்ஷமெனவும், அத்தகைய மோக்ஷம் சொர்க்கலோகப்பிராப்தி எனவும், அதற்குக் கிருஹஸ்தாஸ்ரமமே தக்கதெனவும், பிரஹ்மாத்ம ஐக்கியவஸ்தும் அதன் ஞானமும் கிடையாதெனவும், சித்தாந்தஞ்செய்வது விஸ்வரூபமண்டன பட்டாசாரியருடைய மதவடிவ ப்ரதிஞ்ஞையாகவும்;

சங்கரர் தோல்வியடைந்தால் மண்டனர் கொள்கைப்படி கிருகஸ்தவடிவ சிஷ்யராகுதல், மண்டனர் தோல்வியுற்றால் சங்கரர் கொள்கைப்படி சந்யாஸவடிவசிஷ்யராகுதல் எனவும், தோல்விவெற்றி இவைகளின் குறிப்புகளைத் தீர்மானித்துக்கொண்டு நிஷ்பிரயோஜனமான "ஜல்ப்பம் விதண்டை" என்பவற்றைநீக்கி ஏனைய இலக்ஷண விதிகளுடன் தர்க்கஞ்செய்யத் தொடங்கினார்கள்.

அத்தருவாயில் உபய பாரதிதேவியாரான சரஸ்வதியார் இருவர் குறிப்பையுமறிந்து வெற்றி தோல்வியைக் காட்டக்கூடிய மந்திரசக்தி சம்பந்தம் வாய்ந்த புட்பமாலைகளை இருவர்கண்டத்திலுமிட்டு உங்களில் எவர்தோல்வியடைவீர்களோ அவர்களின் மாலையானது கறுகிப்



போய்விடுமென்ற தீர்மானத்தை வெளியிட்டு வாதம்செய்பவரிருவரின் பொருட்டுத் தன்னுடைய கர்த்தவ்யமான கிருகஸ்தாஸ்ரம விதிப்படி போஜனாதி முதலிய காரியங்களைக் கவனித்திருந்தனர்.

அப்போது சங்கரரும் மண்டனமிசிரரும் ஏழுநாள்வரை காலைக்கடன் சரீரபோஷணைக்காலங்களைத் தவிர மற்றும் பூராக்காலங்களும் வாதிட்டார்கள். ஒவ்வொருவரும் சுருதி யுக்தி அநுபவங்கட்கு விரோதமின்றியும், பிரகாசம் அமைதி புன்னகை முதலிய முகாரவிந்தத் துடனும், வியர்வை, நடுக்கம், மேல்நோக்கி யோசித்தல், சிறிது காலம் சும்மாவிருத்தல், தப்பிதமாக முதலிற்சொல்லிப் பின்னதனை மாற்றுதல், ஞாபகத்தவராய்க்கூறுதல், எதிர்ப்பக்கக்கேள்வியின் தாற்பரியத்தைக் கிரகியாதிருத்தல், தான்முதலில் வெளியிட்டவிஷயத்தை விட்டுவிட்டு வேறுவிஷயத்தைக் கூறுவது, பிரமாணமாகாததனை பிரமாணமாகக் கூறுவது, திருஷ்டாந்த தாஷ்டாந்தமிரண்டிற்கும்முரண்படுதல், கோபம் வருதல், வீண்வார்த்தை பகர்தல், விடைபகர முடியாது மயங்கி மௌனமாயிருத்தல்முதலிய குற்றங்களின்றித் தர்க்கஞ் செய்தார்கள்.

இருவருடைய வாதத்தினின்றும் ருக், யசுர், சாமம், அதர்வணமென்ற நான்கு வேதங்களிலுமுள்ள கர்மோபாசனை சம்பந்தமாகக் கேட்க வேண்டியதாயுள்ள யாவற்று விஷயங்களும், ஞான காண்ட சம்பந்தமான சப்தப்ரமாணமய அநுபந்தம் ஆதியாக சகஜ சமாதி முடிவாகவுள்ள இவற்றினிடையிலமையப்பெற்ற சாதனம், சட்விதலிங்கம், சிரவணம், ஸ்தூலசரீரம், புரியட்டக சரீரம், குணம், ஏடணை, ஆவரணம், விக்ஷேபம், அகங்காரம், அவஸ்தை, கோசம், ஆசை, கோபம், லோபம், கர்மம், அவித்தை, ஜீவன், மாயை, ஈஸ்வரன், ஞானம், உபாதி, சத்தை, அஜாதவாதம், திருஷ்டி சிருஷ்டிவாதம், சிருஷ்டி திருஷ்டிவாதம், சத்து, சித்து, ஆநந்தம், நித்தியம், சுத்தம், பூரணம், ஏகம், வியாபகம், அவாந்தர வாக்கியம், மஹா வாக்கியம், பிரமாணம், ஞானபூமி, அக்ஞானபூமி, ஆத்மா, பிரஹ்மம், மோக்ஷம், மனனம், நிதித்தியாசனம், சவிகர்ப்பசமாதி, நிர்விகர்ப்ப சமாதி, வாசனாக்ஷயம், மனோநாசம், ஜீவன் முக்தியின்விலக்ஷணானந்தம் என்ற விஷயங்களும், அப்பதங்களின் சக்தி விருத்தியாலும்

லக்ஷணாவிருத்தியாலும் ஏற்படக்கூடிய தாற்பரிய வியாக்யானங்களும் வெளியாயின.

கர்மத்தினாலேயே மோக்ஷமென்னும் மண்டனமிசிரர் பக்கம் தோல்வியடைந்தது. சாதனத்தோடு கூடிய சட்வித லிங்கதாற்பரிய யுக்திகளால் சிரவண மனன நிதித்தியாசன மார்க்கமாக வேதத்திலுள்ள ஞான காண்டமே தலைமை பெற்றதெனவும், அதனிடத்து யோக்கியதை தாற்பரிய முதலிய சாப்தசாமக்கிரியின் உதவியால் ஜீவேஸ்வரர்களுக்கு அதிஷ்டானமாய பிரஹ்மாத்ம ஐக்கிய மஹா வாக்கிய வடிவ விசார ஞானத்தால் சச்சிதாநந்த அத்விதீய வியாபக ஆத்மாவே மூன்று காலத்தையும் கடந்த நான் என்னும் பதத்தின் எதார்த்த சொரூபமெனவும், அவ்வாத்மாவே புத்தீந்திரிய பிராண மனோவாக்காதி நாம ரூப ஜகத்துக்கு ஆதார அதிஷ்டான நிமித்தோபாதான வடிவமாய் சரீராதிப் பிரபஞ்சங்களின் சிருஷ்டியாதி சகல காரியங்களையும் தன் மயமான எண்ணிறந்த கோடி சக்திகளாற் செய்கின்றனவெனவும், அதனையடைவதற்கு பிராணனையும் அர்ப்பிக்கும் விதிவடிவ ஆசாரமுடைய சிஷ்யனானவன் குருசேவை வாயிலாய் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் அவ்வஸ்து சொரூப நிஷ்டை வடிவ புத்தி விருத்தியால் அடைகின்றானெனவும், வேதத்திலுள்ள கர்மம் உபாசனை என்னும் இரு மார்க்கங்களும் ஞானத்தை விசாரணை செய்யும் பக்குவத்தைத் தரத்தக்கதான சித்த சுத்திக்கு ஏதுவெனவும், சங்கருடைய அத்வைத மதம் சித்தாந்தஞ் செய்யப்பட்டது. உடனே மண்டனமிசிரர் கழுத்திலிருந்த புஷ்பமாலை கறுகியது. சபையின் கண்ணுள்ள இரு பட்சத்தை ஆதியாகவுடைய யாவரும் சங்கரர் வென்றனரெனவும், மண்டனர் தோற்றனரெனவும் ஆரவாரத்துடன் பேசத்தொடங்கினார்கள். மண்டனர் பத்தினியாரான உபய பாரதி தேவியார் இருவரையும் பிச்சையின் பொருட்டு அழைத்தனர். அப்போது நடந்த வாதத்தினின்றும் இரு பக்கத்துமுள்ள சிஷ்யக் கூட்டங்களால் வினாவிடை ரூபமாய் எழுதப்பட்ட வாக்கிய சம்பந்தமானவைகள் பூறவும் பன்னீராயிரம் சுலோகம் வாய்ந்த "மஹா வாதாவளி" என்ற ஒரு அரிய பெரிய கிரந்தமாயிற்று.



அப்போது சரஸ்வதியாரின் அவதாரமாகிய உபயபாரதியார் சங்கரரையடைந்து துர்வாசராலேற்பட்ட சாப விமோசனமாயிற்று. யான் பிரஹ்மலோகம் போகின்றேனென்று கூறி, வேதம் ஜபமாலை வீணை என்பவற்றைத் தாங்கிய நான்கு திருக்கரங்களுடன் தனது எதார்த்த சொரூபத்தை எடுத்துக்கொண்டு ஆகாய வழியிற் சென்றனர்.

அதைக்கண்ணுற்ற மந்திரலய ஹடராஜ யோகத்தில் உயர்கர வல்லவரான சங்கர பகவத் பாதரானவர், அதனிடத்துத் தலைமை பெற்ற வனதுர்க்கையின் மஹா மந்திரத்தைப் ப்ரயோகித்து ஆகிருஷித்து வைத்துக்கொண்டு "வாகீஸ்வரிஸ்தவம்" என்பதாகிய ஸ்தோத்திரத்தினைச் செய்து பிரார்த்தித்து நான் உத்திரவிடும் வரை என் பக்கத்திலேயே இருந்தருளல் வேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். அதற்கிணங்கிய உபயபாரதியாரான சரஸ்வதி அம்மையார் அவ்விடத்தே தேவ வடிவமாயமர்ந்தனர்.

அதன் பின்னர் சங்கராசாரியர் மண்டனமிசிரரைப் பார்த்து நாம் தர்க்கத்தில் ஏற்படுத்திக்கொண்ட சந்யாஸத்தை நீ அடையவேண்டுமென்று கட்டளையிட்டனர். அதைக் கேட்ட மண்டனர், சுவாமி தங்கள்பால் விதிவடிவ சந்யாஸத்தை ஏற்றுக்கொள்வதற்கு என் மனதினிடத்து ஒரு சந்தேகம் நீங்காமலிருக்கின்றது. அவையாதெனில், எனது ஆசிரியராய ஜைமினியார் மஹா ரிஷியல்லவா? அவராலெனக்கு உபதேசிக்கப்பெற்ற வேதத்தின் கர்மகாண்டமே மோக்ஷத்தைக் கொடுக்கவல்லது யென்ற அவர் வாக்குப் பொய்யாகுமாவென்ற சந்தேகம் நீங்காததால், பூரண எண்ணத்துடன் சந்யாஸத்தை ஏற்றுக் கொள்ளமாட்டாதவனாக இருக்கின்றேனென்றனர்.

அப்போது இருவரின் விருப்பத்தினையறிந்த ஜைமினி முனிவர் பிரசந்நராய், ஏ! விஸ்வரூப மண்டனரே! வேதத்துக்கு ஒத்ததான பரமாம்ஸ ஸந்யாஸியாய இச்சங்கரர் கருத்தும், வியாசருடைய கருத்துக்கு ஒத்ததான எனது கருத்தும் எக்காலத்தும் பேதப்படுவதின்றாம்; ஆனால் உனது புத்தி விருத்தி கர்மத்துக்கே அதிகாரியாக இருந்தபடியால் கர்மகாண்டத்தினை விதித்தனம். நீ இப்போது

ஞானத்துக்கு அதிகாரியானாயாதலால், இதுமுதல் இவரே உனக்குக் குருவாகுகவெனக் கட்டளையிட்டு அந்தர்த்தானமாயினர்.

அதைக்கேட்ட மண்டன பண்டிதர் சங்கரர் வடிவத்தைத் தியானித்துச் சங்யாஸத்தை வேண்டி நின்றனர். அத்தருவாயில் சங்கரர் உபய பாரதியாரைத் தியான விருத்தியாற் பிரத்தியக்ஷமாகும்படி செய்து எ அம்மே! நானுங்களிருவரையும் ஜெயித்த விஷயத்தில் சந்தேகமுண்டோவென வினாவினர். அதைச் செவியுற்ற சரஸ்வதி தேவியாரான உபயபாரதியார் எனது சிறுவயதில் எங்களில்லத்தில் சடை விபூதி உருத்திராக்கங்களைத் தரித்த சிவபக்தியிற் சிறந்த முனிவர் பிரசன்னரானதாகவும், என் தாய் முதலியோர் என் சரீர சம்பந்தமான பலன்களைக் கேட்டதாகவும், அவர் என்னுடைய பர்த்தாவுடன் ஒருசங்யாஸி வாதிட்டு ஜெயிப்பாரென்றும், அச்சங்யாஸியுடன் நானும் வாதிடுவனெனச் சொன்னதாகவும், என் தாய் கூறியிருக்கின்றாள். ஆதலால் என்னையும் வாதிட்டு ஜெயித்தாலொழிய ஜயத்தை யடையீரென மொழிந்தனர்.

அதற்குச் சங்கரர் சிறந்த வைராக்கிய ஞான உபாதி வடிவ சங்யாஸியர் ஸ்திரீகளுடன் வாது செய்தலாகாது என்று சொல்லினர். அதைக்கேட்ட சரஸ்வதியார் பெண்ணானாலென்ன திரியக்கானாலென்ன எவரானாலென்ன வாதத்தின்பொருட்டு வெளிவந்துள்ள நீர் ஸ்திரீகளென்று விலகுவீரேல் உமக்குப் பூரண வெற்றி எப்படிக் கிடைக்கும். நிர்வாணியாய கார்க்கி யென்ற அசுரப் பெண்ணோடு யாக்ஞவல்கிய மஹரிஷியும், சுலபையென்பவளுடன் ஜனக அரசரும் வாதிடவில்லையா? அதனாலவர்கட்கு என்ன குறைவு ஏற்பட்டுள்ளது? ஆதலால் எல்லாக் கலைக்ஞானங்களிலும் உம்முடன் வாதிட விரும்புகிறேனென்று கூறினர். அதைக்கேட்ட சங்கரரும் உடன்பட்டனர்.

அதன் பின்னர் சங்கரரும் உபயபாரதியாரும் வாத பீடத்து அமர்ந்து சுருதிஸ்மிருதி ஆகமம் புராணம் இதிகாசம் முதலியவற்றின் சம்பந்தமாயுள்ள கர்மம் உபாசனை யோகம் ஞானம் என்பவைகளோடு அறுபத்துநான்கு வித்தைகளின் சம்பந்தமாகவும், பதினேழு நாட்கள் வினாவிடை ரூபமாக தர்க்கம் நடந்தது. அத்தர்க்க காலத்தில் சங்கரரே மதிக்கத் தக்கவராகவும், ஜயத்தை யடைந்தவராகவும் இருந்தனர்.



இதைக்கண்ட உபயபாரதியார் இவைகளாலிவரை வெல்லலாகாதெனக்கருதி, அநுபவமின்றிய ஸ்திரீ சம்பந்த விஷய வடிவக் கேள்விகளாற்றோற்கடிக்கலாமென்னும் எண்ணமுடையவராய்; மன்மதன் கலைகளெத்தனை? அவற்றின் லக்ஷணமென்ன? ஸ்தூலசரீரத்தில் எவ்வெத்தானத்திலிருக்கின்றன? பூர்வபக்ஷ அமரபக்ஷங்களிலெவ்வாறு? புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும்எவ்வாறு? ஸ்திரீபுருஷர்களின் ஜாதிக்கிரமம் எப்படியுள்ளது? என்ற கேள்விகளை அநுபவ ரூபமாய் விடைபகரவேண்டுமென வினாவினர்.

அதற்குப் பிரஹ்மசரிய சங்யாஸச் சங்கரரானவர் உலகத்தை ஈடேற்றக்கருதி, சங்யாஸ தர்மத்துக்கு விருத்தமாய் விடை பகருதல் கூடாதெனக் கொண்டவராய் முப்பது திங்களில் பதிலளிப்பதாகத் தவணையிட்டுத் தன் சிஷ்யர்கட்குணர்த்திச் சமாதானப்படும்படி செய்து, சிருங்ககிரிச் சாரலிலுள்ள ஓர் பாறையின் மேல் கர்மயோக வழியாற் கூறும் பிராணாயாம மார்க்கத்தாற் பிராணனை மேலே கிளப்பி, பிரஹ்மரந்திரவழியாய் சூக்ஷமசரீரதத்துவங்களை பிராணனால் இழுத்துப்பிரித்து, அப்போது வேட்டையின் பொருட்டு வந்து ஆங்கு மரணத்தையடைந்து கிடக்கும் நூறு பத்தினிகளை மணந்த அமருக அரசனுடைய மாமிஸ வுடலிற் பரவேஸித்து எழுந்து, ஸ்நானாதி நித்ய கர்மாநுஷ்டானங்களைச் செய்து பல்லாண்டு முதலிய வாத்திய கோஷங்களோடு தனது பட்டணஞ்சென்று அங்கு சாந்தியாதி கர்மங்களுடன் ஊர்வலஞ் சுற்றிவந்து சிம்மாசனத்திருந்து அரச காரியங்களை நடாத்தினர்.

அவரது புதுச்செய்கைகளின் சம்பிரதாயத்தைக் கண்ணுற்ற மந்திரியரனைவரும் ஒருங்குசேர்ந்து நமது அரசன் சரீரத்து ஓர் சித்த புருஷன் பிரவேசித்திருப்பதாக அநுமானத்தையடைந்தவர்களாய்த் தீர்மானித்து மூச்சின்றியவுடல் எங்கு கிடைக்கினும் அதை அக்கினியிற்றகிக்கும்படி கடுமையான கட்டளையிட்டு, எல்லாவிடங்களிலும் தேடும்படி வேலையாட்கள் பலரை அனுப்பினார்கள்.

அதன்பின்னர் அமருக அரசன் சரீரத்தையடைந்த சங்கரரானவர் மந்திரிகள்வசம் அரசகாரியங்களை நடத்தும்படி ஒப்புவித்து அந்

தப் புரஞ்சென்று ஆங்கு அமரகனுடைய சரீரத்துக்கு ஏற்பட்டுள்ள நூறுமாதர்களுடன் அவ்வமரக சரீரத்தாலேயே விதிப்படி மன்மத லீலைகளிற் பிரவேசித்துக் கிருஷ்ணனைப்போன்ற அநுபவியாய் வாச்சியாயன சூத்திரம், காமகலாபாஷியம் என்பவற்றையாராய்ந்து, அவ்வுடம்பாலேயே மன்மதலீலை சம்பந்தமான யாவற்று வினாக்களுக்கும் விடையுள்ளதாக அமருகமெனப் பெயர்பெறும் காமநூலினைச் சமஸ்கிருதவடிவ ரூபமாயியற்றிவைத்தனர்.

இது இவ்வாறாகச் சங்கரகுருவின் உடம்பினைக் காத்திருந்த சனந்தனர் முதலிய சிஷ்யக்கூட்டங்கள் யாவரும் உத்திரவிட்ட முப்பது திங்கள் வராததுபற்றி பஞ்சதினங்களுபாசித்தும் வராததால் தேடி யாவரும் ஆச்சரியப்பட யோக்கியமாகிய அமரக அரசன் நகரத்தை அடைந்து தத்துவமஸ்யாதி பதங்களமைந்ததும் சரீராதிப் பிரபஞ்சங்களில்லாதது உனது எதார்த்த சொரூபம்என்பவற்றை உணர்த்தவல்ல வாக்கியங்களையுடைய பண்ணோடுகூடிய பாடல்களை அமரக அரசன்முன் அந்தப்புரத்தில் வீணையின்மூலமாகப்பாடி ஞாபகப்படுத்தினார்கள். அதைச் செவியுற்ற சங்கரப்பெருந்தகையார் அறிவுறுத்தப்பெற்றவராய் அமரக அரசனுடைய உடலைவிட்டு பத்தாந் துவாரத்தின் மார்க்கமாய் அகப்புரக்கரணங்களை பிராணனால் வெளிக்கிளப்பி அந்தப்புர ஸ்திரீகள் அழுதுகொண்டிருக்க பழைய சங்கருடைய சரீரத்தினையடைந்தனர். அப்போது மந்திரிகளின் உத்திரவை அடைந்த அரசவேலைக்காரர்கள் தனிமையாயுள்ள சங்கரர்ஆக்கையை நெருப்பிட்டுச் சென்றனராதலால் பாதிவெந்துள்ள சரீரத்தில் பிரவேசித்த பிராணாதிகருவிகள் சம்பந்தமடைந்த ஸ்தூலசரீரவடிவ சங்கரரானவர் ஞானிகளின் சரீரத்தை இரட்சிக்கவேண்டுவது விஷ்ணுவின் முக்கியகடமை என்பதை நினைத்தவராய் “ஜ்வாலா நரசிம்ஹ ஸ்தோத்திரம், லக்ஷ்மீநரஸிம்ஹம், தேவிகராவலம்பம்” என்ற தோத்திரங்களைச் செய்தனர். அப்போது மஹாவிஷ்ணுவானவர் லக்ஷ்மீநரசிம்ஹராகத் தோன்றி கையாலெடுத்துத் தழுவித் தனது கிருபையால் ஆசீர்வதித்து மறைந்தனர். அதனால் சங்கரருடைய சரீரம் சீதளப்பிரகாசத்துடன் பூரணமாகி முன்னாலும் அதிக மேன்மையை அடைந்தது.



அப்போது சனந்தனர், மண்டனர் முதலியோர்கள் தங்கள் ப்ரசிஷ்யகூட்டத்துடன் சங்கரரை அர்க்கியபாத்திய ஆசமனாதிபாதப்ரக்ஷாளனங்களாற் பூசித்து வணங்கி நின்றார்கள். உடனே சங்கரர் சிஷ்யர்களுடன் உபயபாரதியார் முன்னிலையிற் சென்று வாதபீடத்தேறி ஆகர்ஷணமந்திரவலியால் அமருகனரண்மனையினின்றும் தானியற்றிய அமருகமென்னுங் காமநூலினை சபையில்விழும்படி செய்து சரஸ்வதியாரை நோக்கினர். அதைப் பார்வையுற்ற சரஸ்வதியார் சங்கரருக்கு முழுவெற்றியைக்கூறி உமக்கு வேண்டுவதென்னவென்று கேட்டனர். அதற்கு சங்கரர் உம்மை நான் எந்தவிடத்து சக்திவடிவ இயந்திரத்தால் விக்கிரகவடிவப் பிரதிஷ்டையைச் செய்வேனோ அந்தவிடத்து சர்வதேவி வடிவமாயிருந்து இவ்வுலகபதார்த்தமுதல் மோக்ஷம் முடிய உள்ள யாவற்று போக போக்கிய வஸ்துக்களையும் சுகங்களையும் கொடுக்கவேண்டுமென வேண்டினர். அதற்கவ்வம்மையார் அப்படியே செய்கின்றேனென்று வாக்களித்து பிரஹ்மலோகத்தை நோக்கி அந்தர்த்தானமாயினர். இதைச் செவியுற்ற யாவரும் ஆச்சர்யத்துடன் ஆனந்தத்தையும் அடைந்தார்கள்.

அதன்பின்னர் மண்டனமிசிரர் சங்கரரிடம் விதிவடிவசந்யாஸத்தையடைந்து வேதங்களின் முடிவாயுள்ள அத்வைத தத்துவக் ஞானவடிவ மஹாவாக்கியங்களுக்கு சக்திலக்ஷணைகளாற் சிரவண மனன நிதித்தியாசனவாயிலாய் பிரஹ்மமாயுள்ள நிஷ்பிரபஞ்ச ஆத்மாவினிடத்து நிர்விகர்ப்ப நிஷ்டையையடைந்து அதிற்தற்பரராகி ஸ்ரீ சங்கரபகவத் பாதாசாரிய ஸ்வாமிகளின் ‘ஆசீர்வாத மஹாத்மியத்தால் சுரேஸ்வராசாரியரென்ற பட்டம்பெற்றவராய் பிற்காலத்துள்ள குருமார்கள் கைக்கொள்ள ஏதுவான தீர்மானவடிவ விருத்தியுரையைச் செய்துவந்தனர்.

அப்பால் சங்கராச்சாரிய ஸ்வாமிகள், பத்மபாதர் சுரேஸ்வரர் முதலிய சிஷ்யவர்க்கங்களுடன் மஹிஷ்மதி நகரத்தைவிட்டுப் புறப்பட்டு யாத்திராமார்க்கங்களிலெல்லாம் வேதபாஷியம் நூதனகிரந்தம் முதலியவற்றால்தத்துவக்ஞானத்தை வியாபிக்கும்படி செய்து, பாதாளகங்கையையுடைய ஸ்ரீசைலத்தையடைந்து, தீர்த்தயாத்திரை ஸ்தலயாத்திரைகளை முடித்து ஆங்கு சிகாகலாமந்திரப் ப்ரதிஷ்டையைச்

செய்து, கிருஷ்ணாநதிதீரத்துள்ள சாக்தேய பாசுபத வைஷ்ணவ முதலிய மதவாதியரை வென்று, அத்வைதிகளாக்கி ஆங்குவந்தஆயிரத்து இருநூறு புறமதவாதியரை சுரேஸ்வரர் பத்மபாதரைக்கொண்டு தோல்வியடையும்படிசெய்வித்து, மல்லிகார்ச்சுன லிங்கத்தினிடத்து "சத்தியம் அத்வைதம்" என்ற வாக்கியத்தைவெளியாக்கி சைலத்தில் தரிசனைகொடுத்து பிரஹ்மமும் ஆத்மாவும் ஒன்றேயென்னும் தத்வக் ஞானத்தைப் பரவச்செய்தனர்.

## சங்கரரால் உக்ரவைரவன் மரணமடைதல்.

ஓர்நாள் சிஷ்யர்கள் நீராடச்சென்றிருந்தசமயம் காபாலிக மதம் மறுக்கப்பட்டதினின்றும் அவமானமடைந்த அம்மதத் தலைவனொருவன் நேரிலாவது மந்திரவலியாலாவது வேறுமார்க்கத்தாலாவது வெல்ல இயலாதெனும் எண்ணத்தால் சிஷ்யக் கூட்டத்தவர்களுடன் விபூதி, உருத்திராக்கம், தண்டுகமண்டலம் முதலிய சின்னங்களுடன் தானும் சஞ்சரித்துக் காலத்தை நோக்கிய உக்ரவைரவன் என்பவன் தனியிடத்திருந்த சங்கரர்முன்சென்று விதிப்படி நமஸ்கரித்து நின்றனன். அதைக்கண்ணுற்ற சங்கரர் வந்தவிஷயத்தை வினவினர். அப்போது உக்ரவைரவனனவன் சுவாமி நான் பன்னிரண்டு வருஷம் இஷ்டசித்தியை வேண்டி வைரவரை நோக்கித் தவஞ்செய்தேன் அவர்பிரசன்னராகி உலகாளும்அரசன் அல்லது பிரஹ்மக்ஞானி இவர்களில் எவர்களின் தலையையாவது எனக்கு நரபலியாகக் கொடுக்கும் பட்சத்தில் உன்கோறிக்கை பலனைத்தருமென வரமளித்தனர். சரீரத்தினிடத்து யானென்னுந் திடப்ராஞ்ஞையாலும் எவர்களையும் ஜெயிக்கும் ஆற்றலினமைவாலும் அரசன்சிரத்தை யாசிக்க யோக்கியமில்லாதவனாகவிருக்கின்றேன். தாங்களோ ஜீவசையுக்த தாதாத்மிய பிராணமனோவாக்காதி சம்பந்தம் வாய்ந்த மாமிஸ சரீரத்தினிடத்து நானென்னும் புத்தியையும், மாயா ரூபத்தழுக்கினாலாய பிரபஞ்சப் பொருட்களினிடத்து என்னுடையதென்னும் புத்தியையும், வைராக்கிய ஞான உபரதிவடிவத் திடப்ராஞ்ஞையால் தள்ளியிருக்கின்றீர்கள். தவிரவும், தங்கள் அவதாரமானது மனோ வாக்குச் செய்கைகள் மூலமாய் உலக ஜீவர்களை உய்விக்கும் பொருட்டதாக இருப்பதோடு, யாவர் எதைக் கேட்கினும் மறுக்காது உடனே தரவல்ல



தாதாவாகவுமிருக்கின்றீர்களாதலால், எனது நன்மையின்பொருட்டுத் தங்களது சிரத்தைப்பலியிட வரமாகயாசிக்கும் எனக்குக் கொடுக்க வேண்டுமெனவும், அதனாலேற்படும் துக்கமும் ஞானானந்த சுயஞ்ஜோதி ரூப ஆத்மாவாய தங்களுக்கு இல்லை எனவும் சேவையோடு யாசித்து நின்றனன்.

அத்தகைய உக்ரவைரவனுடைய வார்த்தையைச் செவியுற்ற சங்கரப் பெருந்தகையார் கானலின் நீருக்குச் சமானமாயுள்ள இச்சரீரத்தை யார் எப்படி யடைந்தாலும் எனக்கு யாதொன்றுமின்றாம். தவிரவும், அநித்தியமாய இவ்வுடம்பு உமது பிரயோஜனத்தின் பொருட்டாவதில் எமக்குப் பெரிய பேருண்டாவதோடு ஆத்மாவாய எனக்கு யாதொரு ஹானியுமில்லையெனக்கூறி, உமது இச்சைப்படி செய்து கொள்ளுவாயாகவென்று சொல்லி கண்களை மூடி பிரஹ்ம நிஷ்டையிலமர்ந்தனர். அப்போது அவ்வுக்ரவைரவன் சிஷ்யர்கள் வருவதற்குள் தன் கருத்தை முடித்துக்கொள்ள எண்ணங்கொண்டவனாய், வாளுடன் விரைந்து சென்று சங்கரருடைய சிரசைப் பலியிடுவதற்காக வாளை உயரத்தூக்கி வெட்ட ஆரம்பித்தான். அத்தருவாயில் நீராடிவந்த சனந்தனர் என்ற பத்மபாதர் கண்ணுற்று, ஓர் ஊங்கார சப்தத்தைச்செய்து "ஓம் நரசிம்ஹ" என்று அழைத்தனர். அப்போது முன்னோர்கால் சனந்தனருடைய எதார்த்த தபஸுக்கு பிரத்தியக்ஷமாகி ஆபத்தில் இரட்சிப்பதாக வரமருளிய நரசிம்ஹ மூர்த்தியானவர் பெரிய பிரகாசத்துடனும் கோரைப்பற்களுடனும் கூறிய நகங்களுடனும் சனந்தனருடைய சரீரத்தினின்றும் வெளிவந்து உக்ரவைரவனுடைய சரீரத்தைக் கிழித்தெறிந்து அவனுடைய பிராணனை எமலோகத்துக்கனுப்பினர். அப்போது நரசிம்ஹ பகவானின் கர்ஜ்ஜனைகளால்யாவரும் நடுங்கினார்கள். அதனால் சமாதி நீங்கிவிழித்த சங்கரரானவர் உபநிஷத்துமந்திரங்களாற்றுதிசெய்து பகவானின் கோபத்தைச்சாந்தப்படுத்தினர். அதைக்கேட்ட நரசிம்ஹமூர்த்தியானவர் சங்கரருக்கு நல்ல ஆசீர்வாதங்களைக்கூறி அந்தர்த்தானமடைந்தனர். ஆங்குள்ள யாவரும் பிரஹ்மக் ஞானிகளுக்குச்செய்யப்பட்ட கெடுதல்கள் செய்தவர்கட்கே அடையத் தக்கதாக ஏற்படுமென்று பாகவத புராணத்தில் வியாசரால் கூறப்பெற்ற பிரஹ்மஞான பாதரைப் பணி

Q23:3w2 w D788
N34
58001

யிட்டவர்களை காளிதேவியார் நாசஞ் செய்ததைப் போன்று இப்பொழுதும் நடந்ததென்று சிஷ்யர்கள் முதலிய யாவரும் ஆச்சரியம் அடைந்து சேவையைச் செய்து ஆநந்த சமுக்திரத்தில் மூழ்கினார்கள். இத்தகைய துஷ்ட நிக்ரக சாது ரக்ஷண வடிவ இந்நரசிம்ஹ மூர்த்தியின் அவதாரத்தையும் சங்கரரால் செய்யப்பெற்ற நரசிம்ஹ ஸ்துதியையும் எவர்கள் பக்தி சிரத்தையுடன் சிரவணஞ்செய்கின்றார்களோ அவர்கட்குச் சர்வ அரிஷ்டங்களும் நிவர்த்தியாகி நல்ல பலனை அளிப்பதாகவிருத்தலால் பாராயணஞ் செய்து வந்தார்கள்.

அதன் பின்னர் சங்கர குருவானவர் சிஷ்யக் கூட்டங்களுடன் எல்லாப் பக்கங்களிலும் யாத்திரைகளைச்செய்து கொண்டு திருக்கோகர்ணம் வந்து மூன்று நாளிருந்து ஆங்கமர்ந்துள்ள ஸ்ரீ மஹாபல நாதரை விதிப்படி சேவைசெய்து அவர்காட்சிக்குப் பாத்திரராகித் திருவருளைப்பெற்று, அங்கிருந்து ஹரிசங்கர க்ஷேத்திரத்தில் சேர்ந்துள்ள ஸ்ரீசங்கர நாராயணர்களின் சேவையைச்செய்து அங்கிருந்து புறப்பட்டு சொல்லூரெனப்பெயர் பெறும் மூகாம்பிகை க்ஷேத்திரத்திற்கு வந்து சேர்ந்தனர்.

## சங்கரர் இறந்த குழந்தையை எழுப்பியது.

ஆங்கு ஓர் தினம் அவ்வூர்த்தெருவழி சங்கரர் செல்லுங்கால், வேதியர் வீட்டிலுள்ள ஒரே புதல்வன் மரணமடைந்தானைப் பிண சரீரத்தைக் கடத்தித் தாய் தந்தை முதலாயினோர் தீனர்களாய் அழுது கதரிக்கொண்டிருந்தார்கள். அதைப்பார்த்த சங்கரர் இரக்கம் மேலிட்டவராய் சீதள முகத்துடன் பார்த்தனர். அத்தருவாயில் ஆகாயத்திலிருந்து "துக்கத்தைக்கண்டு நிவர்த்திக்காதவன் இரக்கம் வீண்" என ஓர் அசரீரியுண்டாயிற்று. அதைச்செவியுற்ற சங்கரர் சர்வ சக்தி வாய்ந்த உனக்கே அது தக்கதெனவும் யாதொரு வல்லமையுமில்லாத இச்சரீரத்தாற் செய்யத்தக்கது ஒன்றுமில்லை எனவும், தன்னுடைய சாமர்த்தியத்தில் அகங்காரமின்றிய எதார்த்தத்தை வெளியிட்டனர். உடனே செத்துக்கிடந்த அக்குழந்தையானது தூங்கி எழுந்ததை யொத்து உயிர் பெற்றெழுந்தது. இதைக்கேட்ட யாவரும் இவரே ஈஸ்வரனெனத்துதித்துச் சேவையைச் செய்து ஆனந்தத்தை யடைந்தார்கள்.



## அஸ்தாமலகர் சிஷ்யராதல்.

அதன் பிறகு சங்கரர் அழகிய சோலையின்கண் வீற்றிருக்கும் மந்திர சொரூப மூகாம்பியாரை "கவாரோகணம்" என்ற ஸ்தோத்திரத்தால் சேவையைச் செய்து, பக்கத்துள்ள பலிபுரம் எனப் பெயர் வாய்ந்த ஸ்ரீவல்லிபுரத்தில் பிச்சையாற் சில திங்கள் வசித்துவந்தனர். அவ்வூரிலுள்ள இரண்டாயிரம் சிஷ்ய வேதியர்களாற் புகழ்பெற்ற பூர்வமீமாம்ஸையின் தலைவரான பிரபாகரப் பட்டரென்பாரொருவர் இருந்தனர். அவருக்கு அழகுடன் கூடிய பிரகாசம் வாய்ந்த புத்திரனொருவன் மூன்று வயதுடையவனையும், பாலர் யௌவனம் முதலிய யாதொரு தசையின் பருக்தறிவில்லாதவனாகவும், சரீர சம்பந்தமான உலக காரியங்களில் அறிவுடையவனைப் போன்றும், அறிவின்றியவனைப்போன்றும், பல படித்தாகவும் வாய் பேசாதவனாகவுமிருந்தனன். அவன் தந்தையார் அவனை அறிஞர்கள் முதலிய பெரியோர்களிடத்தும் தீர்த்தம் மூர்த்தி தலம் என்பவற்றின் யாத்திரையினாலும் மணிமந்திர ஔடதங்களினாலும் வேண்டிய பரிகாரங்களைச் செய்தும் பயன்படாது துக்கப்பட்டுக்கொண்டிருந்தனர்.

இச்சங்கர குருவானவர் வந்திருப்பதைக் கேள்வியுற்ற பிரபாகர பட்டர் தன் புதல்வனுடன் பத்திர புஷ்பாதிகளை கையிலுடையவராய் விருத்தாந்தங்களைக் கூறிப் புத்திரனையும் வணங்கும்படி செய்து தானும் சேவையைச் செய்தனர் உடனே சங்கரரானவர் அம்மகவை எடுத்துத் தன் அஸ்தத்தைச் சிரசில் வைத்து நீ யார்? ஜடன் பேசாதிருக்கின்றாயென்று கேட்டனர். அப்போது சங்கரர் கைப்பரிசத்தை யடைந்த [illegible] முடிவான ஞானங்களையுடைய சகல அறிவுகளுமுண்டாய் நான் ஜடனல்லன் சச்சிதானந்த அத்வைத வியாபக வடிவ என் சந்நிதி மாத்திரத்தில் ஜடமும் நடைபெருகின்றனவென்ற விடையொடு கூடிய தர்க்க வியாகரணங்கட்கிணங்க சமஸ்கிருத வடிவ பன்னிரண்டு செய்யுட்களால் மறுமொழிகூறியது. அதைச்செவியுற்ற சங்கரர் அம்மகவுக்கு அஸ்தாமலகரென்ற பெயரிட்டழைத்தனர். ஆங்குள்ள யாவரும் ஆச்சர்யத்தையடைந்து சங்கரரிடம் குருபக்தியை மேற்கொண்டார்கள். அப்போது சங்கரர் பிரபாகர பட்டரைப்பார்த்து இக்குழந்தை உனக்கு

உலகவியவகாரத்துக்கு உதவாதாகையால் எம்மிடத்து இருக்கவேண்டியதென்றுகூறி அனுப்பிவைத்தனர்.

## சிருங்ககிரியில் சரஸ்வதியாரை ப்ரதிஷ்டைசெய்தல்.

பிறகு சங்கரரானவர் பிரஹ்ம விஷ்ணுவின் அம்ஸமான சுரேஸ்வரர் பத்மபாதர் முதலிய சிஷ்யக்கூட்டங்களுடன் புறப்பட்டு கங்கை முதலிய தீர்த்தங்களிலும் சிறந்துவிளங்கும் துங்கபத்திரா நதிதீரமுள்ள "ருஷ்யஸிருங்கம்"எனப்பெயர்பெறும் கலைக்கோட்டு மஹரிஷியின் ஆசிரமத்தையடைந்து, ஆங்குவசிக்கும் யாகாதி கர்மங்களோடுகூடிய வேதியர்களுக்கு பிரஹ்மஞான மார்க்கத்தை விளக்கும் வேதபாஷியங்களை ஓதுவித்துச் சந்யாஸத்தையும் கொடுத்து சிலகாலம் ஆங்குவசித்து அவ்விடம் சிறந்தபுண்ணிய பூமியென நினைத்து ஓர் ஆலயம் நிர்மாணஞ்செய்து சரஸ்வதியாரான சாரதாம்பாளை பிரத்தியக்ஷமாக்கி அக்கோவிலில் எழுந்தருளும்படி ஸ்தாபித்து, விதிவடிவ நித்தியபூஜையும் வருஷோற்சவங்களும் நீண்டு நடக்கும்படி தக்க ஏற்பாடுகளைச்செய்து "சாரதா பீடம், வியாக்யான சிம்மாசனம், பாரதி சம்பிரதாயம்" என்பவைகளோடுகூடிய ஓர்மடத்தையும் கட்டுவித்து சாரதாம்பையின் ஸ்தானத்தில் சிஷ்யர்களில் தலைமைவாய்ந்த சுரேஸ்வரருக்கு உலகத்திற்சிறந்த ஆசாரிய அபிஷேகம் செய்வித்து, இச் சாரதாபீடத்தை எவர்கள் பழிப்பார்களோ அவர்கள் ஓயாது நரகத்திலழுந்தக்கடவதெனவும், பக்தியோடு சேவையைச் செய்பவர்கள் எவர்களோ அவர்கட்கு ஞானத்தோடு இஷ்டசித்தியுமுண்டாகக் கடவது எனவும் சாபானுக்கிரகங்களை விதித்து, பரம்பரை யிடைவிடாது ஜகத்குருவாயிருக்கக் கடவதென ஆசீர்வாதத்தைக் கூறி, வரப்ரசாதத்துடன் சுரேஸ்வரரை மடாதிபதியாக ஸ்தாபித்தனர்.

## சங்கரர் ஆனந்தகிரிக்கு அருளல்.

பின்னோர்தினம் உடம்பின்நிழலையொத்து, ஊழியவேலைகளையே மிக்க சந்தோஷத்துடன் செய்துகொண்டு அசனற் பெருமையை அடைந்துள்ள ஓர் சிஷ்யரிருந்தனர். அவருக்குச் சங்கரர் ஆனந்தகிரி என்று பெயரிடப்பெற்றிருந்தனர். அவர் ஓர்தினம் காவித்துண



டங்களைத் தோய்ப்பதற்கு ஆற்றங்கரை சென்றிருந்த சமயத்தில் வேதபாஷியங்களை ஓத சிஷ்யர்கள் வந்தார்கள். சங்கரர் வழக்கப்படி ஆனந்தகிரி வருவதை எதிர்பார்த்துப் பாடத்தை ஆரம்பிக்காதவராய் சும்மாவிருந்தனர். இதைக்கண்ட பத்மபாதர் முதலிய சிஷ்யர்கள் எழுந்து ஸ்வாமி ஆனந்தகிரியார் எழுத்தொன்றுந்தெரியாதவர். அவர் சன்னிதியின் ஊழியத்திலேயே இருப்பவராதலின் அவருக்காக எங்கள் பாடம் தவக்கமாகின்றதெனச் சொல்லி வேண்டிநின்றனர். அதைக் கேள்வியுற்ற சங்கரர் இவர்கள் படிப்பினால் அகங்காரமடைந்திருக்கின்றனரென்ற எண்ணமுடையவராய் ஆனந்தகிரிக்கு எல்லா வித்தைகளிலும் பாண்டித்திய முண்டாகும்படியாக மனதில் நினைத்தருளினர். அதன்பின் ஆற்றங்கரையிலிருந்துவந்த ஆனந்தகிரியார் சங்கரகுருவின்முன் நின்று வேதத்தின் சிரோரத்தினமாய் விளங்கும் பரமார்த்த லக்ஷணங்களாலமைந்த "த்ரோடகம்" என்ற சமஸ்கிருத செய்யுட்களாற்பாடி துதித்தனர். அதைக்கேட்ட சிஷ்யர்கள் யாவரும் தங்களுக்குக் கல்வியால் ஏற்பட்ட அகங்காரத்தையொழித்து மன்னிக்கும்படி சங்கரரைச் சேவைசெய்தார்கள். அதுமுதல் அவருக்கு த்ரோடகாசாரியரென்ற பெயர் உண்டாயின.

இவ்வாறு ஆயிரக்கணக்கான சிஷ்யக்கூட்டங்களில் சுரேஸ்வரர், பத்மபாதர், அஸ்தாமலகர், த்ரோடகர் என்ற இவர்கள் பிரஹ்மாவின் முகங்கள் நான்கைப்போலவும், ருக்காதி வேதங்கள் நான்கைப் போலவும், தர்மாதிபுருஷார்த்தங்கள் நான்கைப்போலவும் சிறந்தவர்களாயும், இவ்வுலகின் நான்குதிக்கையும் வித்வத்தன்மையால் ஜெயிக்கக்கூடியவர்களாயும், அஞ்ஞானவிருளை நாசஞ்செய்யும் பிரஹ்மஞான சூரியகிரணத்தைப்போன்று, குருபணியை விதிப்படியியற்றி சங்கரருக்குச் சந்தோஷமுண்டாகும்படி செய்துவந்தார்கள்.

பின்னோர்கால் சங்கரரிடம் சுரேஸ்வரர் சேவைசெய்து, யான் செய்யவேண்டிய கடமையைக் கட்டளையிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். அதற்குச் சங்கரர் தான்செய்த பிரஹ்ம சூத்திர சாரீரக பாஷியத்துக்கு விருத்தியுரை செய்யும்படி உத்திரவுசெய்ய அதையேற்று விடைபெற்றுச்சென்றனர். இதைக் கேள்விப்பட்ட சிற்சுகாசாரியர் முதலிய சிஷ்யர்கள் சங்கரரிடம்வந்து ஸ்வாமி சுரேஸ்

வரர், சந்யாஸ விதியானது பஞ்சேந்திரியங்களின்றிய அலிபுருடராய குறையுறுப்பினரைச்சேர்ந்தது என ஜைமினி மதசம்பந்தமான பூர்வ மீமாம்ஸையில்எழுதியுள்ளார். தவிரவும் சந்யாஸிகளைத்தன்வீட்டிற்கு வாராதபடி அடித்துத் துரத்துபவர். அவர்விருத்தியுரை செய்தால் வேதாந்தபரமாக ஏற்படமாட்டாதெனவும், முதல் மாணாக்கராய பத்மபாதரைக்கொண்டு எழுதும்படி உத்திரவிடவேண்டுமெனவும் வேண்டிக்கொண்டார்கள். அத்தருவாயில் பத்மபாதர்வந்து ஸ்வாமி அஸ்தாமலகரை எழுதும்படி சொன்னால் செவ்வனே அமையும் என்றனர்.

அதற்குச் சங்கராச்சாரியரானவர் ஹே பத்மபாதரே! முன் யமுனா நதிக்கரையில் உலக இச்சையில்லாத சித்தபுருடயோகி ஒருவன் தவமியற்றி இருந்தனன். ஸ்நானத்துக்குவந்த ஒரு பிராஹ்மணஸ்திரீ இரண்டு வயதுள்ள பாலகனைப் பார்த்துக்கொள்ளும்படி யோகியின்பக்கலில் வைத்துவிட்டு ஸ்நானஞ்செய்யச் சென்றனள். அக் குழந்தை விளையாடிக்கொண்டே சென்று ஆற்றில்விழுந்திறந்தது. அதன் தாயும் ஏனையோர்களும் அந்தக்குழந்தையை யோகியின் முன்னரிட்டுக் கதறித்துக்கித்தார்கள். குழந்தையைக் கவனியாமலிருந்த அந்த யோகியானவர், தாய் தந்தையரின் துக்கத்தை சகிக்கமுடியாதவராய் இரக்கம் மேலிடப்பெற்றுத் தன் கிழ ஆக்கையைவிட்டு குழந்தையின் சரீரத்திற் பரகாயப் பிரவேசஞ் செய்தனர். அவரே இவ் வஸ்தாமலகராதலினாலும், பெரும்பாலும் அந்தர்முகராயிருத்தலினாலும், உலக சம்ப்ரதாயத்துக்கிணங்க என் பாஷ்யத்துக்கு விவரணம் எழுதுவதில் சமர்த்தராகார். ஆனால் சுரேஸ்வரரோ பிரஹ்மாவினம்ஸமாயுதித்தவர்; நீண்டு என்னுடன் வாது செய்ததால் அவருடைய வித்வத்தன்மையின் சாமர்த்தியம் எனக்கு நன்றாய்த்தெரியும்; அவரைத்தவிர தற்போது வேறொருவரும் என பாஷ்யத்துக்கு வார்த்திகவுரை எழுதச் சமர்த்தரில்லை; தவிரவும் இத்தகைய லோகோபகாரவிஷயத்தில் விரோதியாகப் பலர் ஏற்பட்டுவிட்டமையால் நிறுத்துவதாகத் தீர்மானித்துள்ளேனெனக் கூறி சுரேஸ்வரரையழைத்து, உமது படிப்பின் க்யாதியைப்பற்றி பலருக்கு பொறாமை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவதால் நீர் வேறு



நூல் செய்யும் என கட்டளையிட்டு விவரணம் எழுதுவதை நிறுத்தி விட்டனர்.

அதைக்கேட்ட சுரேஸ்வரர் குருவின் கட்டளையை சிரத்தில் தரித்து நைஷ்கர்மியசித்தி, சம்க்ஷேப சாரீரகம் முதலிய நூல்களைச் செய்து குருவின் சந்நிதியில் வைத்து வணங்கினர். அதைப்பார்த்த சங்கரர் மனமகிழ்ச்சியை யடைந்தனர். அந்நூலின்கண் ஞானச் செல்வம் நிறம்பிச் சிரவணஞ் செய்யும் சிஷ்யர்களின் புத்தியிலுள்ள அக்ஞானவிருளைத்துறந்து பிரஹ்மபாவமாய் விளங்கியது.

அதன் பின்னர் சுரேஸ்வரர் கோபமுடையவராய் குருவின் ஆஞ்ஞைப்படி விவரணம் எழுதும் புண்ணியத்துக்கு விக்னம் ஏற்பட்டதே என்ற காரணத்தைக்கொண்டு கமண்டல நீரைக் கையில் எடுத்து யான் எழுதும் விவரணத்துக்கு விரோதம் செய்தவர்கள் எவர்களோ அவர்களாற் செய்யப்படும் நூல்களெல்லாம் முடிவடையாமற் போகக்கடவது என ஜலத்தைப் பூமியிலிட்டுச் சாபங்கொடுத்தனர்.

அதன் பின்பு சுரேஸ்வரர் குருவின் ஆணைப்படி கிருஷ்ண யசுர் வேத சுக்லயசுர்வேத சாகைகளின் பாஷியங்களுக்குத் தனது வார்த்திகவுரையாலும் பத்மபாதர் பிரஹ்ம சூத்திர லக்ஷண சம்பந்தமான விஜயடிண்டிமம், பஞ்சபாதிகை முதலிய நூல்களாலும் சங்கரர் முன் குருதக்ஷணை கொடுத்தார்கள்.

பின்னொர்தினம் [illegible] முனனிலையில் சுரேஸ்வரர் சென்று, வேதபாஷியங்களுக்கு விவரணம் எழுதும் புண்ணியமின்றியவனானேனே எனத்துக்கத்தை அடைந்தனர். அதைக்கேட்ட சங்கரர் சுரேஸ்வரரை நோக்கி, நீர் இவ்வுடம்புடன் எண்ணூறுவருடம் தவம் செய்து மறுஜன்மத்தில் வாஜஸ்பதி எனப்பெயருடையவராக ஜனித்து, ஆறுஎண்ணிக்கையுள்ள ஆஸ்திகநாஸ்திக பாஷியத்துக்கும் என்பாஷியங்கள் பூருவுக்கும் ஆயுள்பூருவும் உரை எழுதுவாயாக. அவ்விருத்தியுரையானது இவ்வுலகத்து எல்லாக்காலத்தும் வியாபித்து ப்ரகாசிக்கக்கடவது என ஆசீர்வதித்து வரங்கொடுத்தனர். அவ்வரத்தையடைந்த சுரேஸ்வரர் திருப்தியையடைந்தனர்.

## பத்மபாதரின் தீர்த்தயாத்திரை.

அப்பால் பத்மபாதாசாரியர் சுரேஸ்வரரால் தான்செய்யும் நூலகட்கு சாபம் ஏற்பட்டதென்ற காரணத்தினால் குருவின்கட்டளை பெற்று இராமேஸ்வரயாத்திரையின்மூலமாய் சாபத்தை விமோஜித்து பிரஹ்மசூத்திர பாஷிய உரையின் குறைவைப்பூர்த்திசெய்யும் இச்சையையுடையவராய் தன் சிஷ்யர்களுடன் சங்கரகுருவின் சந்நிதியில் வந்து யாத்திரைக்குச்செல்ல உத்திரவைவேண்டித் தெரிவித்துக் கொண்டனர். அதைச் செவியுற்ற சங்கரப்பெருமான், யாத்திரையின் லக்ஷணம், செல்லும்விதி, அதற்கு அதிகாரி, யாத்திரையில் சன்யாஸிகள் நடக்கவேண்டியவிதம், பிரஹ்மக்ஞானிகள் யாத்திரை செய்வதனாலுண்டாம் பிரயோஜனம், தேசசஞ்சாரத்தினால் ஏற்படும் கெடுதல்கள் முதலியவற்றையும் போதித்து சிருங்ககிரியினின்றும் விடைகொடுத்தனுப்பினர்.

## சங்கரர் தன்மாதாவுக்குப் பதவியளித்தல்.

அதன்பின்னர் சங்கரபகவத்பாதாசார்ய ஸ்வாமிகள் சிருங்ககிரியில் சாரதாபீடத்திருக்குங்கால், ஓர்நாள் தன்தாய்க்கு ப்ராரப்த க்ஷய காலம் ஏற்பட்டதென்பதை ஞானநோக்காலறிந்து, ஆகாயமார்க்கமாய் காலடியையடைந்து ஆரியாம்பையான தன் தாயைக் கண்ணுற்றனர். சங்கரரைக்கண்ட ஆரியாம்பை ஆனந்தமுகமுடையவராய் என் இச்சைப்படி மைந்த! வந்தனையோ வெனக்கூறி, என் சரீரகருமத்தை முடித்துக் கதியடையச் செய்யவேணமெனத் தெரிவித்துக்கொண்டனர்.

அப்போது சங்கரரானவர் பிரஹ்மாத்ம ஐக்கிய ஞான வடிவ "உபதேச சகஸ்ரி"யால் நிர்குணதத்துவத்தை உபதேசித்தனர். அதைக்கேட்ட அவ்வம்மை நீ சொன்னவற்றை கிரகிக்கும் ஆற்றல் என்புத்திக்கு இல்லையெனக்கூறினர். அதன்பின் எட்டெண்ணிக்கையுள்ள "சிவபுஜங்கம்" என்ற பெயர்வாய்ந்த சமஸ்கிருத கவிவடிவ ஸ்தோத்திரத்தைச் செய்து சிவனை ஸ்மரித்தனர். அதனைக்கேட்டுக் கொண்டிருந்த அவ் ஆரியாம்பை ஏ சங்கர! சூலங்களைக்கையிலுடையவர்களான இச் சிவகணங்கள் என்னை அழைக்கின்றனர். பயமுண்டாகத் தக்க இவர்களுடன் யான் செல்லமுடியாதெனச் சொல்லினர்.



அதன்பின் தன்தாயின் கருத்தைச் சங்கரரானவர் அறிந்து "விஷ்ணு புஜங்கம்" என்ற பெயர்வாய்ந்த சமஸ்கிருதக் கவிகளால் விஷ்ணுவை ஸ்துதிசெய்தனர். அதனால் சங்குசக்கர பீதாம்பர கதாதாரிவடிவ பகவான் கட்டளையைப்பெற்ற பாரிஷதர்களோடு தேவசரீரம் பெற்று விமானசாரியாய் (சங்கரர் ப்ரசாதத்தால்) அர்ஜ்ஜிராதி வழியால் ஆரியாம்பை வைகுண்டசாரூப்யபதவியை அடைந்தனர்.

## சங்கரர் தன்தாயின் சரீரத்தை தகனஞ்செய்தல்.

அதன்பின்னர் சங்கரரானவர் தன்தாயின் உடம்பினைத் தகனஞ்செய்யும்பொருட்டு யாகாக்கினியைத் தந்துஉதவுமாறு பூர்வாசிரம சுற்றத்தவர்களை அழைக்கும்படி செய்தனர். அதற்கு அவர்கள் சந்யாஸியர் இல்லத்துக்குத் திரும்புதல் கூடாதென பலகாரணங்களைச் சொல்லினர். அதற்குச் சங்கரர், தாயானவள் எந்தத்தசையிலும் யாவராலும் பூஜிக்க யோக்கியதையுடையவள் என்னும் பிரதிஞ்ஞைக்கு ஏற்பட்ட சாஸ்திரவடிவ நியாயயுக்திகளைத் தெரிவித்தும் கவனியாது அக்கினியை உதவினார்களில்லை.

## சங்கரர் அவ்வகரவேதியர்க்குச் சாபங்கொடுத்தல்.

அப்போது சங்கரகுருவானவர் அவ்வேதியர்களை நோக்கி உங்களுக்குச் சன்யாஸிப்பிச்சை கொடுக்கும் யோக்கியதை யில்லாமற் போகக்கடவது எனவும், நீங்கள் வேதத்திற்குப் புரம்பானவராக ஆகக்கடவது எனவும், உங்கள் வீட்டினிடத்தே உங்கட்கு சுடுகாடு ஏற்படவேண்டியதெனவும் சாபத்தைக் கொடுத்து, சுமந்து செல்ல உதவியில்லாததால் வீட்டையே மயானமாகவாக்கி, வாழைப்பட்டைகளை விறகுகளாகவைத்து, கைகளைத்தேய்த்து வலக்கரத்திலுண்டான அக்கினியாற் கொழுத்தி தாய் சரீரத்தைத் தகனஞ்செய்து மந்திர பூர்வகமாய் கமண்டல ஜலத்தைத் தெளித்து, கங்காபகவதியின் ஸ்தோத்திரத்தாலுண்டான "அஸ்திகாரணி" என்ற தீர்த்தத்தாற் பஸ்மத்தைச் சாந்தப்படுத்தி, வேதியர்கட்குப் பதிலாகப் பக்ஷிகளைக் கொண்டு வேதமந்திரோச்சாரணங்களைச் செய்யும்படி செய்து, தாய் கடனைமுடித்து, இத்தேசம் சன்யாஸிகள்வருவதற்கு தகுதியற்றதாக ஆகுக எனவும் கூறி வான்வழியாக சிருங்ககிரியை யடைந்தனர்.

## பத்மபாதர் பாஷியவுரை இழந்தது.

யாத்திரைக்குச்சென்ற பத்மபாதர் திருக்காளத்தி, திருக்காஞ்சி தான் ஜன்மமான சிதம்பரம் முதலிய சிவஸ்தலயாத்திரைகளைமுடித்து ஸ்ரீரங்கம் வந்து ரங்கநாதரைத் தரிசித்து தன் மாமன் வீட்டிற்குப் பிச்சையின்பொருட்டுச் சென்று அங்கு வாதிட்ட மீமாஸ்கர்களையும், வைஷ்ணவர்களையும் வென்று பிரபாகரபட்டர் மாணாக்கராயும் அநேகஞ் சிஷ்யர்கட்குக் குருவாயும் பூர்வமீமாம்ஸையின் மிக்க அபிமானியாயுமுள்ள தன் மாமனுக்கு பூர்வமீமாம்ஸையிலுள்ள அவர் அபிப்பிராயத்தைக் கண்டனஞ்செய்யப்பட்டிருக்கும் தன்பாஷியவுரையைக் காட்டினர். அதைப்பார்த்த அவர் வாக்கால் வெளிக்குச் சந்தோஷமுடையவராயும் அதன் அபிப்பிராய சம்பந்தமான சித்தாந்தத்தால் தன் மதசம்பந்தமான சித்தாந்தம் மறுக்கப்பட்டிருக்கின்றதென்ற துவேஷம் மனதிலும் உடையவராயும் புகழ்ச்சியைக் காண்பித்தனர். அதன்பின்னர் பத்மபாதர் தன் நூல்களை வெகுபந்தோபஸ்தாகவைத்திருக்கும்படி கொடுத்து இராமேஸ்வர யாத்திரைக்குப்போயினர்.

அதன்பின் அவர் மாமனானவர் துவேஷ எண்ணத்தால் பத்மபாதருடைய பாஷியத்தைத் தவிர ஏனைய சாமான்களை எல்லாம் வெளியிலெடுத்துக்கொண்டு தானே தன்வீட்டில் நெருப்பிட்டுக் கொளுத்திவிட்டுச் சந்யாஸியின் நூல்கள் போய்விட்டதே யென்று சொல்லித் துக்கமுடையவர்போலப் பாசாங்கு செய்துகொண்டிருந்தனர்.

பத்மபாதரானவர் மாயூரம், மத்யார்ச்சுனம், கும்பகோணம், மதுரை, காவேரி, தாம்ப்ரபர்ணி முதலிய க்ஷேத்திர யாத்திரைகளை முடித்து, மூன்றுநாள் தவஞ்செய்து அகஸ்தியரைத் தரிசித்து, அவர் சொற்படி இராமேஸ்வரஞ்சென்று, அங்கு வந்தவர்களை வாதில் வென்று, இராமேஸ்வரம் என்ற பதத்தின் சித்தாந்தத்தினை வெளிப்படுத்தி இராமலிங்கத்தைத் தரிசித்து, ஸ்ரீரங்கம் வந்து பாஷியம் முதலிய புத்தகங்கள் நெருப்புக்கிரையானது கேட்டு, திரும்பவும் புதிதாகப் பாஷியவுரையை எழுத ஆரம்பிவித்தனர். இதைப்பார்த்த அவர் மாமன் பத்மபாதருக்கு அன்னத்தில் விஷங்கலந்து கொடுத்து நூல் செய்யும் நுண்ணறிவில்லாதபடி புத்தியைப் பேதப்படுத்தி விட்-



டனர். பிற்பாடு பத்மபாதர் நூலெழுதும் ஆற்றலில்லாமைக்காகத் துக்கத்தை யடைந்தவராய், சையமலைப் பக்கத்திருந்த சங்கர பகவத்பாத ஆசாரியாளுடைய சன்னிதிவந்தடைந்தார்.

பிறகு குருவின் சேவையால் பத்மபாதருடைய அறிவின் மயக்கம் நீங்கிற்றாயினும், நூல்கள் செய்யும்வல்லமை யின்றியவராய் சங்கரரைப் பார்த்து, வேதபாஷியங்கள் தீக்கிரையானதும் மயக்கவுணர்வு ஏற்பட்டதும் எக்காரணத்தாலெனக் கேட்டனர். அதற்குச் சங்கர குருவானவர் சுரேஸ்வரர் சாபத்தின் காரணமாக, உன் மாமனாலேயே தன் மதாபிமானத்தால் தானே தன் வீட்டில் நெருப்பிட்டுக் கொளுத்திப் பாஷியத்தை நாசஞ்செய்ததும், அன்னத்தில் மருந்திட்டு மயக்கியது முதலிய நடந்த விருத்தாந்தங்களை வெளியிட்டனர். அதைக்கேட்ட பத்மபாதர் சங்கரரின் பாதசேவையால், வெந்துபோன பஞ்சபாதிகை என்ற விவரணத்தை அவர் வாக்காற்கேட்டு எழுதிப் பூர்த்திசெய்துகொண்டு, குருவின் பாதோதக தீர்த்தத்தால் எல்லாச் சித்திகளையுமடைந்து சந்தோஷ சித்தராயிருந்தனர்.

## சங்கரர் கேரள நாட்டு அரசனுக்கு அநுக்கிரகித்தல்.

இத்தகைய பத்மபாதர் பாஷியவுரை சம்பந்தமானவிஷயத்தைக் கேள்வியுற்ற கேரள தேசத்து இராஜசேகரனென்ற அரசனானவன் தன் சரஸ்வதி பண்டாரம் என்ற புத்தகசாலை புத்தகங்களுடன் தீக்கிரையானதுபற்றி மறுபடியும் அவற்றை யடையும் கருத்துடையவனாய்ச் சங்கரரைச் சரணமடைந்தான். அதைச் செவியுற்ற சங்கர குருவானவர், நெருப்புக் கிரையான எல்லா நூல்களையும் அவ்வெண்ணிக்கையுள்ளவர்களை எழுதும்படியுத்திரவிட்டுத் தாம் ஒருவராகவே ஒரே சமயத்தில் சம்பூரணஞ்செய்து கொடுத்தனர். அதைப் பார்த்துச் சந்தோஷத்தை யடைந்த அவ்வரசன் ஸ்வாமி, தாங்கள் எனக்கு இடும் கட்டளை என்னவென்று கேட்டனன். அதற்குச் சங்கரர் உன் தேயத்து வேதியர் யாவரும் வேதத்திற்குப் புறம்பாகவும், அவரவர்கள் மனையிற்றானே மயானம் ஏற்படவும், சன்யாஸிப் பிச்சையில்லாமலிருக்கவும் வேண்டுமென்று உத்திரவிட்டுச் சுரேஸ்வரர் பத்மபாதர் முதலிய சிஷ்யகோடிகளுடன் திக்கு விஜயத்தின் பொருட்டுப் புறப்பட்டனர்.

## சங்கரர் திக்கு விஜயம் செய்தல்.

சங்கர பகவத்பாத ஆசாரியரானவர், தலைமை பெற்ற சுரேஸ்வரர், பத்மபாதர், அஸ்தாமலகர், த்ரோடகர், ஏனைய சிற்சுகர், சமித்பாணி, சித்விலாசர், விஞ்ஞான கந்தர், விஷ்ணுமுக்தர், சுத்த கீர்த்தி, பானு, பரீஸி, கிருஷ்ணர், தரிஸனபுத்தி, விரிஞ்சபாதர், சுத்தானந்தர் முதலியோரை ஆதியாகவுடைய சிஷ்யக் கூட்டங்களுடனும், இந்திரனைய சுதன்மராஜனென்பவன் சைன்யங்களுடனும் யுத்தக் கருவிகளுடனும் பின்னால் வர, திக்கு விஜயத்தின் பொருட்டுத் திருவிடைமருதூர் வந்து, அங்குள்ள க்ஷேத்திர சிவலிங்கத்தினின்றும் "சத்தியம் அத்வைதம்" என்ற வாக்கியத்தை வெளிப்படுத்தி, அங்குள்ளவர்க்கு அத்வைத ஞானத்தில் நம்பிக்கையும் விருப்பமும் உண்டாகும்படி செய்து, ஆங்கு வந்த லிங்கங்கட்டிகள், வீரவைணவம், காபாலிகம், சக்தியுபாசனை, சூரியவுபாசனை, கணபதியுபாசனை முதலியவற்றுள்;—லிங்கந்தரித்தல், வீரவைணவம், சடைதரித்தல், எலும்பு பூணல், மதுமாமிஸம்புசித்தல், இரத்த சந்தனம், வியபிசாரம் இவைகளை நீக்கி, வேதோக்தமான சாத்மிக வடிவமய மன இந்திரிய அடக்கம், அன்பு, சுத்தம், சத்தியம், தெய்வபக்தி, குருபக்தி இவைகளால் வேதத்தின் முடிபை யறிந்து; சர்வ நாம ரூப சர்வ தேவ வடிவமாயும் அஞ்ஞானிகளுக்கு மாயையால் மறைப்புண்டவராயும், ஞானிகளுக்கு எங்கும் எல்லாம் தாமாகியும், தன் வசத்துள்ள மாயா ரூப அணிமாதி சித்தியால் பிரபஞ்ச சிருஷ்டியாதியைச் செய்பவராயுமுள்ள, பிரத்யகபின்ன பிரஹ்மமாகிய ஆத்மாவைப் புத்தீந்திரிய பிராண மனோ வாக்காதி சரீரங்களுக்கப்பால் யிடையீடின்றி, உள்ளும் வெளியும் உணருமாறு உபதேசித்துச் சர்வ மதங்களையும் வேதாந்தத்துள்ளடக்கி நிலைநாட்டினர்.

அதன்பிறகு சங்கரர் இராமேஸ்வர யாத்திரை செய்து, ஆங்குள்ள சாக்தா மதத்தை மறுத்து அவ்வுபாசனையை அத்வைத பரமாக ஸ்தாபித்து, சிதம்பரஞ் சென்று ஏழுநாள் சிவயோகத்திலிருந்து சிவகெங்கை தீர்த்தத்தையும் ஞான வித்தையையும் உண்டுபண்ணி, காஞ்சீபுரஞ் சென்று வீரவைணவங்களை மறுத்து, காஞ்சியில் அடித்துக் கொலைசெய்து வந்த காளியை, காமாக்ஷியம்மன் முன்



னிலையில் பாதாளத்தில் அமிழ்த்தி, அதன்மேல் காமகோடி இராஜாக்கிய யந்திரத்தை ஸ்தாபித்து, திருவேங்கட மென்னும் திருப்பதி சென்று, ஆங்கு பூஜையிற் றோன்றிய விஷ்ணு, ஆதிசேடன், சுப்ரஹ்மண்யர் சம்பந்தமுள்ள வெங்கடேச மூர்த்தியைத் தரிசித்து, ஆங்கு தனகலாயந்திரத்தை ஸ்தாபித்து, தேவதா பூஜையைச் செய்து, அங்கிருந்து புறப்பட்டு சோள பாண்டிய விதர்ப்ப நாடுகளிலுள்ள புறமத வாதியரை வென்று ஆந்தரவேதியர்களனைவர்களையும் சிஷ்யர்களாக்கி, சிஷ்யனாகிய விதர்ப்ப ராஜனுக்கு உருத்திர பாஷியம் லலிதா பாஷியம் முதலியவற்றை அத்வைத பரமாக உபதேசித்து, அவ்வரசன் சேவித்துவர கொடிய பாபிகளாகிய காபாலிகள் கூட்டமிகுந்த கன்னடதேயத்துக்குச் சென்றனர்.

## சங்கரரால் கிரகசன் நாசமடைதல்.

சங்கர குருவானவர், அக்காபாலிக தேசத்தில் சுடுகாட்டுச் சாம்பலைப்பூசிச் சடையைவிரித்து எலும்பு மாலையைப் பூண்டு, மனிதர் தலையோட்டைப் பாத்திரமாக ஏந்தி, கரத்திற்கொண்ட கண்டற கோடரியினால் மனிதர் தலையை வைரவருக்குப் பலியிட்டு, நரர் பசு இவைகளைக் கொல்லும் யாகத்துக்குக் காப்பணிந்து, தன்னைப் போல் ஆசாரமுள்ள மலைகளில் வசிக்கும் பன்னீராயிரம் சிஷ்யக் கூட்டங்களுடன் ஊர்களிற் சென்று, பயத்தினால் சிஷ்யர்களாக்கி நரபலி கொடுத்துவந்த, கையில் வாளையுடைய "கிரகசன்" என்னும் காபாலிக குருவால் வேத ஒழுக்கங்கள் நாசமாகி, அதர்மவொழுக்கம் மிகுந்த அத்தேசத்தில், தன் சிஷ்யர்களுடன் வேத வொழுக்கத்தின மூலமாகத் தத்துவக்ஞான உபதேசத்தைச் செய்திருந்தனர்.

இச் சங்கரருடைய ப்ரபாவத்தால் தன்மதம் நாசமானதை யறிந்த அக்கிரகச காபாலிகக் குருவானவன் ஆயுதபாணிகளாய தன் சிஷ்யக்கூட்டங்களுடன் சங்கரரைக்கொல்லுமாறு முதலில் சிஷ்யர்களைக்கொல்ல முயன்று துரத்தினான். அப்போது சுதன்ம அரசன் தன் ஜைன்யங்களோடு யுத்தஞ்செய்து நின்றனன். அப்போது கிரகசன் அச் சைன்யங்களை வெட்டிக்கொன்று, சங்கரரின் சிஷ்யக் கூட்டங்களின்மீது ப்ரவேசித்தனன். அப்போது. சங்கரரின் சிஷ்யர்கள் திசைதப்பி ஓடினார்கள். அதைப்பார்த்த சங்கரர் ஓர் ஹுங்கார

சப்தத்தைச்செய்து அதனாலுண்டான அக்கினிஜ்வாலையால் காபாலிகக்கூட்டத்தைக்கொளுத்திச் சாம்பராக்கினர்.

அதைக்கண்ட அக் காபாலிகமதக் கிரகசக்குருவானவன் வைரவரைத் தியானித்து கண்டறகோடரியினால் சங்கரரைவெட்ட முயன்றனன். அவனுடைய அக் கொடியசெய்கையைக்கண்ணுற்ற அந்தர்யாமியான வைரவரானவர் பிரசன்னராகி, தனது பரமார்த்த தத்துவ வடிவமாகிய ஆத்மக்ஞானியான சங்கரருக்குத் தீங்குசெய்த பெருங்குற்றத்தின் பரிகாரமாகக் கிரகசன் தலையை அறுத்தெறிந்து, சங்கரரால் உபசாரணைசெய்யப்பெற்ற வேதமந்திர ஸ்தோத்திரங்களை ஏற்று மறைந்தனர். அதுமுதல் காபாலிக மதம் நாசமாகி, நியாய தர்ம வேத மார்க்கங்களும், மோக்ஷசாதனமாகிய குருபக்தி தத்துவக்ஞான விசாரணையாதிகளும் எங்கும்பரவியது.

## சங்கரர் நீலகண்டசிவாச்சாரியரை வாதில்வெல்லல்.

சங்கரர் அதன்பிறகு மேலச்சமுத்திரத்துள்ள கோகர்ணம் முதலிய க்ஷேத்திரங்களில் யாத்திரைசெய்து, அரதத்தர் முதலிய சிஷ்யக்கூட்டத்துடன் தர்க்கிக்கவந்த சைவ சித்தாந்த பாஷியராகிய நீலகண்ட சிவாச்சாரியருடன் வாதிட்டு, அவரால் வாதிட்ட விசிட்ட சைவ சகுணஜீவாபேத சிவத்தன்மையைப்பாதித்து, அச் சிவனுக்கு சர்வ வியாபக அத்வைத சச்சிதானந்தவடிவ பரமார்த்தத்தன்மையை தத்துவக்ஞானபரமாய் ஸ்தாபித்து, அக்ஞான ஜீவத்தன்மையின் நீக்கவரியிலாய் ஆத்மாவுக்கும், அச்சீவனுக்கும் தத்துவமஸ்யாதி பெரியவாக்கியங்களால் பின்னமின்றிய ஏகத்துவத்தை உபதேசித்து, சிவபிரானைப் பிரஹ்மமெனக் காட்டி, மனுஷ்யனானவன் தனது எதார்த்தவடிவம் இத் தன்மைத்தென அறியாதவரை, ஈஸ்வர சொரூபத்தைவறையறுக்க யோக்யதையில்லை என்பதையும் எடுத்துக்காட்டி வென்றனர்.

## சங்கரர் வடதேயத்தில் திக்குவிஜயஞ்செய்தல்.

அதன்பின் சங்கரகுருவானவர் கூர்ச்சரநாட்டையடைந்து துவாரகைச்சேர்ந்து ஆங்குள்ள வைணவர்களைவென்று அத்வைதபரமாகப் போதித்துப் பக்கத்துள்ள பாகலீக தேசவாசிகளின் நாஸ்திக



மதத்தை யொழித்து, பின்பு அவந்திபுரத்துள்ள பாஸ்கர பட்டருடைய பட்டர்மதத்தை பத்மபாதரைக்கொண்டு வெல்வித்து, மார்க்கங்களிலுள்ள எண்பத்தாறு துஷ்டமதங்களை ஒழித்து, அதன் பின்னர் சாங்கிய, கணாத, கௌதம, துர்க்கை, சாத்தேயம், குபேரம், இந்திரம், சேஷம், வாயு, விருஷபம், அநுமம், சௌரம், பாசுபதம், நிரீஸ்வர சாங்கியம், கருடம், பாதஞ்சலம், தன்வந்திரி, நவக்கிரகம், கால ஞானஜோதி, ரேணுகை, மல்லாரி, ஜ்வாலாமுகி, நரசிங்க, இராமகிருஷ்ண, காயத்க, காரடி, வாமாசார முதலிய இருநூற்று நாற்பத்தெட்டு மதங்களை அவ்வாதியர்களுடன் மஹாராஜபுரம், மிதிலை, நேபாளம், கௌட முதலிய பல தேயத்தினின்றும், நியாய வேத யுக்திகளால் தர்க்கத்தில் வென்று அவ்வவ்மதங்களில் உள்ள தோஷங்களை நீக்கி, வேத மார்க்க தத்துவக்ஞான பரமாய், அவ்வவ்வுபாசனைகளை உபதேச வடிவமாய் ஸ்தாபித்து, எங்கும் அத்வைத ஸ்தாபனஞ்செய்து, துஷ்டர்களைத்தண்டித்துச் சிஷ்யர்களாக்கி வேதத்திற்குத் தான் இயற்றிய பாஷியத்தைப் பிரகாசப்படுத்திக் குருசம்பிரதாயத்தை ஸ்தாபித்தருளினர். இதனால் மதச்சண்டைகள் முற்றும் ஒழிந்து எதார்த்த ஞானம் எங்கும் பிரகாசித்தன.

## பத்மபாதரால் ஏவலைச்செய்யும் அபிநவ குப்தன் நாசமடைதல்.

பிற்பாடு விவேக வைராக்கிய உபாதி முதலியவற்றாற் பிரகாசிக்கும் பிரஹ்மக்ஞான யோக பரமாம்ஸ சன்யாஸ தேசிகேந்திரராகி விளங்கும் ஆதி சங்கரரானவர், கங்காதீரத்தின்கண் வேதாந்த உபதேசஞ் செய்து கொண்டிருந்தனர். அப்போது முன் தோல்வி அடைந்தவனான அபிநவ குப்தனென்பவன், அதர்வண வேதத்திற் கூறப்படும் சியேனயாக மந்திரங்களால் சங்கரர் சரீரத்துக்கு கெடுதலை உண்டாக்கும்படி ஏவலைச் செலுத்தினான். அது அவருக்கு யாதொரு கெடுதலும் இயற்றாதாயினும், சங்கரரானவர் தன் சிஷ்யர்களின் பக்தி சாமர்த்தியம் என்பவற்றை வெளிப்படுத்தும் பொருட்டுத் திருவுளங்கொண்டாராதலால், அது ஆசனத்தை யடைந்து இரத்தத்தை வெளிப்படுத்தி மூலவியாதியை யுண்டு பண்ணிற்று.

அப்போது பணிவிடையை மேற்கொண்ட த்ரோடகரானவர் இதை யறிந்து ஆசிரியரிடம் தெரிவித்தனர். அதைச் செவியுற்ற சங்கரர், நீர்மேற்குமிழிக்குச் சமானமுள்ள கணத்தில் நாசமடையும் இச்சரீரத்துக்கு பரிகாரஞ் செய்வதில்லையென்று சொல்லிவிட்டனர். அதைக்கேட்ட த்ரோடகர் தங்கட்குச் சரீரத்தினிடத்து அபிமானம் இல்லாவிடினும், தங்களுடைய சரீர க்ஷேமத்தால் சிஷ்யர்களான எங்கட்கு தத்துவக்ஞான மூலமாக மோக்ஷப் பிரயோஜனமிருத்தலால் நாங்கள் பரிகாரஞ் செய்வோமென்க்கூறி, மருந்து முதலிய பரிகாரங்களைச் செய்தார்கள். அது பயன்படாமலிருந்தது. இதைக் கண்ட சிஷ்யர்கள் யாவருங் கூடி வைத்தியத்தின் கர்த்தாக்களை உபாசித்தார்கள். அப்போது அதன் பொருட்டாக அஸ்வினி தேவர்கள் இருவர் ப்ரசன்னராகி உங்கள் குருவிற்கு உண்டாயிருக்கும் இந்நோய், ஆதி ஆத்மிக வியாதியன்று; ஆனால் தோல்வியடைந்த மதாபிமானத்தைக்கொண்ட அபிநவகுப்தன் என்பவனால் செய்யப்பட்ட ஏவலெனக்கூறி மறைந்தார்கள்.

இதை அறிந்த பத்மபாதர் அதிகக் கோபங்கொண்டு, உத்தமோத்தமமான ஒரு பெரிய மஹா மந்திரத்தால் ஏவல் செய்த அபிநவ குப்தன் என்பவனைப் போயடையும்படி முயற்சித்தனர். அதைப் பார்த்த சங்கரர் தடுத்தாராயினும் அநியாயத்தின் காரணமாக அந்நோயானது தங்கள் குருவின் சரீரத்தைவிட்டு ஏவுதல் செய்தவனையடைந்து அதன் தொந்திரவினால் அவன் பிராணனை யிழந்தான். இதைக்கேட்ட இத்தகைய தொழில்வாய்ந்த வாதியரனைவரும், ஞானசம்பந்தமாகத் தீங்கைச் செய்வோமாயின், இவ்வாறு கேட்டையடைவோமென்ற எண்ணமுடையவர்களாய் ஏவற்பற்றொழிந்திருந்தார்கள்.

## சங்கரர் மஹா சக்திகளைச் சாந்தப்படுத்தல்.

மற்றோர் தினம் கங்காதீரக் குகையின்கண் நிஷ்டையிலிருந்த சங்கர குருவானவர் தாம் தனியாகச் சித்தபுரம் வடகுருநாடு முதலிய தேசங்களிற் சென்று, ஆங்குள்ளார்க்குப் பிரஹ்மவித்தையை உபதேசித்து, மஹா சக்திகளின் சம்பந்தமாய சாக்தேய மதத்தில் கட்



குடித்தல் வியபிசாரம் முதலிய பாபாசாரங்களைத் தர்க்கத்தால் நாசஞ் செய்தனர். அதன் மூலம் ஏற்பட்ட மஹா சக்திகளின் வெகுளியை வேத மந்திரங்களாற் றுதிசெய்து சேவை செய்யும் கிரமமாக சமஸ்கிருத "சௌந்தர்யலகரி" என்ற நூதன நூலைச் செய்து சாந்தப் படுத்தி, பூ கைலாசஞ் சென்று சந்திர மௌலீச்வர லிங்கத்தைப் பெற்று, கிம்புருட கண்டத்தைக் காத்திருந்த ராக்ஷஸனுடைய ப்ரஹ்மஹத்தி பாபத்தைப் போக்கி, அவனை விஸ்வரூப வடிவ பெரிய பூதமாக சிருஷ்டித்து, கலியுகம் முடியும் வரை ஆயுளுடன் வேதாந்த சம்பந்தமான மடம் முதலிய யாவற்றிடங்களிலும், அதிவேகமாகச் சஞ்சரித்து விக்கினங்களை நாசஞ்செய்து காவல்புரிந்து வரும்படியான தொழிலிலிருக்கக் கட்டளையிட்டு, முனிசிரேஷ்டர்களின் கியாதிக்கு விஷயமான ஜ்வாலாமுகி, பகளாமுகி, ரேவணகிரி முதலிய க்ஷேத்திரங்களிலும் அதன் பக்கங்களிலுமுள்ள அடியார்கட்கு உபதேசித்துத் தனது அணிமாதி ஐஸ்வரிய மஹிமையால் ஆங்குள்ளவர்களின் அகங்கார வடிவ கொடுமையான ஆசாரங்களை யொழித்து, எல்லாப் புத்தியாதி சரீரத்தை நடத்தும் பிரஹ்மமாய ஆத்மாவே சர்வகாரியங்களையும் செய்கின்றதெனவும் போதித்துத் திரும்பவுங் கங்காதீரம் வந்துசேர்ந்தனர்.

## சங்கரர் பத்மபாதரை ஆகாயமண்டலத்திற்கு அழைத்துச் செல்லல்.

பின்னோர் நாள் தன்னை வேண்டிக்கொண்ட பத்மபாதரை ஆகாயமண்டலத்திற்கழைத்துச் சென்று, பூகோள ககோளங்கள், காலம், மஹாமேருநிலை, துருவநிலை, சூரியன் முதலிய நவக்கிரகங்கள் இவைகளின் பரிமாணம் சக்திகள், செல்லும் மார்க்கங்கள், பாதம், உச்சம், நீசம், பகை முதலியவற்றையும், தொழிற்படுதற்கு ஏதுவாகப் பஞ்சாங்கத்தை யுண்டுபண்ணும் சித்தாந்தத்தையும், சோதிட சம்பந்தமான பிரசினையாதிகளையும், கிரகண சம்பந்தமாய் சகல விஷயங்களையும் அதற்குத் தக்க பிரபஞ்ச ஞானங்களையும், அகஸ்தியருடைய சித்தமார்க்கத்தினையும் சாக்ஷாத்தாகக் காட்டி உபதேசித்து மீண்டும் வந்து சேர்ந்தனர்.

வேறோர் தினம் சங்கரரைப் போலத் தாமும் சித்திகளைச் செய்ய ஆரம்பித்தவர்களானசிஷ்யர்கள், பயத்தையடையும்படியான பிரபல அணிமாதி ஐஸ்வரியங்களால் அவர்களிடம் சேவையைப்பெற்று, அவர்களுக்குள்ள பாபங்களை விமோஜித்து, பஞ்சத்திரவிடம், பஞ்சகௌடம்முதலிய பிராஹ்மணர்களின் பத்துவிதப்பிரிவுகளையும், திரமிடர் கௌடர் முதலியோரிடமிருக்கும் பேதம் உட்பிரிவு முதலியவற்றையும் அறியும்படிசெய்து, பிராஹ்மணாதி வர்ணம், பிரஹ்மசர்யாதி ஆசிரமம் என்பவற்றின் லக்ஷணங்களையும், நடக்கவேண்டிய ஒழுக்கங்களையுங் கூறி, அவ்வவர்களின் வர்ணாச்ரமங்களுக்கு விரோதமாகாதபடி ஆத்மக்ஞான மார்க்கத்தை ஏற்படுத்தி அநுஷ்டிக்கும்படி செய்தனர்.

மற்றோர் பகல் பிரஹ்மாகார விருத்தியிலிருக்கும் சங்கரர் முன் வேதவியாஸாசாரியரின் சிஷ்யருக்குச்சிஷ்யராயும், தனது கோவிந்தாசாரியருக்குக் குருவாயும், ஸ்ரீமந்நாராயண சொரூபராயுமுள்ள கௌடபாதாசாரியஸ்வாமிகள் பார்க்க விருப்பமுடையவராய், ஆகாய வழியாய்ப் பிரத்தியக்ஷமாகித் தரிசனந் தந்தனர். உடனே சங்கர குருவானவர் சரேலென்றெழுந்து, ஆசனத்திருத்தி அவர் பாதத்தில் அர்ஜனம், பூஜனம், தாசபாவம், சகாபாவம், ஆத்ம நிவேதனம் முதலிய நவவித பக்தியால் மந்திர விதிப்படி பூஜைபுரிந்து ஸ்தோத்திரங்களைச் செய்து நின்றனர். அதனாற் சந்தோஷ மிகுந்த கௌடபாதாசாரிய ஸ்வாமிகள் சங்கரரைப் பார்த்து, உம்முடைய செய்கையைப்பற்றி அப்போதைக்கப்போது கேள்வியுற்றோமாயினும், நேரில் பார்க்கும் இச்சையால் வந்தோமெனக்கூறி, தாம் செய்த நூல்களை யெல்லாம் அவர் விருப்பத்தின்படி படித்ததோடு, மாண்டூக்கிய வுபநிஷத்தின் பாஷியத்தைப் பூறாவும் வாசித்தனர். அவர் பேரால் அவரியற்றிய கௌடபாத காரிகையின் பாஷியத்தினையும் படித்துக் காண்பித்தனர். இவை அனைத்தையுங் கேட்ட பரமாசாரியரானவர் ஏ சங்கர! எனதுகாரிகைக்கு என் அபிப்பிராயப்படி நீ செய்திருக்கும் பாஷியத்தைக் கேட்டதால் நாம் மிகுந்த சந்தோஷத்தை யடைகின்றோம். எம்மினும் மேம்பட்ட அறிவிற் சிறந்தவனாகவிருக்கின்றாயெனவும் பாபத்தின் மிகுதியால் குரு சிஷ்



யர்களின் விதிகளும் சேவையும் மாறுபட ஏதுவாகவுள்ளதும், சிஷ்யனாவான் குருவின்சொத்தை அபகரிப்பதும், குருவை எதிர்த்து மேலுமேலும் தடுக்கமுடியாத தீங்கு முதலிய இம்சை வடிவ பாபங்களைச்செய்யும் இக்கலியில் குரு சிஷ்யர்கள் நடந்துகொள்ளவேண்டிய விதிவடிவ அநுஷ்டானங்களை ஸ்தாபித்து, ஆசுர எண்ணங்கொண்ட மனுடர்களை வேத வடிவ நல்வழியிற்றிருப்பி, அநேக கிரந்தங்களுடன் பிரஹ்ம வித்தையை ஸ்தாபனஞ் செய்த உனதாற்றலுக்கு வியந்தனம்; உனக்கு வேண்டிய வரங்களைக் கேட்கக்கடவாயென திருவாய் மலர்ந்தனர். அதைச்செவியுற்ற சங்கராசாரியரானவர் ஓ பரமாசாரிய! நான் இச்சித்த ஸ்வாமிகளின் பாத சேவை இன்று கிடைத்தது; இதைவிட மேம்பட்ட பிரயோஜனம் எனக்குவேண்டுவதாக இல்லை; ஆயினும் சன்னிதியின் உத்திரவுக்கிணங்க இச்சரீரத்துள்ள அகக்கரண விருத்தியானது எஞ்ஞான்றும் ஆத்ம நிலையினின்றும் மாறாதிருக்கும்படி வரமருள்புரிய வேண்டுமென வேண்டிக்கொண்டனர். அதைச்செவியுற்ற கௌடபாத ஸ்வாமிகள் பேரானந்தம் மேலிடப்பெற்றவராகி சங்கரருடைய ஒழுக்கம், குணம், வாக்கு, ஞானானுபவம் முதலியவற்றைப்பற்றிப்புகழ்ந்து அவ்வாறே ஆகுகவென வரமளித்து ஆகாய வீதியிற் போயினர்.

## சங்கரர் சர்வஞ்ஞபீடத்து ஏறுதல்.

மற்றோர் நாள் காலையில் சமாதியினின்றும் பகிர்முகராய சங்கரர் சிஷ்யர்களை யழைத்து எதிர்கால ஞானத்தைக் கூறி, இன்னோர் காரியம் குறைவாகிவிட்டதெனப் பத்மபாதாசாரியர் முதலிய சிஷ்யக்கூட்டத்துடன் காஸ்மீர மண்டலத்தில் ஸ்ரீ நகரநாட்டின்கண்ணுள்ள, தேவரிஷிகளால் ஸ்தாபிக்கப்பெற்ற அறுபத்துநான்கு வித்யாபிமானி தேவதைகளை பாத ஸ்பரிசமானவுடன் பிரசன்னமாகும்படி நான்கு புறமும் படிக்கட்டு ரூபமாய் ஸ்தாபனஞ் செய்யப் பெற்றதும், உச்சியின் மத்தியில் நான்கு கதவுகள் வாய்ந்த ஆலயத்தின்கண் சரஸ்வதியாரை ஆவாகனம் செய்யப்பெற்றிருப்பதும், தெற்குக் கதவைத் தவிர ஏனைய கதவுகள் திறக்கப்பட்டிருப்பதும், அடி முதல் முடிவரை வித்யா தேவதைகள் ஆதியாக சர்ஸ்வதி முடிவாக விணைக்களின் சப்தத்தால் சோபையுற்றதும், அதனுச்சியிலேறி நிஷ்டையிலமர்ந்தா

லல்லது ஜகத்குரு வென்னும் பட்டத்தைப் பெற இயலாததாகவு முள்ள சர்வஞ்ஞசிம்ஹாஸன பீடத்தைக் கண்டு பத்ம பாதருடன் தெற்கு வரிசையிலுள்ள ஓரோர்படியாக அறுபத்து நான்குபடியை யுங் கடந்து, அப்போதைக்கப்போது பிரசன்னமாகி வெளிவரும் சூக்ஷ்மயுக்தி வடிவ வினாக்களுக்கு விடைபகர்தல் மூலமாக அவ் வித்யா தேவதைகளை ஜெயித்து, ஆலயத்தை வலம் வந்து பத்ம பாதர்கரத்தைப் பிடித்துக் கொண்டு தெற்கு வாயலுக்குச் செல்லும் போது, அசரீரி வடிவாயேற்பட்ட சரஸ்வதியாரின் வினாக்களுக்கு மறுமொழிகூறி கதவைத் திறந்து அதனுட்புகுந்து "சர்வஞ்ஞபீட மேறி" அரசுவடிவ அபிஷேக பூமண்டலாச்சாரிய ரெனவும், உலகா சாரியத் தலைவரெனவும் எல்லாக் கலைவல்லோராலும் சர்வ தேவர்க ளாலும் புகழ்ச்சி கூறுதலை யடைந்தனர். அப்போது தேவர்கள் துந்துமி வாத்தியங்களை முழக்கி, சங்கர பகவத் பாதாசாரியஸ்வாமி களின் திருமேனியிற் பாரிஜாதம் முதலிய மலர்களைத் தூவி, ஆசிர் வாத வடிவ ஸ்தோத்திரங்களை ப்ரகடனஞ்செய்தார்கள்.

அதன் பின் சங்கரரானவர் அங்கு நின்றும் சிஷ்ய கோடிக ளுடன் புறப்பட்டு, இமயமலைச் சாரலிலுள்ள கேதாரத்தையடைந்து, குளிரின் பாதையோடு தவமியற்றியிருக்கும் தபஸிகள் பலருக்கு வேதாந்த பாஷியத்தை யுபதேசித்து, குளிரின் கஷ்ட நீக்க வாயிலாக சுகத்தைத் தானேதரக் கருதித் தன் பாதத்தினின்று முண்டான "தீக்குண்டம்" என்று பெயர் வாய்ந்த வெந்நீரூற்றினைச் சிருஷ்டித்து அதிற் படியும்படி செய்து வந்தனர். அதனால் அவர்கள் பெரிய சந் தோஷமுடையவர்களாய்ச் செவ்வனே தவமியற்றி வந்தார்கள்.

## சங்கரர் பரதகண்டத்தில் குருபீடங்களை ஸ்தாபித்தல்.

அதன் பின்னர் சங்கர குருவானவர் உலகம் உய்யும் வண்ணம் எண்ணமுடையவராய்த் தென் திசைக்கண் "சிருங்ககிரியினிடத்து" சாரதாபீடஜகதாசாரியராக பிரஹ்மாவாய "சுரேஸ்வரரை" குரு பீடத்து ஏற்படுத்தியதால், ஏனைய வடக்கு மேற்கு கிழக்கு திசை களிலுள்ள "பதரிகாஸ்ரமம், துவாரகை, ஜகன்னாதம்" என்ற புண் ணிய பூமிகளில் மடங்களைக் கட்டுவித்து அவற்றில் முறையே "த்ரோடகர், பத்மபாதர், அஸ்தாமலகர்" என்ற மூவரையும் ஆசாரியா



பிஷேகவாயிலாய் உலக குரவர்களாக வைத்து இம்மூவர்களையும் சர்வ ஜகத்தின் ஆசாரிய வடிவினராய சாரதா பீடத்தவர்க்கு உட்பட்டி ருக்க வேண்டு மென்று நியமித்து, அவ்வவர்களுக்குத் தேவதா அர்ஜ் ஜனைகளை விதியுடன் கொடுத்துவிட்டு தாம் மனுஷ்யாவதாரஞ்செய்து முடிக்கவேண்டிய கடமைகளெல்லாம் முடிந்த தென்ற சந்தோஷ முடையவராய் முப்பத்திரண்டு வயது நிரம்பிய ஆதிசங்கரபகவத் பூஜ்யபாதாசாரிய ஸ்வாமிகள் சாரதாபீடத்தினின்றும் எழுந்து தென்திசைக்காஞ்சியிலுள்ள காமாக்ஷியம்மன் கோவிலின் மார்க்க மாய், தத்தாத்திரேயர் குகை வாயிலில் சிஷ்யக் கூட்டங்கட்கு விடை கொடுத்து, பிரஹ்மாதி தேவர்களின் புகழ்ச்சியின் வேண்டுகோளுக் கிணங்க, பிரஹ்ம நிஷ்டையோடு கூடிய தன் வசத்துள்ள மாயாரூப அணிமாதி யோகவல்லமையால் காளகண்ட திரிநேத்திரத் திவண்ணச் சிவத்திருமேனியுடன் பிரஹ்மாவை ஆதியாகவுடைய யாவராலுஞ்செய் யும் சேவையோடுள்ள ஸ்தோத்திரங்களாலும், தேவதுந்துமியாதி கோஷங்களாலும், பாரிஜாத முதலிய புஷ்பவர்ஷங்களாலும் சீதள மான முகாரவிந்தமுடையவராய் கைலாயம் சென்றனர்.

பிரஹ்மாத்ம ஐக்கிய ஞான ப்ரபாவம் வாய்ந்ததும், அறி யாமை வடிவ இருளுக்கு ஞான வடிவச் சந்திரகலையுடனிலங்கும் சூரியகிரணமாக ப்ரகாசிப்பதும், விதிவடிவாய் நினைத்த மாத்திரத்தில் சர்வ பாபங்களும் க்ஷீணமாவதுமாய (சார்வாக பௌத்தாதிமததோஷ முடைய இக்கலியில்) நித்திய ஞானானந்தச் செல்வ உத்தம ஒழுக்க குருபீடங்களை ஆதியில் வகுத்து ஸ்தாபித்தவரும், எதார்த்த குரு பக்தியுள்ள வேதாந்திகளை பாது[illegible] இராகாதி தோஷமின்றித் தன்னைப் பிரார்த்திப்பவர்கட்கு மோக்ஷம் முடிய வுள்ள இஷ்ட காமியார்த்தங்களை வெகு சீக்கிரத்தில் சித்தி செய்து வைப்பவரும், ஆசாரிய கோடிகளுக்கெல்லாம் தலைமை பெற்ற பர மாசாரியராகி விளங்குபவரும், வேதாந்தமே மயமாகி வேதபாஷிய நூதன நூல் முதலிய யாவற்றையும் வெளியிட்டவரும், அர்த்தத் தோடும் வெகு அழகோடும் கூடிய சிறிய பதங்களுள் வியாபக வடிவ அறிய பெரிய அத்வைத விஷயங்களை அடக்கிக் காட்டும் தேவபாஷா தனிச்செல்வ அரசராயிலங்குபவரும், சென்றயுகங்களில் உலக குரவர்

களாகிய கபிலர், தத்தாத்திரேயர், வியாஸர் இவர்களின் மதிப்பால் தலைமை பெற்று ப்ரகாசிப்பவரும், நிகழ்காலத்தில் வேறின்றி நிற்கும் விருக்ஷம்போன்றுள்ள வேலி மதங்களை எல்லாம், தம்முள்ளடக்கி ஏமாப்புறும் பிரஹ்மாத்ம ஐக்கிய அத்வைததத்துவ மோக்ஷ லக்ஷ்மியை ஸ்தாபனம் செய்தருளியவருமாகிய ஸ்ரீலஸ்ரீ ஜகத்குரு ஆதிசங்கரபகவத் பாதாளுடைய இப்புண்ணிய சரித்திரத்தை, அவர் அவதார காலமான பிரதிவருஷம் சித்திரை மாதம் பூர்வபக்ஷ பஞ்சமி திதியாகிய உத்தமோத்ம புண்ணியகாலத்தில், வேதாந்திகள் அவசியம் நடத்தவேண்டிய "ஸ்ரீசங்கரஜயந்தி" உற்ஸவகாலத்திலும், மற்றும் ஏனைய காலங்களிலும் விதி பூர்வகமாக உபாசித்து பாராயணம் செய்பவர்கள் எவர்களோ அவர்கள், விதிவடிவ ஈஸ்வர சேவையாலடையப் பெறும் அதிர்ஷ்ட பலத்தோடு, திருஷ்ட பலமாகிய மோக்ஷவடிவ ஞானலக்ஷ்மியையும் நிச்சயமாய் அடைவார்கள்.

இனையமா விஜயந் தன்னை யென்றுமெழுதிக் கற்றோர்
கனைகடற் புவியி னுளுங் கருணையின் நிலைய ராகி
அனையசா லோக்கி யாதி வபரமா முத்திக் கப்பாற்
றனதுமா பரமோ க்ஷத்திற் றூழ்விலா நந்த மாவர்.

ஸ்ரீசங்கர விஜயம் முற்றுப்பெற்றது.

உ

# ஸ்ரீ சங்கர விஜயம்.

## அரும்பத விளக்க வேதாந்த இலக்ஷணாவலி.

### அ

அஞ்ஞானபூமி—1. அகக்கரணத்தினிடத்து முதலிலுண்டாம் அறிவாகியவித்து. 2. இந்த அறிவினின்றுண்டாம் நானெனும் அகந்தை சாக்கிரம். 3. பிறவிகள் தோறும் வந்து வந்து நானென்பதும் என்னுடைய தென்பதுமான அகந்தை மமதை வளருவது எதுவோ அது மஹாசாக்கிரம் 4. அத்தகைய அகந்தையுடன் சாக்கிரத்தில் நடந்ததை விழிப்புக்காலத்தில் மனோராஜ்ஜியம் செய்தல் நனக்கனவு. 5. உண்டு உறங்கி மனோராஜ்ஜியஞ்செய்தல் கனா. 6. கனாக்கண்டதை மறந்து அதை திரும்பவும் நினைப்பது கனவு சாக்கிரம். 7. அஞ்ஞானத்தோடு நித்திரையில் மூடுவது சுழுத்தி என ஏழாம்.

அணிமாதி சித்திகள்—அணிமா, மஹிமா, லகிமா, கரிமா, ப்ராப்தி, ப்ராகாம்யம் அல்லது ப்ராகாஸ்யம், ஈஸித்துவம், வஸித்துவம் என எட்டாம்.

1. வியாபகமான பரமாத்மாவானது மிக நுண்மையான பிராணிகளுள்ளும் ஆத்மாவாகப் புகுதல் அணிமாவாம்.

2. பிரமாண்ட முதல் பிரஹ்மம் ஈறாகவுள்ள முப்பத்தாறு தத்துவங்களின் சேர்க்கையானது வெளியிலே வியாபித்துநிற்றல் மஹிமாவாம்.

3. மஹாமேருவை நிகர்த்து நிற்கும் அவயவங்களையுடைய யோகியானவன் தன்னைத் தூக்குதலாகிய தொழிலிலே பஞ்சுக்குச் சமமாதல் எதுவோ அது லகிமாவாம்.

4. பரமாணுவை நிகர்த்து நிற்கும் அவயவங்களையுடைய யோகியானவன், தன்னை பிறர் தூக்குதலாகிய தொழிலை மேருவுக்கு சமமாக பாரம் அதிகரித்தல் கரிமாவாம்.

5. பாதாளத்திலே வஸிக்கும் புருஷனானவன் பிரஹ்ம லோகத்தைப் பார்த்தல் ப்ராப்தியாம்.

6. ஆகாயத்திற் செல்லுதல் முதலிய சித்திச் செல்வங்களும், தன் இச்சை மாத்திரத்தால் செவ்வனே கைகூடுதல் ப்ராகாமியம் எனவும், யோகியாகிய தன் உடம்பின் விளக்கத்தினாலேயே எல்லாப் பொருள்களும் விளங்குதல் எதுவோ அதுவே ப்ராகாஸ்யம் எனவும் கூறுவர்.

7. தன் இச்சை மாத்திரத்தால் உலகங்களைப் படைத்தல், நிலை பெறுத்தல், அழித்தல் என்பவற்றைச் செய்தலும், சூரியன் முதலானோரை நியமிப்பவனாதலும் ஈஸித்துவமாம்.

8. எல்லா லோகங்களும் லோக பாலர்களும் தன் வசத்திலிருப்பவராதல் வஸித்துவம் எனவும் கூறுவர்.

அதிர்ஷ்டபலம்—முந்திய ஜன்மங்களிற் செய்யப்பெற்ற புண்ணியத்தின் ஏதுவால் இப்போதுள்ள ஜன்ம இச்சரீரத்துக்கு ஈஸ்வரனால் அடைவிக்கப்பெறும் அனுபவ பதார்த்தங்களாயவை எவைகளோ அவைகளை அதிர்ஷ்டபலமென்று கூறுவர்.

அதிஷ்டானம்—எதுபிராந்தி காலத்தில் தோற்றுகிறதில்லையோ, எதன் தோற்றத்தால் பிராந்தி நீங்குகிறதோ அதனை அதிஷ்டானமென்பர்.

அத்வைதம்—த்வைதம் (இரண்டு) யின்றியதனை அத்வைதமென்பர்.

அநுபந்தம்—எதை (அநுபந்தத்தை) அறிந்தபிறகு, எதுமுமுக்ஷுவை கிரந்தத்தோடு சம்பந்தப்படுத்துகிறதோ அது அநுபந்தமாம். அதுவும் 1 அதிகாரி, 2 சம்பந்தம், 3 விஷயம், 4 பிரயோஜனம் என நான்காம்.



1. எவனுக்கு நிஷ்காமகர்ம உபாசனைகளால் மலவிக்ஷேபங்கள் நிவர்த்தியாகி, சொரூபத்தை மறைக்கும் அஞ்ஞான மாத்திரம் சித்தத்திலிருக்கின்றதோ, எவன் நான்கு சாதனங்களோடு கூடியவனாக இருக்கின்றானோ அவனே அதிகாரி யெனப்பெறுவன்.

2. கிரந்தம் ப்ரதிபாதகமும், விஷயம் ப்ரதிபாத்தியமுமாம்; கிரந்தமும் விஷயமும் ப்ரதிபாதக ப்ரதிபாத்திய பாவ சம்பந்தமாம் 1.

எந்த வஸ்து அடையப்படுகிறதோ அது ப்ராப்பியம். எவன் அடைகின்றானோ அவன் ப்ராபகன். ஆகையால் பலத்துக்கும் அதிகாரிக்கும் ப்ராப்பிய ப்ராபக பாவசம்பந்தமாம். 2.

அதிகாரி கர்த்தா, விசாரம் கர்த்தவ்யம். கர்த்தாவும் செய்யத்தக்கதான விசாரமும் கர்த்துரு கர்த்தவ்ய பாவசம்பந்தமாம் 3.

விசார வாயிலாக கிரந்தம் ஞானத்திற்கு ஜனகமாம்; அல்லது உற்பத்தி செய்வது ஜனகமாம்; உற்பத்தியாவது எதுவோ அது ஜன்னியமாம். விசாரவாயிலாக கிரந்தம் ஞானத்துக்கு ஜனகமும், ஞானம் ஜன்னியமுமாம். இதனால் ஜனகஜன்னிய பாவசம்பந்தமாம் 4.

3. எது ப்ரதிபாதனஞ்செய்ய (சொல்ல)ப்படுகிறதோ அது விஷயமாம். ஜீவப் பிரஹ்ம ஐக்கியம் இந்நூலில் சொல்லப்படுதலால் ஜீவப்பிரஹ்ம ஏகத்துவம் விஷய மெனப்படும்.

4. சர்வதுக்க நிவிர்த்தி பரமானந்தத்தின் ப்ராப்தி பிரயோஜனமாம். இதனையே மோக்ஷமென்று கூறுவர், அதுவும் 1, பரமப்ரயோஜனம், 2. அவாந்தரப்ரயோஜனம் என இரண்டாம்.

1. எதனிடத்தில் புருஷனுக்கு இச்சையுண்டாகின்றதோ அது பரமப்ரயோஜனமாம். யாவரும் எல்லாக் காலத்தும் துக்கம் பூராவும் நிவிர்த்தியாவதிலும், இடையறாத சுகம் வருவதிலும் இச்சையுண்டாகிறது. ஆதலால் சர்வதுக்க நிவிர்த்தி பரமானந்தத்தின் ப்ராப்தி பரமப்ரயோஜனமாம்.

2. எந்த வஸ்துவின் வாயிலாகப் பரமப்ரயோஜனம் அடையப்படுகிறதோ அது அவாந்தரப்ரயோஜனமாம்.

கிரந்தத்தின் ஞானவாயிலாக மோக்ஷமாகிய பரமப்ரயோஜனம் அடையப்படுவதாயிருத்தலால் ஞானம் அவாந்தரப்ரயோஜனமாம்.

**அர்ச்சிராதி மார்க்கம்**—பிரஹ்மாத்ம ஐக்கிய விதேக கைவல்ய மோக்ஷத்தை யடைய யோக்கியதையுள்ள வைராக்கிய புருஷன், பிரஹ்மத்தைத் தனது ஆத்மாவாக உபாசனை செய்வன். அவன் இறக்குங் காலத்து அவனுடைய இந்திரிய அந்தக்கரணங்கள் முழுதும் எதனையும் அறிய வல்லமையில்லாதனவாயினும், யமதூதர்கள் அவனுடைய சூக்ஷ்ம சரீரத்தைக் கொண்டுபோக வருகிறதில்லை. ஆனால், அக்கினி அபிமானி தேவதை அவனை (பிராணனோடு கூடிய இந்திரிய அந்தக்கரண சம்பந்தம் வாய்ந்த அவித்யா பிரதிபிம்ப ஆபாச ஜீவனை) மரண சமயத்தில் சரீரத்தினின்றும் வெளிப்படுத்தித் தன் லோகத்துக்கு கொண்டுபோகிறது. அங்கிருந்து அவனை தின அபிமானி, சுக்ல பக்ஷ அபிமானி, உத்தராயணகால அபிமானி, ஸம்வத்ஸர அபிமானி, தேவலோக அபிமானி, வாயு அபிமானி, சூரியன், சந்திரன், மின்னல் அபிமானி இந்த தேவதைகள் முறையே தங்கள் தங்கள் லோகத்துக்குக் கொண்டுபோகிறார்கள். அதன்பின் மின்னல் அபிமானி தேவதையின் லோகத்தில் சூக்ஷ்ம சிருஷ்டியின் அபிமானி சேதனனாய ஹிரண்யகர்ப்பரெனப் பெயர்பெறும் காரியப் பிரஹ்மத்தின் இருப்பிடமாகிய பிரஹ்ம லோகத்திலிருந்து அவர் கட்டளைப்படி அவருக்குச் சமானமான ரூபத்தைத்தரித்த ஒரு திவ்ய புருஷன் வந்து இவ்வுபாஸகனை வருணலோகத்துக்குக் கொண்டுபோகிறான். அங்கிருந்து அவனை இந்திர லோகத்துக்குக் கொண்டுபோகிறான். அங்கிருந்து பிரஜாபதி லோகத்துக்குக் கொண்டுபோகிறான். அப்போதுஇந்திரன் கூடவே வருகிறான். அதற்குமேல் பிரஜாபதி உலகத்தில் அத்திவ்ய புருஷனுடன் சேர்ந்து ஹிரண்ய கர்ப்பருடைய ஸ்தானமான பிரஹ்ம லோகம் போகிறான்.

இத்தகைய பதினன்கு தேவதைகளால் உபாஸகனானவன் பிரஹ்மலோகம் செல்வதை தேவயான மார்க்க மென்றும், அர்ச்சிராதி மார்க்க மென்றும் சொல்லப்படும். இவை யஜுர்வேத ஈசாவாஸ்ய ஸாந்தோக்கிய உபநிஷதத்தின்கண் ப்ரசித்தமாம்.



**அவஸ்தை**—1. சாக்கிரம். 2 சொப்பனம். 3. சுழுத்தி என மூன்றும்.

1. எந்த அவஸ்தையில் மனிதன் விழிப்பையடைந்து வியவகாரம் செய்கின்றானோ அது சாக்கிரா அவஸ்தையாம். அது ஸ்தூல தேகத்தின் அவஸ்தையாம்.

2. ஜாக்கிர அவஸ்தையில் சிரவணத்தினாலேனும், நேத்திரத்தினாலேனும், பிற இந்திரியங்களினாலேனும் அநுபவிக்கப்பட்ட விஷயங்களின் ஞானத்தாற்றோன்றும் வாசனைகள் எவையோ அவை மயிரின் நுனிப்பாகம்போல சூக்ஷ்மமாய் கண்டத்திலுள்ள "ஹிதை" என்னும் நாடியிலிருக்கின்றன; ஆங்கு சம்ஸ்காரவடிவ வாசனையின் சப்தம் முதலிய விஷயங்களும் அவற்றின் ஞானமுமாகிய இரண்டு வடிவங்களும் எந்த நித்திரை காலத்தில் உண்டாகின்றனவோ அது சூக்ஷ்ம சரீர சம்பந்தமான சொப்பன அவஸ்தையாம்.

3. எந்த அவஸ்தையினின்றும் விழித்து யான் ஒன்றும் அறியேன் என்று நித்திரை காலத்தில் அநுபவிக்கப்பட்ட அஞ்ஞானத்தின் ஸ்மரண வடிவ ஞானமுண்டாகின்றதோ அத்தன்மைய ஆழமான நித்திரையே சுழுத்தி அவஸ்தையாம்.

**அவாந்தரவாக்கியம்**—தத்பதார்த்தத்தின் அல்லது த்வம்பதார்த்தத்தின் சொரூபத்தை அறிவிக்கும்வாக்கியம் அவாந்தரவாக்கியமாம்.

**அவித்தை**—ஆவரண விக்ஷேப சக்திகளையுடைய அநாதி பாவ ரூபத்தை அவித்தை என்றும் அக்ஞானம் என்றும் கூறுவர். அதுவே மாயை, ப்ரகிருதி, ப்ரதானம், சக்தி, அவ்யக்தம், அக்ஷரம் முதலிய பெயர்களாற் சொல்லப்படுகிறது.

**அநுபவம்**—சகல அநாத்மாகார விருத்திகளின் நிரோதமுண்டாக பிரஹ்மாகாரமாகியவிருத்தியிலுண்டாம் அகம் பிரத்தியத்தினை சாக்ஷாத் காரமென்றும் அநுபவமென்றும் கூறுவர்.

**அஜாதவாதம்**—ஒரே வேதாந்த சித்தாந்தத்தில் உத்தம மத்திம கநிஷ்டாதிகாரிகளுக்கு அறிவிக்கும் பொருட்டு அஜாதவாதம், திருஷ்டிசிருஷ்டி வாதம், சிருஷ்டிதிருஷ்டி வாதம் என்னும் மூன்று

பக்ஷங்களிருக்கின்றன. அவற்றில், எதில் ஒரே பாரமார்த்திக சத்தையாகிய சேதனம் அங்கீகரிக்கப்படுகின்றதோ அது வித்வான்களது திருஷ்டிக்கு விஷயமாகும் முக்கியமான அஜாதவாதமெனப்படும்.

## ஆ

ஆசிரமம்—பிரஹ்மசரியம், கிருகஸ்தம், வானப்ரஸ்தம், சந்யாஸம் என நான்காம்.

ஆத்மா—மூன்று சரீரத்துக்கும் அதன் சம்பந்தியான ஜீவனுக்கும் விலக்ஷணமாகவும் அதிஷ்டானமாகவுமுள்ளதும், பிரஹ்மத்துக்கு அந்நியமாகாததுமான சச்சிதானந்த அத்விதீய வியாபக சொரூபமாகவுமுள்ளது எதுவோ அதுவே ஆத்மாவாம்.

ஆநந்தம்—எல்லாவற்றையும் விட மேலான ப்ரீதியின் விஷயத்தினை ஆநந்த மென்பர்.

அதுவும், 1 பிரஹ்மானந்தம், 2, வாசனானந்தம், 3 விடயானந்தம் என மூன்றாம்.

இவை மூன்றினுள்ளும், விடயானந்தம், பிரஹ்மானந்தம், வாசனானந்தம், ஆத்மாநந்தம், முக்கியாநந்தம், நிஜாநந்தம், அத்விதாநந்தம், வித்தியாநந்தம் என எட்டாம்.

1. பிரஹ்மானந்தத்தில்; ஆத்மாநந்தம், அத்விதாநந்தம், வித்தியாநந்தம் என மூன்றும் அடக்கமாம்.

2. வாசனானந்தத்தில்; பிரஹ்மானந்தம், வாசனானந்தம், முக்கியானந்தம், நிஜானந்தம் என நான்கும் அடக்கமாம்.

3. விடயானந்தமும்; மனுடாநந்தம், மனுடகந்தர்வானந்தம், தேவகந்தர்வானந்தம், பிதிர்தேவாநந்தம், ஆஜானதேவானந்தம், கர்மதேவானந்தம், முக்கிய தேவானந்தம், தேவேந்திரானந்தம், தேவகுருவினானந்தம், ப்ரஜாபதியினானந்தம், ஹிரண்ய கர்ப்பானந்தம் எனப்பதினொன்றாம்.

ஆவரணம்—இருக்கிறது விளங்குகிறது என்னும் யோக்கியமான வஸ்துகளில் இல்லை தோற்றவில்லை என்னும் விபரீத வியவகாரத்தை சம்பாதித்தல் எதுவோ, அது அஞ்ஞானத்தின் சம்பந்தியான ஆவரணமாம்.



அதுவும், இல்லை என்னும் வியவகாரத்துக்கு ஏதுவாகவுள்ளது அஸத்வாபாதக ஆவரணம் எனவும்.

தோற்றவில்லை என்னும் வியவகாரத்துக்கு ஏதுவாகவுள்ளது அபானபாதக ஆவரணம் எனவும் இருவகையாம்.

இந்த ஆவரணமானது அஞ்ஞானத்தின் அம்ஸமாம்.

## இ

இலக்ஷணை—ஒன்றிலிருப்பதாகிய அசாதாரண தர்மத்தினை இலக்ஷணை எனப்படும்.

## ஈ

ஈஸ்வரன்—தத்பதத்தின் வாச்சியமாயும், மாயையில் பிரஹ்மத்தின் ப்ரதிபிம்ப ஆபாசமாயுமிருப்பது எதுவோ அது ஈஸ்வரனும்.

## உ

உபாசனை—1. சகுணம். 2. நிர்க்குணம் என இருவகையாம்.

1. மாயாவிசிஷ்ட சேதனரூப காரணப்பிரஹ்மம் சகுண ஈஸனும். அல்லது அதன் உபலக்ஷணமான ஹிரண்யகர்ப்பன், வைஸ்வானரன், விஷ்ணு, சிவன், கௌரி, கணேசன், சுப்ரஹ்மண்யம், சூரியன், ராமகிருஷ்ணன் இவர்களது அவதார வடிவ காரிய ப்ரஹ்மம் சகுண ஈஸனும். அல்லது அவற்றின் ப்ரதிமை முதலிய வடிவினதாகிய பிரதிநிதி (அவற்றின் ஸ்தானத்தில் ஸ்தாபிக்கப்பெற்றது) எதுவோ அது சகுண ஈஸனும்.

இத்தகைய ஈஸ்வரனை மனோ வாக்கு சரீரங்களால் பஜித்தல் எதுவோ அதுவே சகுண உபாசனை என்பர்.

2. பிரணவாக்ஷரம் ப்ரஹ்மஸ்வரூபம், அந்தப் பிரணவஸ்வரூப பிரஹ்மமே நிர்க்குண வஸ்து எனப்பெறும். அதனையே நான் என்று ஒருக்ஷணமும் இடையீடின்றி புத்திவிருத்தியை நிறுத்துதல் நிர்க்குண உபாசனை என்பர்.

உபாதானகாரணம்—உ[illegible] ஸ்திதி, லயங்களின் காரணத்தினை உபாதானகாரண மென்பர்.

## ஏ

ஏடணை—அர்த்த (பொருள்) ஏடணை, புத்திர ஏடணை, உலக ஏடணை என ஏடணை மூன்றும்.

## க

கர்மம்—இந்திரன் முதலிய தேவதைகளைக்குறித்து திரவியங்களை த்யாகம்செய்தலாகிய யஞ்ஞம் எனப்பெயரிய யாகம். வைதிக அக்கினியினிடத்து காலையிலும் மாலையிலும் சிரத்தை பக்தியோடு இடப்பெற்ற நெய் கோதுமை முதலிய பதார்த்தங்களின் ஆஹுதிகள்வடிவ ஹோமம். ஒழுக்கம் வாய்ந்த அந்தணர்கட்கு விதியோடு பொன் முதலிய அளித்தல் வடிவ தானம். எனும் இம்மூன்றினுள்ளும் த்யாகவடிவம் அநுகதமாம். இவைகளையே கர்மம் என்று கூறுவர்.

இத்தகைய வைதிக அக்கினியிற் போடப்பெற்ற ஆஹுதியானது நுண்ணியவடிவமாய் சூரியமண்டலத்தில் நிலைத்து அவ்வாஹுதியோடு கூடிய சூரியனிலிருந்து மழையின் விருஷ்டி உண்டாகின்றது. அதிலிருந்து நெல் கோதுமை முதலிய அன்னங்களும், அதிலிருந்து ஸ்தாவர ஜங்கமவடிவ பிரஜைகளும் உண்டாய், அதனானே அப்பிரஜைகள் விருத்தியடைகின்றன.

அத்தகைய யஞ்ஞம் (யாகம்) எனப்பெயரிய த்யாக, ஹோம, தானமெனவைகளோ அவைகள் கர்மத்தினின்றும்; கர்மம் அழிவில்லாத பிரஹ்மத்தினின்றும் உண்டாகின்றன. இவைகள் வேதத்திற் பிரசித்தமாம்.

ஐந்து மஹா யஞ்ஞங்களை எந்த க்ருகஸ்தனானவன் செய்யாமல் தனது உதரத்தை நிரப்பும்பொருட்டு அன்னத்தை பக்குவஞ் செய்கின்றானோ அவன் பிரமாதத்தாற் செய்யப்பெற்றதும், ஐந்து சூ[illegible]மித்தத்தால் உண்டாகியதும், விகித கர்மத்தைச் செய்யாமையால் உற்பன்னமு[illegible]த்தினின்றும் நிவிர்த்தியை அடைகிறானில்லை.



ஐந்து மஹா யஞ்ஞங்களாவன—1. வேதத்தைப் படித்தல், படிப்பித்தல், அங்ஙனமே சந்தியை காலத்தில் உபாசனை செய்தல் ரிஷியஞ்ஞமாம்.

2. அக்கினி ஹோத்ராதி கர்மங்களைச் செய்தல் தேவ யஞ்ஞமாம்.

3. பலி வைஸ்வதேவங்களைச் செய்தல் பூத யஞ்ஞமாம்.

4. கிருகத்தின் கண்ணேவந்த அதிதியை அன்னம் முதலியவற்றால் மகிழ்வுறச் செய்தல் மனுஷ்ய யஞ்ஞமாம்.

5. பிதிர்க்களை நோக்கி சிரார்த்தம், தர்ப்பணம் முதலியவற்றைச் செய்தல் பிதிர் யஞ்ஞமாம். இவ் ஐந்தையும் மஹா யஞ்ஞமென்பர்.

ஐந்து சூனைகளாவன—1. உரலினிடத்து அன்னத்தையிட்டு குத்துதலால் ஏற்படும் ஜீவ இம்சை.

2. கல் திகிரியினிடத்து அன்னத்தைவைத்து அறைத்தலால் உண்டாம் ஜீவ இம்சை.

3. அன்னத்தைப் பக்குவஞ் செய்யும்பொருட்டு அடுப்பினிடத்து அக்கினியை எரித்தலால் உண்டாகும் ஜீவ இம்சை.

4. அன்னம் தயார்செய்வதற்காக பாத்திரங்களில் ஜலத்தை எடுத்தலால் ஏற்படும் ஜீவ இம்சை.

5. மண், நீர் முதலியவற்றால் வீட்டை மெழுகுதலால் ஏற்படும் ஜீவ இம்சை. அறிஞர் இவ் ஐந்தையும் சூனை (பாபம்) என்பர்.

கர்மம்—சென்ற சரீரங்களிற் செய்யப்பட்டுப் பலனுக்கு வாராமலிருக்கும் கர்மம் சஞ்சிதமெனவும், வர்த்தமான சரீரத்தில் செய்யப்பட்ட கர்மம் ஆகாமிய மெனவும், முன் சரீரங்களிற் செய்யப்பட்டு வர்த்தமான சரீரத்துக்கு ஏதுவாயிருக்கும் கர்மம் ப்ராரப்தம் எனவும் மூன்றும்.

குணம்—சத்துவம், ரஜஸ், தமஸ் என மூன்றும்.

குருசேவை—குருவைப் பார்த்தவுடன் தண்டம்போல் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்தல், அவரது பாதார விந்தங்களின் தூளியை சிரசில் தரித்தல், குருவின் சமீபத்திலேயே யிருத்தல், சரீரத்தால் குருவிற்குப் பலவித சேவைகளைச் செய்தல், அவருடைய கட்டளையை கொஞ்சங்கூட மீறாது நடத்தல், மனதில் இராமபிரானைப் போன்று பிரீதியை வைத்தல், தன்னிடத்தில் அவருக்கு பிரீதியுண்டாகும்படி நடத்தல், குருவானவர் அன்புடனிருக்கும்போது விஷ்ணு ரூபமாகவும், கோபிக்கும்போது சிவரூபமாகவும், ரஜோ குணவடிவ உலக வியவகாரத்திலிருக்கும்போது பிரஹ்மாவாகவும், சாந்தமாயிருக்கும்போது கங்கா சொரூபமாகவும், வசன ரூபமாகிய கிரணங்களால் மயக்க வடிவ சந்தேகங்களுடன் கூடிய அஞ்ஞானத்தை நிவர்த்திக்கும்போது சூரிய ரூபமாக அறிவதும், நவவித பக்தியைச் செய்வதுடன் சந்யாசியாகிய குருவை அடைவதற்காக பத்தினி, புத்திரன், பூமி, பசு, தாசி, தாசன், திரவியம், கிரகம், தான்யம் இவை எல்லாவற்றையும் விட்டுவிடுதலையும், குருகிரகஸ்தராயின் அவ்வெல்லாவற்றையும் அவருக்கு அர்ப்பணம் செய்யவும் வேண்டும். இப்படிச் செய்யும்போது குருவின் ஆசிரமத்தால் குடும்பங்கெட்டுப் போய்விட்டது என நினைக்கவும் சொல்லவும் கூடாமலுமிருத்தல்.

திருட்டு, வியபிசாரம், ஜீவஹிம்ஸை, பொய்மொழிதல், பிறர் நிந்தை, கடுஞ்சொல், வீண் பேச்சு, இச்சைச்சிந்தை, புத்தியின் மந்தத்தன்மை இவைகளைச் செய்யாமலிருத்தல், குருவின் குணங்களைப் புகழ்ந்து சொல்லுதலோடு, தோஷத்தை ஒருபோதும் சொல்லாதிருத்தல், குருவினிடத்து தனது குலம், ஆசிரமம், ப்ரபுத்துவம், உலாவுதல், தீக்ஷை, வியாக்யானம், உபாசிரமம், மஞ்சத்திலிருத்தல், காலை நீட்டல், அங்கபோகம் முதலியவற்றையும் செய்யாமலிருத்தல், குருவின் உத்திரவை பிறரைக்கொண்டு செய்விக்காது தானே செய்தல், பிக்ஷையை குருசந்நிதியில் வைத்தல், அவர் கொடுக்காவிடில் விரும்பாமலும் வருத்தமடையாமலும் இருத்தல் இவ்வாறு சிஷ்யன் நடந்துவருதலை குருசேவை என்பர்.

கோசம்—மாதா பிதாக்களுண்ட அன்னத்தாலாகிய மாதாவின் உதிரத்தினாலும் பிதாவின் வீரியத்தினாலும் தாயின் வயிற்றில் உண்டாகியதும், பிறப்பிற்குப்பின் பால் முதலிய அன்னத்தால் விருத்தியாவதும், மரணத்துக்குப் பின் அன்னசம்பந்த பிருதிவியில் ஒடுங்குவதுமாகிய தூல சரீரமெதுவோ அதுவே அன்னமய கோசமாம்.



2. ஐந்துகர்மேந்திரியங்களும், ஐந்து பிராணனுமாகிய பத்து தத்துவங்கள் சேர்ந்தது பிராணமய கோசமாம்.

3. ஐந்து ஞானேந்திரியங்களும், மனமுமாகிய ஆறு தத்துவங்கள் சேர்ந்தது மனோமய கோசமாம்.

4. ஐந்து ஞானேந்திரியங்களும், புத்தியுமாகிய ஆறு தத்துவங்கள் சேர்ந்தது விஞ்ஞானமய கோசமாம். இம்மூன்று கோசங்களையும் லிங்க (சூக்ஷம) சரீரமென்பர்.

5. ஆத்மாவின் சொரூப வடிவ ஆநந்தத்தின் ப்ரதிபிம்பத்தோடு கூடிய பிரியமோதப் பிரமோதவடிவ விருத்திகளின் லயத்திற்கு ஸ்தானமாகிய அவித்தை எனப்பெயர் பெறும் காரணதேகம் எதுவோ அது ஆநந்தமயகோசமாம். இவ்விதமாக கோசம் ஐந்தாம்.

கோபம்—சரீராதிபிரபஞ்ச சம்பந்தமான பொருட்களில் ஆசை ரூபமாய்ச் செல்லும் விருத்தியை எவன் தடுத்து விக்கினத்தை விளைவிக்கின்றானோ, அத்தகைய அவன் பேரிலுண்டாகும் அவ்வாசையே கொதிப்பு வடிவ விருத்தியாய் மாறுகிறது. அதனையே கோபமென்பர்.

## ச

சகஜசமாதி—மனோவாக்கு சரீரத்தினுடைய வியவகார வேளையிலெல்லாம் பிரஹ்மமாகிய ஆத்மாவின் அநுபவ சம்பந்தமாக விருத்தி இருக்குமாயின் அதனை சகஜசமாதி என்பர்.

சட்விதலிங்கம்—1. எப்பொருள் ஆரம்பத்திலுள்ளதோ அதுவே முடிவிலுமிருக்குமாயின் அப்போது உபக்கிரம உபசங்காரங்களின் ஒருவடிவாந்தன்மை சொல்லப்படுகிறது.

2. அடிக்கடி சொல்லுதற்கு அப்யாசமென்று பெயர்.

3. உபநிஷத் வடிவ சப்தபிரமாணத்தாலல்லது வேறு பிரமாணங்களால் அறியப்படாத தன்மையினை அபூர்வதை என்பர்.

4. அத்விதீயப் பிரஹ்மத்தின் ஞானத்தால் மூலத்தோடுகூடிய சோகமோகங்களின் நிவர்த்தியினை பலம் என்பர்.

5. ஸ்துதி அல்லது நிந்தையை அறிவிக்கும் வாக்கியம் அர்த்தவாதம் எனப்பெறும்.

6. கூறும் பொருளிற்கு அநுகூலமான யுக்திவடிவ திருஷ்டாந்தத்தினை உபபத்தி என்பர்.

இந்த ஆறுலிங்கங்களால் எல்லா வுபநிடதங்களுக்கும் தாற்பரியம் அத்விதீயப்பிரஹ்மத்தினிடத்ததாம்.

சத்து—மூன்று காலத்திலும் பாதிக்க (பொய்யென்று நிச்சயிக்க) இயலாததனை சத்தென்பர்.

சத்தை—1. வியாவகாரிக சத்தை, 2. பிராதிபாஸிகசத்தை, 3. பாரமார்த்திகசத்தை என மூன்றாம்.

1. எவற்றில் பிரஹ்மஞ்ஞானமின்றி மித்யாத்வ நிச்சய முண்டாகிறதில்லையோ, பிரஹ்மஞ்ஞானத்துக்குப் பின் எவற்றிற்கு அதிஷ்டானத்தினும் வேறாகிய சத்தால்பூர்த்தி தோற்றுகிறதில்லையோ அத்தன்மைய மாயையும் அதன் காரியமும் வியாவ காரிகமாம். அதன் சத்தையினை வியாவகாரிக சத்தை எனப்படும்.

2. எவற்றிற்குப் பிரஹ்மஞ்ஞானமின்றி ரஜ்ஜு முதலியவற்றின் ஞானத்தினாலேயே பாதமுண்டாகிறதில்லையோ, அத்தன்மைய ஸ்தூலாஞ்ஞானமும் அதன் காரியமான ரஜ்ஜு சர்ப்ப முதலியனவும் பிராதிபாஸிகமாம். அவற்றின் சத்தையினை பிராதி பாஸிக சத்தை எனப்படும்.

3. எவற்றிற்கு மூன்று காலத்திலும் பாதமுண்டாகிறதில்லையோ அத்தன்மைய உற்பத்தி நாசமின்றியதாயிருத்தலின் நித்தியமான சேதனம் எதுவோ அது பாரமார்த்திகமாம். அதன் சத்தையி (இருப்பி)னை பாரமார்த்திக சத்தை எனப்படும்.

சந்யாஸம்—குடீசகம், வெகூதகம், ஹம்ஸம், பரமஹம்ஸம் என நான்காம். அச்சந்யாஸமானது வைராக்கியத்தினின்றுண்டாவதாம்.



மந்த வைராக்கியத்திற் சந்யாஸம் பலிக்கிறதில்லை. தீவிர வைராக்கியத்தில் நடக்க சக்தியில்லாதவர்கட்கு ஏற்பட்ட குடீசகமும், நடக்க சக்தியுள்ளவர்கட்கு ஏற்பட்ட வெகூதகமும் என விதிக்கப்பட்டிருக்கின்றது.

தீவிரதரத்தில் ஹம்ஸன் பரமஹம்ஸன் என்ற இருவருக்கும் அதிகாரமாம். ஹம்ஸனுக்கு பிரஹ்ம லோகத்தில் ஞானமுண்டாகிறதே யொழிய இங்கு உண்டாகிறதில்லை

பரமஹம்ஸனும் ஜிஞ்ஞாஸு ஞானவான் என இருவகை யாவர்.

இவர்களில் ஞானபூமிகள் மூன்றுவரை நடப்பவர் ஜிஞ்ஞாஸு எனவும், நாலாம் பூமியிலும் அதன் மேற் பூமிகளிலும் நடப்பவர்கள் ஜீவன்முக்தி யடைந்த ஞானவானெனவும் கூறுவர்.

சாப்தசாமக்கிரி—1. ஆகாங்க்ஷை ஞானம், 2. யோக்கியதை ஞானம், 3. தாற்பரிய ஞானம், 4. ஆசத்தி யென்றும் இவை நான்கும் சாப்த சாமக்கிரியாம்.

1. ஆகாங்க்ஷை என்பது இச்சைக்காம். அது சேதனத்திலுண்டாகின்றதாயினும், பதத்தினது அர்த்தத்திற்கு எவ்வளவு காலம் வேறு பதார்த்தங்களோடு அந்வயஞான முண்டாகவில்லையோ அவ்வளவு காலம் தன் அர்த்தத்தின் அந்வயத்தின் பொருட்டு வேறு பதத்தின் இச்சை சமானமாகத் தோற்றுகின்றது. அந்வயபோத முண்டானபின் தோற்றுகிறதில்லை. அது ஆகாங்க்ஷை எனப்படும்.

2. ஒரு பதார்த்தத்திற்கு வேறு பதார்த்தத்தோடுள்ள சம்பந்தத்தினை யோக்கியதை என்பர். எப்பொழுது யோக்கியதை இல்லையோ அப்பொழுது சாப்தபோத முண்டாகிறதில்லை. "தீயால் நனைகின்றான்" என்னும் வாக்கியத்தில் ஆன் என்னும் மூன்றாம் வேற்றுமைப்பொருட்கு நனைத்தற் பதார்த்தத்தில் நிரூபிக்குந்தன்மை சம்பந்தவடிவ யோக்கியதை இல்லையாகலின் சாப்தபோத முண்டாகிறதில்லை. சாப்த போதத்தில் யோக்கியதை ஏதுவாகாவிடின் [illegible] போதம் உண்டாதல் வேண்டும். ஆதலால் யோக்கியதை ஞானம் சாப்த போதத்திற்கு ஏதுவாம்.

3. சொல்லுவோனது இச்சையினைத் தாற்பரியமென்பர். எவ்வர்த்தத்தில் தாற்பரிய ஞானம் உண்டாகவில்லையோ அதன் சாப்த போத முண்டாகிறதில்லை.

எங்ஙனம்—"சைந்தவத்தைக் கொண்டுவா" என்னும் வாக்கியத்தினால் போஜன சமயத்தில் குதிரையின்கண் சொல்லுவோனது இச்சையாகிய தாற்பரியம் சம்பவியாமையால் குதிரையின் சாப்த போதம் உண்டாகிறதில்லை.

அங்ஙனமே—கடக்கற் சமயத்தில் உப்பின் சாப்த போத முண்டாகிறதில்லை.

4. யோக்கியபதங்களின் சக்தி அல்லது லக்ஷணைவிருத்தியாகிய சம்பந்தத்தினால் மறைப்பின்றிய பதார்த்தங்களின் ஸ்மிருதி யுண்டாகின்றது. அது ஆசக்தி (அண்மை) எனப்படுகின்றது. இத் தன்மைய ஆசக்தி ரூபமாக சாப்த போதத்திற்கு ஏதுவாம்.

இவ்வாற்றால் ஆகாங்க்ஷை முதலிய நான்கினையும் சாப்தசாமக்கிரி என்பர்.

சவிகர்ப்பசமாதி—ஞாதா ஞான ஞேயரூப திரிபுடி விளக்கத்தோடுகூடிய அத்விதீயப்பிரஹ்மத்திலுள்ள அந்தக்கரண விருத்தியின் நிலைமை சவிகர்ப்பசமாதி யெனப்படும்.

சனாதனம்—என்றுமுள்ளது சனாதனமாம். அது பிரஹ்மமாகிய ஆத்மாவாம். அதை அறிவதற்கு சாதனமான வர்ணாசிரம வாயிலாய் பகிரங்க அந்தரங்க சாதனவடிவ கர்மம், உபாசனை, ஞானமென்னும் மூன்றும் சனாதன தர்மமாம்.

சாதனம்—1 விவேகம். 2 வைராக்கியம். 3 சட்சம்பத்து. 4 முமுக்ஷுத்துவம். இந்நான்கும் சாதனம் எனப்பெறும்.

1. ஆத்மாவை அநாத்மாவினின்றும் வேறுபிரித்தறிதலை விவேகமென்பர்.

2. [illegible] தமான போக போக்கியப் பொருள்களின் இச்சையைவிட்டு விடுதலை வைராக்கியமென்பர்.



3. மனதை விஷயங்களினின்றும் தடுத்தலை சமமென்பர்.

இந்திரியங்களை விஷயங்களிற் செல்லவிடாமல் தடுத்தலை தமம் என்பர்.

வேதகுரு வாக்கியங்களில் விஸ்வாஸம் வைப்பதை சிரத்தை என்பர்.

மனது சலியாமல் ஸ்திரமாய் நிற்பதை சமாதானமென்பர்.

ஸ்திரீ முதலியவைகளைத் தியாகம் செய்தபின் தன்னிடம் வரப்பட்ட விஷயத்தில் மறுபடியும் இச்சையுண்டாகாமலிருப்பதை உபரதியென்பர்.

சீதோஷ்ணபசிதாக முதலிய த்வந்த்வங்களை சகிப்பதை திதிக்ஷை என்பர். இவை சட் (ஆறு) சம்பத்தாம்.

4. பிரஹ்ம ப்ராப்தியும் அநர்த்த நிவர்த்தியும் மோக்ஷத்தின் சொரூபமாம். அதன் தீவிரமான இச்சையை முமுட்சுத்துவமென்பர்.

சித்தசுத்தி—மலம் எனப்பெயர் பெறும் ஜன்மாந்தரங்களிற் பிராணிகளுக்குச்செய்ததாயுள்ளபாபத்தை;நிஷ்காமகர்மம், பூதகயை என்பவற்றால் நிவர்த்தி செய்திருப்பதும், விக்ஷேபமெனப் பெயர்பெறும் சித்தத்தின் சஞ்சலத்தன்மையைப் பிரதிபலனைக் கோறாமல் சகுண முதலிய வடிவங்களைப் பூசித்தல், ஈஸ்வர நாமங்களை காலை மதியம் சாயங்காலம் அர்த்தராத்திரி யென்ற காலங்களில் விதியோடு வாக்கு கண்டம் முதலியவற்றால் உச்சரித்தலாலும் நிவர்த்தி செய்திருப்பதுமான எந்தச் சித்தமுண்டோ அதற்குச் சித்த சுத்தி யென்று பெயர்.

சித்து—கேடின்றிய பிரகாசத்தினைச் சித்தென்பர்.

சிரவணம்—சட்விதலிங்க யுக்திகளால் வேதாந்த வாக்கியத்தின் தாற்பரியத்தினை நிச்சயஞ்செய்வது சிரவண மெனப்படும். அதுவும் 1. சம்ஞாரூப சிரவணம், 2. விசாரரூப சிரவணம் யென இருவகையாம்.

1. வேதாந்த வாக்கியத்தைக்கேட்ட மாத்திரத்தால் சந்தேகமின்றிய ஆத்மாவின் எதார்த்தஞான முண்டாகுமாயின் அதுசம்ஞாரூப சிரவணமாம்.

2. வேதாந்த வாக்கியத்தைக் கேட்டும் ஆத்மாவின் ஞானம் உண்டாகாதாயின், அப்போது அந்த வாக்கியத்தின் அர்த்த சம்பந்தத்தை விசாரிப்பது எதுவோ அது விசாரரூபசிரவணமாம்.

சிருஷ்டி திருஷ்டிவாதம்—முதலில் பிரஹ்மத்தினிடத்திலிருந்து பிரபஞ்ச சிருஷ்டியை அத்யாரோப வழியால் காட்டி, பின்னால் அபவாதக் கிரமமாய் சிருஷ்டியை பிரமத்தினிடத்தில் அபேதஞ்செய்து ஆத்ம திருஷ்டியைக் காட்டுதல் சிருஷ்டி திருஷ்டி வாதமாம்.

சுத்தம்—மாயையும் அதன் காரியமான ஸ்தூலாதி வடிவ மல (அசுத்த)மு மின்றியதாய் இருத்தல் எதுவோ அது சுத்தமாம்.

சூக்ஷமபூதம்—மூலப்ரகிருதியிலுள்ள தமோ குணாம்சத்தால் உண்டான விக்ஷேப சக்தியினின்றும் பஞ்சீகரணமின்றிய ஆகாயாதி பஞ்சபூதங்கள் உற்பன்னமாம். அவற்றை சூக்ஷமபூத மென்பர். பௌதிக லிங்க சரீர சிருஷ்டிக்கு இவைகள் ஆதாரமாம்.

சையுக்தம்—இரண்டு திரவியங்களுக்கு ஏற்படும் சம்பந்தவடிவ தாதாத்மியம் சையோகமாம். இத்தகைய சையோகமுடையதனை சையுக்த மென்று கூறுவர்.

## ஞ

ஞானம்—தன்னைத் தான் அறிதலே ஞானமாம்.

ஞானி—பிரஹ்மத்துக்கு வேறாகாத எதார்த்தவடிவதானாகிய ஆத்மாவை, அவித்யா ப்ரதிபிம்ப ஆபாச வடிவ ஜீவனாகிய தானெனும் புத்திவிருத்தியால் அறிந்தவனே ஞானி எனப்பெறுவன்.

ஞானபூமி—1. ஸுபேக்ஷை, 2. விசாரணை, 3. தனுமானஸி, 4. ஸத்துவாபத்தி, 5. அஸம்ஸத்தி, 6. பதார்த்தபாவனி. 7. துரியம் என ஏழாம்.

1. கெட்ட எண்ணம் பேச்சு செய்கை உடையவர்களின் கூட்டத்தை விட்டு விட்டு ஆத்மக்ஞானத்தை விரும்புவது ஸுபேக்ஷை.

2. ஸாதுக்களின் வாக்கியத்தைக் கேட்டு வேதாந்த நூலை அப்பியாஸம் செய்தல் விசாரணை.



3. முதல் இரண்டு பூமிகளையும் நம்பி உலக ஏடணை, தேக ஏடணை, சாஸ்திர ஏடணை மூன்று ஏடணைகளையும் விட்டுவிடல் தனுமானஸி.

4. இம்மூன்று பூமிகளின் அப்பியாஸ பலத்தால் எதார்த்த சொரூப ஆத்மாவை அறிதல் ஸத்வாபத்தி.

5. ஆத்மாவாகிய பிரஹ்மத்தில் விருத்தி அழுந்தி பிரபஞ்சப் பொய்ரூபத்தை மறத்தல் அஸம்ஸத்தி.

6. அத்விதானந்த மாதலும் ஞாதுரு, ஞான, ஞேயரூப திருபுடி நீங்குதலும் பதார்த்தபாவனி.

7. வஸ்துசொரூப் நிலைப்படியே யிருந்த மௌன ஸுபாவம் துரியம் இவற்றை ஞானத்தின் இருப்பிட மென்பர்.

தத்துவமஸி—ஸாமவேதத்தின் முடிவு சம்பந்தமான மஹா வாக்கியமாம். இதனிடத்துள்ள தத், த்வம், அஸி எனும் மூன்று பதங்களின் சக்தி விருத்தி ஸம்பந்தமான ஸக்யார்த்தமாய ஈஸ ஜீவர்களையும், இலக்ஷணா விருத்தி ஸம்பந்தமான அதிஷ்டான வடிவ இலக்ஷியார்த்தப் பொருளாய பிரஹ்ம கூடஸ்தர்களையும், அவர்களின் ஏகத்துவத்தையும் போதிப்பனவாயிருக்கின்றன.

த்வைதம்—ஒன்றுக்கு மேற்பட்ட பொருளிருக்குமாயின் அதனை த்வைத மென்பர்.

தாஷ்டாந்தம்—திருஷ்டாந்தத்திற் சித்தித்த பொருளைத் தாஷ்டாந்த மென்பர். அதனையே சித்தாந்த மென்றும் கூறுவர்.

திருஷ்டபலம்—இப்பொழுதே குருவினா லுபதேசிப்பதினின் றுண்டாகும் பிரஹ்மாத்ம ஐக்கியஞானம் எதுவோ அது திருஷ்டபலமாம்.

திருஷ்டாந்தம்—வாதி பிரதிவாதிகளுக்குச் சம்மதமான பொருள்யாதோ அதுவே திருஷ்டாந்தமாம்.

திருஷ்டி சிருஷ்டிவாதம்—அவித்தை அந்தக்கரணவிருத்தி ரூப ஞானமாகிய திருஷ்டியுண்டாகுங் காலத்திலேயே, பிரபஞ்சத்தினுற்பத்தியைச் சொல்வது எதுவோ அது திருஷ்டிசிருஷ்டிவாதமாம்.

### ந

நவவிதபக்தி—சிரவனம், கீர்த்தனம், ஸ்மரணம், பாதசேவனம், அர்ச்சனம், வந்தனம், தாசபாவம், சகாபாவம், தேகாதிக ளெல்லாவற்றையும் சமர்ப்பித்தலென்னும் ஆத்ம நிவேதனம் இவை நவ (ஒன்பது)வித பக்தியாம்.

நிதித்தியாசனம்—அநாத்மாகார விருத்திகளைத் தடுத்தல் பூர்வகமான, ஆத்மாகார விருத்தியின் பிரவாகத்தினை நிதித்தியாசனமென்பர்.

நித்தியம்—உற்பத்தி நாசமின்றியதனை நித்திய மென்பர்.

நிமித்தகாரணம்—உற்பத்தி மாத்திரத்தின் காரணத்தினை நிமித்த காரண மென்பர்.

நிராபேக்ஷிக வியாபகம்—எந்த வஸ்து எல்லாவற்றையுமபேக்ஷித்து வியாபகமாயிருக்கிறதோ, அதனிடத்துள்ள வியாபகத்துவம் நிராபேக்ஷிகவியாபக மெனப்படும். அது சேதனத்திலுள்ளது.

நிற்குணம்—பிருகிருதி வடிவமாய சம்பந்த வடிவ சத்துவம் ரஜஸ்தமஸ் என்னும் மூன்றையும் குணமென்பர். இவைகளின் சம்பந்தமில்லாததை நிற்குண மென்பர்.

நிற்விகர்ப்பசமாதி—திரிபுடி தோற்றமில்லாத அகண்ட பிரஹ்மாகாரமான அந்தக்கரண விருத்தியின் நிலைமைக்கு நிற்விகர்ப்ப சமாதியென்று பெயர்.

இதுவும், அதன்வதப் பிரஹ்மாகாரமான அந்தக்கரணத்தின் அஞ்ஞாத விருத்தியோடு கூடியதாயின் அது, அத்வைதபாவனரூப நிற்விகர்ப்ப சமாதி யெனவும்; இந்த அப்யாசம் அதிகமாவதினால் பிரஹ்மாகார விருத்தியும் சாந்தமாகி, விருத்தியில்லாத நிற்விகர்ப்ப சமாதியே அத்வைதாவஸ்தானரூப நிற்விகர்ப்ப சமாதி யெனவும் இருவகையாம்.

### ப

பக்தி—பூஜ்ய (பூஜிக்கும்) புத்தியோடுண்டாம் ப்ரீதியை (சிநேகத்தை) பக்தி யென்பர்,



பிரத்தியகபின்னம்—உள்ளே (புத்திக்குள்) வேறு பிரிக்க இயலாது ஒன்றாயிருக்கும் லக்ஷணம் எதுவோ, அது பிரத்திகபின்னமெனப்படும்.

பிரமாணம்—பிரமையின் கரணத்தை பிரமாண மென்பர். அதுவும் பிரத்தியக்ஷம், அநுமானம், உவமானம், சப்தம், அர்த்தாபத்தி, அநுபலப்தி என ஆறாம். பிரமாண ஜன்னிய எதார்த்த ஞானத்தைப் பிரமை எனப்படும்.

பிரஹ்மம்—மாயாப்பிரதிபிம்பவடிவ ஆபாஸமாகிய ஈஸ்வரனுக்கு அதிஷ்டானமாயும், சச்சிதானந்த அத்வய சொரூபமாயும், எல்லாவற்றிலும் அதிக வியாப்கமாயுமுள்ளது எதுவோ, அது பிரஹ்மமாம்.

புரியட்டகம்—சுரோத்திராதி ஐந்து ஞானேந்திரியம், வாக்காதி ஐந்து கர்மேந்திரியம், பிராணாதி பஞ்ச வாயுக்கள், உள்ள மாதி ஐந்து அகக்கரணம், வானாதி ஐம்பூதம், அவித்தை, காமம், கர்மம் இவை எட்டையும் புரியட்டகமென்பர்.

### ம

மனனம்—பேதத்திற்குப் பாதகமும், அபேதத்திற்குச் சாதகமுமான யுக்திகளால் அத்வைதப் பிரஹ்மத்தைச் சிந்தித்தல் மனனமாம்.

மனோநாசம்—பிரபஞ்ச சம்பந்தமில்லாத காரணத்தினாலும், பிரஹ்மாகார விருத்தியின் அநுசந்தானத்தின் முதிர்ச்சியினாலும், விருத்தி சாந்தப்படுவதை மனோநாச மென்பர்.

அதுவும், சொரூப நாசமென்றும், அரூப நாசமென்றும் இருவகையாம்.

சத்துவகுணமாய் மிஞ்சி ரஜஸ் தமஸ் நசித்தல் ஜீவன்முக்தரிடத்திருக்கும் சொரூப நாசமாம்.

அந்தச் சத்துவகுணமும் நசித்தல் அதாவது லிங்கசரீரம் அடங்கும்போது நாசமாதல் எதுவோ அதுவே விதேக முத்தரிடத்திருக்கும் அரூப நாசமாம்,

மஹாவாக்கியம்—பிரஹ்மாத்மாவின் ஏகத்துவத்தை அறிவிக்கும் வேதத்தின் முடிவாகிய வாக்கியம் எதுவோ அதுவே மஹாவாக்கியமென்பர்.

அதுவும் "ருக் எசுர் சாமம் அதர்வணம்" என்ற நான்கு வேதத்தினிடத்தும் முறையே "பிரக்ஞானம் பிரஹ்மம், அகம்பிரஹ்மாஸ்மி, தத்துவமஸி, அயமாத்மா பிரஹ்மம்" என்னும் நான்கு மஹாவாக்கியங்களிருக்கின்றன.

சாமவேதத்திலுள்ள தத்துவமஸி என்னும் வாக்கியம் உபதேச வாக்கியமெனவும், மற்றவை அநுசந்தான வாக்கியமெனவும் அறிஞர் கூறுவர்.

மாயை—ஆவரண விக்ஷேப சக்திகளையுடைய அநாதி பாவ ரூப சத் அசத்து விலக்ஷண அநிர்வசநீயமாயுள்ளது மாயையாம். இதுவே ஈஸ்வரனது காரண சரீரமாம்.

மோக்ஷம்—சகல அநர்த்தமும் நீங்கிப் பரமானந்த மடைதலை மோக்ஷமென்பர்.

## ய

யோகம்—சகல கருவிகளையும் அடக்குதல் யோகமெனப்படும்.

அவை 1 இயமம், 2 நியமம், 3 ஆசனம், 4 பிராணாயாமம், 5 பிரத்தியாகாரம், 6 தாரணை, 7 தியானம், 8 சமாதி என்பனவாம்.

1. அஹிம்ஸை, சத்தியம், திருடாமை, பிரஹ்மசரியம், அபரிக்கிரகம். இவ்வைந்தும் இயம மெனப்படும்.

2. சௌஷம், சந்தோஷம், தவம், ஸ்வாத்யாயம், ஈஸ்வரப்ரணிதானம்; இவ்வைந்தும் நியம மெனப்படும்.

3. ஆசனம் அநேகமுள; அவற்றில் பத்மாசனம், சித்தாசனம் இரண்டும் விசேஷமாம்.

வலது காலை இடது தொடையின்மேரில் மடக்கி வைத்துக்கொண்டு உட்காருதல் பத்மாசனம் எனவும், இடது குதிக்கால் குதத்திற்கு மேலும் வலது குதிக்கால் குய்யத்திற்கு மேலும் வைத்துக்கொண்டு உட்காருதல் சித்தாசன மெனவும் கூறுவர்.



4. மூக்கின் இடது துவாரத்தின் வழியாய் இடையென்னும் நாடியால் வாயுவைப் பூரித்தல் பூரக மெனப்படும்.

மூக்கின் வலது துவாரத்தால் காற்றை மெதுவாக விடுதலை ரேசக மெனப்படும்.

சுழுமுனையால் காற்றை யடக்குதலைக் கும்பக மெனப்படும். இவைகள் மூன்றிற்கும் பிராணாயாம மென்றுபெயர். அதுவும் அகர்ப்பப் பிராணாயாமமெனவும், சகர்ப்பப் பிராணாயாம மெனவும் இருவகைத்தாம்.

பிரணவோச்சாரண மின்றிய பிராணாயாமம் அகர்ப்ப மெனவும், பிரணவோச்சாரணத்தோடு கூடிய பிராணாயாமம் சகர்ப்ப மெனவும் கூறுவர்.

5. விஷயங்களினின்றும் சகல இந்திரியங்களையும் தகைப்பது பிரத்தியாகார மெனப்படும்.

6. அந்தாரியமி(இடையி)ன்றி அந்தக்கரணம்நிலைத்தல் தாரணை எனப்படும்.

7. அந்தராயத்தோடு கூடிய அத்விதீய வஸ்துவினிற்செல்லும் அந்தக் கரணத்தின் பிரவாகத்தைத் தியான மென்பர்.

8. எழுந்த சம்ஸ்காரங்களின் திரஸ்காரமும், அடங்கிய சம்ஸ்காரங்களின் பிரகடமுமுண்டாய் அந்தக்கரணம் ஏகாக்கிரமாய்ப் பரிணமித்தல் சமாதி எனப்படும்.

அதுவும் 1 சப்தாநுவித்தம், 2 சப்தாநநுவித்தம் என இருவகையாம்.

அகம்பிரஹ்மாஸ்மியென்னும் சப்தத்தோடு அநுவித்தம் (கூடியது) சப்தாநுவித்த சமாதியாம்.

அத்தகைய சப்தத்தோடு கூடாதது சப்தாநநுவித்தசமாதியாம்.

இந்த சமாதியும் சவிகர்ப்பம் நிர்விகர்ப்பம் என்னும் பேதத்தாலிருவகையாம்.

சவிகர்ப்ப சமாதி சாதனமாம், நிர்விகர்ப்பசமாதி பலனும், சவிகர்ப்ப சமாதியில் பிரஹ்மரூபமாக த்வைதம் ப்ரதீதி (தோற்றுதல்)

யாதல்; நிர்விகர்ப்ப சமாதியில் திரிபுடியாகிய த்வைதம் ப்ரதீதி யாகாமை பேதமாம்.

## ல

லோபம்—அவசியமாயுள்ள உத்தமமான காரியங்களுக்கு இம்மியளவு கூட அழியக்கூடிய பிரபஞ்சப் பொருளைக் கொடுக்க மாட்டேனென்றுண்டாம் மனோ விருத்திக்கு லோபம் என்று பெயர். இதன் சம்பந்தியான ஆசை கோபம் இரண்டும் சேர்ந்து எம லோகத்திலுள்ள நரகத்தை யடைவதற்கும் ஜன்மத்தை யுண்டுபண் ணுவதற்கும் உயர்ந்த மார்க்கம் (ரஸ்தா) ஆக விருக்கிறது.

## வ

வர்ணம்—பிராஹ்மணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என நான்காம்.

வாசனாக்ஷயம்—பிரபஞ்ச பதார்த்தத்தை நாடி சங்கர்ப்பத்தைச் செய்யாத மனதின் நிலைமையை வாசனாக்ஷய மென்பர்.

விசாரம்—சரீரத்தில் நான் யார், இந்த ஜகத்து எப்படிப்பட் டது, பந்த மோக்ஷம் எத்தன்மைத்து என்பதை விசாரணை செய்தல் விசாரமாம்.

விதேக கைவல்யம்—பிரபஞ்சத்தோற்றமின்றிய பிரஹ்மசொரூ பமான நிலையினை விதேக கைவல்ய மென்பர்.

வியாபகம்—ஜீவேஸ்வரர்கள் முதலிய [1]பஞ்சபேதங்கள் அல் லது, சஜாதியாதி [2]மூன்று பேதங்களின்றியதனை வியாபக மென்பர்.

1. (1) ஜீவேஸ்வர பேதம், (2) ஜீவர்களின் பரஸ்பர பேதம், (3) ஜீவஜடபேதம், (4) ஈஸ்வரஜடபேதம், (5) ஜட ஜடபேதம் இவற்றைப் பஞ்சபேத மென்பர்.

2. (1) சஜாதிய, (2) விஜாதிய, (3) ஸ்வகத மென இப் பேதம் மூன்றாம்.

விருத்தி—இருக்கிற தென்னும் வியவகாரத்துக்கு ஏதுவாகிய அவித்தை (அஞ்ஞானம்) அந்தக்கரணங்களின் ஞானரூபப்பரிணாமமே விருத்தி யெனப்படும்.



விவர்த்தோபாதானம்—அதிஷ்டானத்தினும் குறைந்த சத்தை யுடைய வேற்றுசொரூபமாய விவர்த்த வடிவ காரியத்தின் காரணத் தினை விவர்த்தோபாதான மென்பர்.

விவேகம்—ஆத்மா அநாத்மாவின் பேதத்தை விசாரித்தலை விவேக மென்பர். அதன் ஞானத்தினை விவேக ஞானமென்பர்.

விக்ஷேபம்—ஸ்தூல சூக்ஷ்மப் பிரபஞ்சத்தையும் அதன் ஞான த்தையும் விக்ஷேப மென்பர்.

வைராக்கியம்—விடுதலின் இச்சையினை அல்லது இச்சையின் றிய தன்மையினை வைராக்கிய மெனப்படும்.

வேதங்கள்—ருக், எசுர், சாமம், அதர்வணம் என வேதம் நான்காம்.

அவைகளை 1180 சாகைகளையுடையது, அவற்றில் 108 உபநிஷத் துக்கள் அத்வைதப் பிரஹ்மக்ஞானத்தையும், 423 உபநிஷத்து உபா சனையையும், 649 உபநிஷத்துக்கள் கர்மத்தையும் போதிப்பனவாம். இவைகள் சிருஷ்டியின் ஆதிதோறும் பிரஹ்மாவின் வாக்கினின்றுதிப் பனவாம். அவை அளவின்றி இருந்தபடியால் யாவரும் கணக்கிட யோக்கியமாம்பொருட்டு வியாசாசாரியர் நான்காக வகுத்து ஒழுங்கு படுத்தி வைத்தனர். அவைகள் பூூரவும் ஜீவாத்ம பரமாத்மாவின் ஏகத்துவமாகிய பிரஹ்மத்தை, பரம்பரை நேர் என்றும் சாதனரூப மாய்ப் போதிப்பதில் தாற்பரியமாக வுள்ளதாம்.

வேதாந்தம்—வேதத்தின் அந்தத்தி (முடிவி) லுள்ள வாக்கி யத்தை வேதாந்த மென்று கூறுவர்.

ஸ்மரணை—உற்பூத சம்ஸ்கார மாத்திரத்தாற் றோன்றும் ஞானத்தினை ஸ்மரணை என்பர்.

ஸ்வயம்பிரகாசம்—தனது பிரகாசத்தில் அன்னியப் பிரகாசத் தின் அபேக்ஷையில்லாததாய் எல்லாவற்றையும் பிரகாசிப்பிப்பதனை சொப்பிரகாரமென்பர். இதனையே ஸ்வப்ரகாச மென்றும், ஸ்வயம் பிரகாச மென்றும்கூறுவர்.

ஜிஞ்ஞாசு — ஆத்மாவை அறியும் பொருட்டு விதிப்படி வேதாந்த சாஸ்திரத்தைக் குருமுன்னிலையில் சிரவணாதிகளைச் செய்யத்தலைப்பட்டவன் ஜிஞ்ஞாசு எனப்படுவன்.

ஜீவன்—த்வம் பதத்தின் வச்சியமாயும், அவித்தையில் கூடஸ்தரின் பிரதிபிம்ப வடிவ ஆபாச சொரூபமாயுமிருப்பவன் எவனோ அவனே ஜீவனாம்.

ஜீவன்முக்தி—தேகாதிப்பிரபஞ்சம் தோற்றிக்கொண்டிருக்க பிரஹ்ம சொரூபமாக நிலைத்தலை ஜீவன்முக்தி யென்பர்.

ஜீவாத்மா—ஜீவனுக்கு அதிஷ்டானமாயுள்ள ஆத்மாவை ஜீவாத்மா வென்பர்.

ஜீவன்முக்தியின் விலக்ஷணாநந்தம்—நிராவரண பரிபூரண விருத்தியோடு கூடிய ஆநந்தத்தினை ஜீவன் முக்தியின் விலக்ஷணாநந்தமென்பர்.

59001

O23:332 wD788
N34

உ

ஓம் தத் ஸத்.

ஜகத் குரவே நம:



# உலாகாசாரியர் உற்சவம்.

இவ்வருஷம் ஸ்ரீ சங்கர ஜயந்தி உற்சவமானது, பட்டூரில் இந்நூலாசிரியராய எனது குருவால் ஸ்தாபனஞ் செய்யப்பெற்றுள்ள ஆதி சங்கரர் ஆலயத்தில் யுவஹு சித்திரைமீ 24உ நடைபெறுகிறது.

குருபக்தி, தத்துவக்ஞானம், மோக்ஷ முதலிய [illegible]தியை முன்னிட்டு நாளது யுவஹு ஆடிமீ 1உ யன்றும், பிந்திய வருஷங்களிலும் வருகிற வேத சூத்திர கர்த்தாவான ஸ்ரீவியாசாசாரிய ஸ்வாமிகளின் பூஜையும்; பிந்திய ஒவ்வொரு வருஷம் சித்திரை மாதம் பூர்வ பக்ஷ பஞ்சமி திதியில் வரும் ஸ்ரீசங்கர ஜயந்தி உற்சவமும், எனது குருவின் கட்டளைப்படி, ஐவத்தாம்பட்டியில் என்னால் ஸ்தாபிக்கப்பெற்றிருக்கும் சனாதன தர்ம ஸ்ரீசங்கரவிலாஸ ஸ்ரீஜகத்குரு ஆதிசங்கர பகவத் பாதாச்சார்ய ஸ்வாமிகளின் ஆலயத்தில் வேதாந்த உபந்யாசத்தோடு நடைபெறும்.

பேதமின்றிய

ஸ்ரீ சங்கரவிலாஸ்,
ஐவத்தாம்பட்டி. } சச்சிதாநந்தம்

என்ற வீரணன்.

மீனலோசனி பிரஸ், தெற்குக்கோபுரவாசல் தெரு, மதுரை:—35.